பக்கங்கள்: முப்பத்துஇரண்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 27 வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 01 சனிக்கிழமை (17.12.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 021



யாழ். இந்து மாணவனுக்கு வெண்கலம் 10



யங்ஹென்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி 28



அசத்தும் ஆபிரிக்கா 29

# இராணுவம் குற்றமற்றது

## நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை திட்டவட்டம்

கொழும்பு, டிசெம்பர் 17

இறுதிப் போரின் போது இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு இராணுவத்தின் மீது குற்றம் சுமத்த முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறது, ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழு. படையினர் சிலரால் சில சம்பவங்கள் இடம்பெற்றிருக்கக் கூடும் என்றாலும் அதற்காக ஒட்டுமொத்த இராணுவத்தையும் குற்றச்சாட்டுக்கு உள்ளாக்க முடியாது என்று தனது 400 பக்க அறிக்கையில் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் அறிக்கை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அறிக்கையைச் சபையில் சமர்ப்பித்து உரையாற்றினார்.

அறிக்கையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது தெளிவான பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. அதேவேளை, சர்வதேச சமூகத்தால் இலங்கைப் படையினருக்கு எதிராக எழுப்பப்படும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கும் விதத்தில் அறிக்கையின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளின் சுருக்கம் அமைந்துள்ளது.

குறிப்பாக ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் படையினர் மேற்கொண்டனர் என்று நம்பக்கூடிய குற்றச்சாட்டுக்களாகக் குறிப்பிடப்பட்ட மருத்துவமனைகள் மீதான ஷெல் தாக்குதல், பாதுகாப்பு வலயங்கள் மீதான ஷெல் தாக்குதல், உணவு மற்றும் மருந்துப் பொருள்களைப் போதியளவில் அனுப்பாமை, பொதுமக்களுக்கு அதிக உயிரிழப்புக்களை ஏற்படுத்தியமை, இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்கள் காணாமற்போனமை, சரணடைந்தவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்களுக்கு அறிக்கையில் விரிவாகப் பதிலளிக்கப்பட்டுள்ளது.

### பொதுமக்கள் உயிரிழப்பு

இறுதிப் போரில் பொதுமக்களின் உயிர்கள் கணிசமான அளவில் இழக்கப்பட்டன என்பதை அறிக்கை பக் 31

## இறுதிப்போரில் குற்றமிழைத்தோருக்குத் தண்டனை; உண்மைத் தன்மை அறிய பொறிமுறை உருவாக்கம்

### ஆணைக்குழு அறிக்கையை சபையில் சமர்ப்பித்து நிமல் சிறிபால தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.17

இறுதிக்கட்டப் போரின்போது குற்றமிழைக்கப்பட்டமை நிரூபிக்கப்பட்டால், அச்சம்பவங்கள் குறித்த உண்மைத் தன்மையை திரட்டுவதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் பொறிமுறை ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். சட்டத்தை மீறியதான சம்பவங்கள் இடம்பெற்றமைக்கு சாட்சிகள் இருக்கும் பட்சத்தில் அவை குறித்து நன்கு விசாரித்து குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

- இவ்வாறு நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

மேலும், தவறிழைக்கப்பட்டமை நிரூபிக்கப்பட்டால் குற்றவாளிக பக் 04

## காலத்தை இழுத்தடிக்காது அறிக்கை சமர்ப்பித்தோம்

### முதலில் சபை விவாதிக்கட்டும் என்கிறார் பஸில்

கொழும்பு, டிசெ.17

காலத்தை இழுத்தடிக்காமல் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை உரியநேரத்தில் அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. இனி நாடாளுமன்றம் அதனை விவாதிக்கும். ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து ஆராய்ந்து மக்கள் பிரதிநிதிகள் சபையில் உரிய தீர்மானத்தை எடுப்பார்கள். அதேபோல் ஐக்கிய நாடுகள் சபையும் இதனை கவனத்திற்கொள்ள முடியும்.- இவ்வாறு நேற்று 'உதயனு'க்குக் கருத்து வெளியிட்டார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான பஸில் ராஜபக்ஷ. நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை அரசு சபையில் சமர்ப்பித்திருக்கும் நிலையில், அந்த அறிக்கை எப்போது பகிரங்கப்படுத்தப்படும் என்று கேட்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அறிக்கையை நாம் சமர்ப்பித்திருக்கிறோம். இதுபற்றி சபையில் முதலில் விவாதிக்கட்டும். அரசியல் கட்சிகள் ஜனநாயக ரீதியில் தமது கருத்துகளைச் சொல்லட்டும். பின்னர் இதிலுள்ள விடயங்களை எப்படி முன்னெடுப்பது என்பதுபற்றி அரசு தீர்மானிக்கும். எந்தவகையான சிபாரிசுகளை முன்னெடுக்க பக் 31

## கூட்டமைப்பு அறிக்கை விடும்

கொழும்பு, டிசெ. 17

நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழுவின் அறிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ''அடிப்படையில் ஏற்றுக் கொள்ளவில்லை'' என்று கூறி நிராகரித்துள்ளது.

அறிக்கை குறித்த தமது நிலைப்பாட்டை விளக்கி ஒரு விரிவான அறிக்கையை கூட்டமைப்பு விடும் என்றும் அதன் பேச்சாளர், நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

குற்றம் எதுவும் புரியவில்லை என்று கூறி இராணுவத்தைப் பாதுகாக்கும் வகையிலேயே அறிக்கை இருப்பதாக அவர் தெரிவித்தார். அந்த அறிக்கையில், தெரிவிக்கப்பட்டுள்ள அரசியல் தீர்வுக்கான பரிந்துரைகள் அர்த்தமற்றவை, பொருளற்றவை, அது குறித்து விரிவாக ஆய்ந்தறியாமல் தெரிவிக்கப்பட்டமை என்று மேலும் அவர் கூறி உள்ளார். (உ)

## குடாநாட்டில் காணாமற்போன இருவர் குறித்து பக்கச்சார்பின்றி விசாரணை நடத்த வேண்டும்

### சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்து

கொழும்பு, டிசெ.17

வடக்கில் - யாழ். குடாநாட்டில் காணாமல்போன மக்கள் போராட்டக் கழகத்தின் செயற்பாட்டாளர்களைத் தேடியறியும் பொருட்டு பக்கச்சார்பற்ற விசாரணைகளை உடன் நடத்துமாறு சர்வதேச மன்னிப்புச்சபை இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அரசுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ள சர்வதேச மன்னிப்புச்சபை, இலங்கையிலுள்ள இராஜதந்திரிகளுக்கும், ஐ.நா.சபை அலுவலகத்துக்கும் கடிதத்தின் பிரதிகளை அனுப்பிவைத்துள்ளது.

நாட்டில் மனித உரிமைகளைப் பேணும் பொருட்டு மக்கள் போராட்டக்கழகம் செயற்படுகின்றது எனச் சுட்டிக்காட்டியுள்ள மன்னிப்புச் சபை, அந்த அமைப்புக்கு தனது நடவடிக்கைகளை சுதந்திரமாக முன்னெடுப்பதற்கு வழிசமைத்துக் கொடுக்குமாறு அரசிடம் கோரியுள்ளது.

அதேவேளை, காணாமற்போனதா பக் 31

## தமிழர் காணிகள் எனக் கூறுவது புலிகளின் பிரச்சினை போன்றது!

### அமைச்சர் ஜனக பண்டார தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.17

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாடு முழுவதிலும் உள்ள காணிப்பிரச்சினைகள் 10 வருடங்களுக்குள் முற்றாகத் தீர்த்துவைக்கப்படும் என்றும், வடக்கு, கிழக்கு காணிப் பிரச்சினையை இனவாத ரீதியில் நாம் நோக்கவில்லை என்றும் அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

வரவு - செலவுத்திட்டத்தின் காணி மற்றும் மீள்குடியேற்ற அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

வடக்கு, கிழக்கு காணிப் பிரச்சினைகளை இனவாத ரீதியாகப் பார்க்கமுடியாது. தமிழ் உறுபினர்கள், 'தமிழர் காணிகள்' என்று குறிப்பிட்டுப் பேசுகின்றனர். தமிழர்களின் காணிகள் என்றோ, சிங்களவர்களின் காணிகள் என்றோ அல்லது முஸ்லிம்களின் காணிகள் என்றோ அங்கில்லை. அவை இலங்கையர்களின் காணிகள்.

இப்படித்தான் இந்தப் பிரச்சினையைப் பார்க்கவேண்டும்.

இனவாதரீதியாக பக் 32

## படையினர் தொடர்ந்து அனுமதி மறுத்து வருவதால் வடக்கில் 2 லட்சம் பேர் மீள்குடியமர முடியாத நிலை

கொழும்பு, டிசெ.17

இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளுடன் சேர்த்து இரண்டு இலட்சம் அகதிகள் வடக்கில் இன்னும் மீள்குடியேற்றப்பட வேண்டியுள்ளனர் என்றும் படையினர் அனுமதி மறுப்பதாலேயே இவர்களால் மீள்குடியேற முடியாமல் உள்ளது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

வரவு-செலவுத்திட்டத்தின் காணி மற்றும் மீள்குடியேற்ற அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளுடன் சேர்த்து இரண்டு இலட்சம் அகதிகள் மீள்குடியேற வேண்டிய நிலையில் உள்ளனர். இராணுவத்தினர் வடக்கில் இந்த மக்களின் நிலங்களை ஆக்கிரமித்துக்கொண்டிருப்பதால்தான் இந்த இரண்டு இலட்சம் அகதிகளால் மீள்குடியேற முடியாமல் உள்ளது.

வலிகாமம் வடக்கில் மக்களை மீள்குடியமர்த்த அனுமதிக்குமாறு 2003முதல் நீதிமன்றம் தீர்ப்புகளை வழங்கிவருகின்றது. இருந்தும் மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்படுவதில்லை.

அந்தப் பகுதியில் விகாரை அமைத்து, வீடுகளைக் கட்டி சிங்களவர்கள் வந்து தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே விகாரைகள் அமைக்கப்பட்டு, அழிக்கப்பட்ட இடங்களில் விகாரைகள் அமைத்தால் பரவாயில்லை. ஆனால், காலம்காலமாக வாழ்ந்த மக்களின் நிலங்களைப் பிடித்து விகாரைகள் பக் 04

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்
செய்தி : 021-5678844
விளம்பரம் : 021-5679731
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com

## இன்றைய வானிலை

28°C

| நகரம் | வானிலை | பகல் | இரவு | காற்று |
|---|---|---|---|---|
| யாழ் | | 28°c | 23°c | |
| மன் | | 29°c | 25°c | |
| வவு | | 30°c | 23°c | |
| முல் | | 28°c | 26°c | |
| கிளி | | 28°c | 26°c | |

அனைத்து மாவட்டங்களிலும் வானிலை மேக மூட்டத்துடன் காணப்படும் சாத்தியமுள்ளது.

# கட்டுநாயக்கா சோதனையில் கைப்பற்றப்படும் ஹெரோயின் கொழும்புக்கு வரும்போது குரக்கன் மாவாகி விடுகிறதே!

சட்டவிரோத கடத்தல்காரர்களைக் கைது செய்யும் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்படுகின்றனர். சட்டவிரோத போதைப் பொருள் கடத்தல்காரர்களின் செல்வாக்கு உயர் மட்டம் வரை கையோங்கியுள்ளது என நேற்று நாடாளுமன்றத்தில் எதிரணியினரால் குற்றம் சாட்டப்பட்டது. நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போதே இந்தக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது. இவ்வேளையில் ஐ.தே.க. உறுப்பினர் தயாசிறி ஜயசேகர பிரதமரிடம் கேள்வி ஒன்றை முன்வைத்தார்.

கடந்த 10 வருடங்களில் சட்டவிரோதமாக இலங்கைக்குள் கடத்தப்பட்ட, தடைசெய்யப்பட்ட போதைப் பொருள்களின் தொகை எவ்வளவு? கடத்தலில் ஈடுபட்டவர்கள் எத்தனை பேர்? எத்தனை பேருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டது இதன் மூலம் அறவிடப்பட்ட அபராதத் தொகை எவ்வளவு இதனை இந்தச் சபையில் சமர்ப்பிக்க முடியுமா? என்று தயாசிறி கேள்வி எழுப்பினார்.

இந்தக் கேள்விக்கு பிரதமரின் சார்பில் ஆளும் கட்சிக் கொறடா தினேஸ் குணவர்த்தன பதில் அளித்தார்.

கடந்த பத்து வருடங்களில் 287.3 கிலோ ஹெரோயின் 6.4 ஹசீஸ், 10.5 கிலோ போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தப் போதைப் பொருள்கள் ஈரான், பாகிஸ்தான், இந்தியா, நேபாளம், பிலிப்பைன்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து கடத்தி வரப்பட்டுள்ளன. போதைப் பொருள் கடத்தல்காரர்களுக்கு மரண தண்டனை அல்லது ஆயுள்கால சிறைத்தண்டனை விதிக்கப்படுவதால் தண்டப்பணமாக அறவிடப்படும் தொகை மிகவும் குறைவானதே எனவும் அமைச்சர் கூறினார்.

### நேர்மையான அதிகாரிகள் இடமாற்றம்

இந்தச் சந்தர்ப்பத்தில் தயாசிறிஜயசேகர ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டினார். சபாநாயகர் அவர்களே போதைப் பொருள் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரும் உத்தியோகத்தர்களும் பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் நேர்மையாகக் கடமையாற்றுகின்றனர். ஆனால் இந்த அதிகாரிகள் 24 மணி நேரத்தில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இது ஏன் என்று கேட்டார் தயாசிறி ஜயசேகர. இந்தக் குற்றச்சாட்டை மறுத்தனர் அமைச்சர்கள்.

இன்னும் ஒரு இடைக் கேள்வியை எழுப்பினார் புத்திக்க பத்திரன.

ஐயா இங்கு மற்றும் ஒரு விடயமும் அம்பலத்துக்கு வந்துள்ளது. அதாவது கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைப்பற்றப்படும் போதைப் பொருள் மிகவும் பாதுகாப்பாக கொழும்புக்கு கொண்டு வரப்படுகின்றது. ஆனால் இது எப்படிக் குரக்கன் மாவாக மாறி விடுகிறது. இதன் மர்மம் என்ன? என்று கேட்டார்.

### உங்கள் வீட்டுக்கு புட்டு அவிக்கவாக இருக்கும்

இப்படியான ஒரு கேள்வியை எதிர்பார்க்காத அமைச்சர் தினேஷ் ஒரு வேளை உங்கள் வீட்டுக்கு புட்டும் இடியப்பமும் தயாரிக்க கொண்டு வரப்பட்டதாக இருக்கலாம். என்று கூறி நேரடியாகப் பதில் கூறாமல் தட்டிக் கழித்து விட்டார்.

### உண்மையை ஒப்புக் கொண்ட சுகாதார அமைச்சர்

ஜே.வி.பி. உறுப்பினரான அநுரகுமார திஸாநாயக்க டெங்கு நோயினால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள், ஏற்படப் போகும் அபாயங்களையும் சுட்டிக் காட்டினார்.




இந்த நிலைமையை ஒப்புக் கொண்ட சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அதாவது டெங்கு ஒழிப்பு தொடர்பான நடவடிக்கைகள் வெற்றியளிக்கவில்லை பக்ரீரியாவினால் மட்டும் டெங்கு நோயை ஒழித்துவிட முடியாது நாமும் நமது சுற்றாடலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். சுத்தம் சுகம் தரும் எனறு கூறி முடித்தார் சுகாதார அமைச்சர்.

### பெண் பிள்ளைகளின் முன் சண்டித்தனம் காட்டும் பழைய மாணவர்கள்

ஆளும் கட்சி உறுப்பினரான ரஞ்சித் டி. சொய்சா உயர் கல்வி அமைச்சரிடம் உயர்கல்விக்காக வெளிநாடு செல்லும் மாணவர்கள் தெரிவு செய்வது தொடர்பாக ஒரு கேள்வியை எழுப்பினார்.

சகல மாணவர்களும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதியும் தராதரமும் உடையவர்களுக்கு வெளிநாடு செல்வதற்கான புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன. இதில் எந்தவிதமான பாகுபாடும் இல்லை என்றார் அமைச்சர்.

### பகிடி வதைக்கு முற்றுப்புள்ளி

அமைச்சர் அவர்களே பகிடி வதை என்ற பேரில் பல்கலைக்கழகத்திற்கு புதிதாக வரும் மாணவர்கள் பழைய மாணவர்களினால் பெரிதும் துன்புறுத்தப்படுகின்றனர். இவர்கள் உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றார் ரஞ்சித் சொய்சா.

நீங்கள் கூறுவதும் சரிதான். புதிதாக இளம்பெண்களை கண்டவுடன் பழைய மாணவர்களுக்கு 'குஷி' ஏற்பட்டு விடுகிறது. நட்பை பெறுவதற்குப் பலாத்காரத்தைப் பயன்படுத்துகின்றனர். நாமும் முன்பு செய்ததுதானே. இப்போது எல்லை மீறி விட்டது. இதனால் நாம் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டதன் பயனாக பல்கலைக்கழகத்தில் பகிடிவதைகள் பெருமளவு நிறுத்தப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டில் பகிடிவதை முற்றாக ஒழிக்கப்படும் என்று பதில் அளித்தார் உயர் கல்வி அமைச்சர் திஸாநாயக்க.

### இராணுவ ஆக்கிரமிப்பே மீள்குடியேற்றத்துக்கு தடை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா அரசு மேற்கொள்ளும் மீள்குடியேற்றம் தொடர்பாக விமர்சித்தார்.

மீள்குடியேற்றம் பேச்சளவில் மட்டும் தான். கூறப்பட்டவை எவையும் நடைமுறையில் இல்லை.

தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகளும் வீடுகளும் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. நீதிமன்றத் தீர்ப்பைக் கூட மதிப்பதில்லை இதனால் தான் அரசின் மீள்குடியேற்றம் வெற்றி பெறவில்லை என்றும் கூறினார் மாவை.

### யாழ். மக்களுக்கு வெளிநாட்டுப் பணம் நிறையவே இருக்கிறது

யாழ் மக்களை நல்ல வழியில் இட்டுச்செல்ல அங்குள்ள அரசியல்வாதிகள் முனைவதில்லை. இவர்கள் இந்தச் சபையில் அரசின் மீது குற்றம் சாட்டிப் பேசுவதோடு சரி. மக்களைச் சந்திப்பது இல்லை. யாழ் மக்களுக்கு நிறையவே வெளிநாட்டுப் பணம் வந்து போகின்றது அங்குள்ள இளைஞர்களை சரியான வழியில் இட்டுச்செல்ல எவரும் முன் வருவதில்லை வடபகுதி அரசியல்வாதிகள் தம்மக்கள் மீது அக்கறையுடன் செயல்பட்டால் நன்மையளிக்கும் என்றார் புனர்வாழ்வு மீள்குடியேற்ற பிரதியமைச்சர் முரளிதரன்.

### முரளிதரனுக்கு மூன்று பொறுப்புக்கள்

நுவரெலியா மாவட்ட யூ.என்.பி உறுப்பினர் வி. இராதாகிருஷ்ணன் பிரதி அமைச்சர் முரளிதரனை கிண்டலாகவே சாடினார். பிரதி அமைச்சர் முரளிதரனிடம் மூன்று பொறுப்புக்கள் இருக்கின்றன.

அதாவது யுத்தத்தை ஆரம்பித்தவரும் அவர்தான், யுத்தத்தை முடித்தவரும் அவர்தான், இப்போது மீள்குடியேற்றுவதும் அவர்தான் இதனையாவது சிறப்புடன் செய்ய வேண்டும் என்றார் இராதாகிருஷ்ணன்.

அதேவேளை மலையக மக்களுக்கு தனி வீடமைக்க ஏழு பேர்ச் காணி வழங்கப்படும் என்ற திட்டத்தை மறைந்த அமைச்சர் சந்திரசேகரன் ஆரம்பித்து நடைமுறைப்படுத்தினார்.

ஆனால் இதுவரை கொடுக்கப்படாமல் இருக்கும் காணியும் உறுதியும் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார் அவர்.

### மட்டக்களப்பில் 35 ஆயிரம் ஏக்கர் காணி அபகரிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் 35 ஆயிரம் ஏக்கர் காணி அரச படையினரால் அபகரிக்கப்பட்டுள்ளன.

பெரும்பான்மையான காணிகள் படையினரின் பாவனைக்கும் ஏனைய காணிகள் சிங்களவர்களின் குடியேற்றத்திற்காகவும் பயன்படுத்துப்பட்டுள்ளன. இவை மீண்டும் அந்த காணிகளின் உரிமையாளர்களிடமே ஒப்படைக்கப்படவேண்டும் என்றார் அரியநேத்திரன்.

### பட்டப்பகலில்கூட பெண்கள் செல்ல முடியவில்லை

இந்த சபையில் ஒரு உறுப்பினர் பேசும் போது நள்ளிரவில் ஒரு பெண் தனிமையில் செல்லும் நிலை ஏற்பட்டால் அதுதான் சுதந்திரம் என்றார். ஆனால் எங்களுடைய பிரதேசத்தில் பட்டப்பகலில்கூட ஒரு பெண் தனியாக செல்லமுடியாத நிலை. கடமை முடிந்து மோட்டார் சைக்கிளில் சென்ற இளம் ஆசிரியை கொலை செய்யப்பட்டார். தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பே கிடையாது என்றார் மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினர் அரியநேத்திரன்.

### எங்கள் சொந்த மண்ணில் வாழ விடுங்கள்

இந்த விவாதத்தில் யாழ். மாவட்ட யூ.என்.பி. உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் நேரடியாக அரசுக்கே சவால் விட்டார்.

ஐயா மீள்குடியேற்றம், மறுவாழ்வு என்று 'பம்மாத்துக்' காட்ட வேண்டாம். நீங்கள் எங்களுக்கு எதையுமே தரவும் வேண்டாம் செய்யவும் வேண்டாம். எங்களை எங்களின் சொந்தக் காணிகளில் போய் குடியேற அனுமதியுங்கள். அது போதும் தொடர்ந்தும் அகதிகளாக வாழவும் விரும்பவில்லை.

இதை இந்த அமைச்சரும் அரச தரப்பினரும் செய்வார்களா? என்றும் விஜயகலா சவால்விட்டார்.

# தேசிய மரபுரிமைகள் அமைச்சின் குழு இன்று யாழ்.வருகை

தேசிய மரபுரிமைகள் அமைச்சின் உயர் மட்டக்குழு இன்று காலை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளதாக தொல்லியல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. யாழ்.மாவட்டத்தில் உள்ள தொல்லியல் சின்னங்கள் தொல்லியல் மையங்களை பார்வையிட தேசிய மரபுரிமைகள் அமைச்சின் உயர்மட்டக்குழு இன்று காலை யாழ்.வரவுள்ளது.

காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் கோட்டைக்கு வருகை தரவுள்ள இந்தக்குழு கோட்டையில் இடம்பெற்றுவரும் புனரமைப்புப்பணிகளையும் பார்வையிடவுள்ளது. தொடர்ந்து கீரிமலைப்பகுதி, அண்மையில் தொல்லியல் ஆய்வு நடத்தப்பட்ட கந்தரோடைப் பகுதி, யாழ்ப்பாண தொல்பொருள் காட்சியகம் மற்றும் தொல்லியல் சின்னங்கள் நிறைந்துள்ள பகுதிகளுக்கும் குறித்த அமைச்சை சேர்ந்த 50 பேர் அடங்கிய குழுவினர் விஜயம் செய்யவுள்ளனர்.(ஒ-319)

## நிகழ்வுகள் இன்று

### ஆண்டு நிறைவு விழா

திருநெல்வேலி சிமாட் கிட்ஸ் மாதிரி முன்பள்ளி பாடசாலையின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழாவும் ஆசிரியர் தினவிழாவும் காலை 9 மணிக்கு பாடசாலையில் இடம் பெறவுள்ளது. (ம-313)

### நூல் அறிமுகம்

நந்தினி சேவியரின் ''நெல்லிமரப் பள்ளிக்கூடம்'' எனும் சிறுகதைத் தொகுதி நூல் அறிமுகம் பிற்பகல் 3 மணிக்கு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் பி.கிருஷ்ணானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-313)

### ஒன்றுகூடல்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் ஊழியர் நலன்புரி சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் முற்பகல் 11 மணிக்கு வைத்தியசாலையின் அத்தியட்சகர் வைத்தியர் வி.ஜெயராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கலந்துகொள்வார். (ம-313)

### ஜெயந்தி விழா

அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் 159ஆவது ஜெயந்தி விழா காலை 9 மணிக்கு உரும்பிராய் சந்தி மருதனார்மடம் வீதி, இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஜெயந்தி விழாப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

(ம-313)

# ஆயுதக் குழுக்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை வலியுறுத்து

**இடைக்கால சிபாரிசுகளை உடனடியாக நடைமுறைப்படுத்தியிருந்தால் 'உதயன்' ஆசிரியர் மீதான தாக்குதலைத் தடுத்திருக்கலாம் எனவும் தெரிவிப்பு**

கொழும்பு, டிசெ.17

சட்டவிரோதமான ஆயுதக் குழுக்களுக்கு எதிராகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளுக்கு போதியளவு ஆதாரங்கள் இருந்தால் அவர்களுக்கு எதிராகக் குற்றவியல் சட்டத்தின்கீழ் வழக்குத் தொடர வேண்டும் என்று ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் இடைக்கால சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், சமீபத்தில் 'உதயன்' பத்திரிகையின் செய்தி ஆசிரியருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் போன்ற பாரதூரமான விளைவுகளைத் தடுத்திருக்கலாம் என்றும் குறிப்பிடுகின்றது.

இதுகுறித்து அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு:-

சட்டவிரோத ஆயுதக்குழுக்களின் நடவடிக்கைகள், குறிப்பாக மீளாய்வுக் காலப்பகுதியில் நடந்துகொண்ட விதம் குறித்து ஆணைக்குழு மிகவும் விசனமடைந்துள்ளது.

ஆணைக்குழு பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு மேற்கொண்ட வெளியக விஜயங்களின்போது பலரும் பலதரப்பட்ட தகவல்களை முன்வைத்தனர்.

இப்பிரதேசங்களில் ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகள் பொதுமக்களிடையே பீதியை ஏற்படுத்தியது என்பதனை எமக்குத் தெரிவிக்கப்பட்ட கருத்துகளிலிருந்து உணர்ந்து கொண்டோம்.

இந்தக் குழுக்களின் சட்டவிரோதமான நடவடிக்கைகள் பொதுமக்களின் அடிப்படை உரிமையான வாழ்வதற்கான உரிமையைப் பெரும் பாதிப்புக்குள்ளாக்கியிருக்கிறது.

அதற்கு ஆதாரமாக பல்வேறு கடத்தல் சம்பவங்கள், சட்டவிரோதமாகத் தடுத்துவைத்தல், பணயப்பணம் பெற்றுக் கொள்ளல் ஆகிய தகவல்கள் கிடைத்துள்ளன. இவ்விதம் கடத்தப்பட்டவர்கள் எங்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது குறித்து இதுவரையில் எவ்விதத் தகவலும் கிடைக்கவில்லை. அதேவேளை, சிலரின் சடலங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்தக் குற்றச் செயல்கள் மேற்கொள்ளப்பட்டன என்பது ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டால் இவை மக்களின் அடிப்படைச் சுதந்திரம் மற்றும் அடிப்படை உரிமைகளை மீறிய குற்றச்செயலாகும்.

இந்தச் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் இக்குழுக்களை நிராயுத பாணிகளாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இல்லையேல் இவர்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் நல்லிணக்கச் செயற்பாடுகளுக்குப் படுமோசமான தடையாக இருக்கலாம்.

சில நடைமுறைகளை எடுத்திருப்பதாக இந்த ஆணைக்குழு அறிவதாகக்கூறும் அதே வேளையில், இவர்களுக்கு எதிராக முழுமையான நடவடிக்கை எடுக்கப்படாமை குறித்தும் கவலைகொண்டுள்ளது.

இவை குறித்து விசாரணை நடத்துவதற்குக் காலதாமதம் ஏற்பட்டாலும் முழுமையான நடவடிக்கை எடுப்பது அவசியமாகும் என்று அதில் குறிப்பிடப்பிட்டுள்ளது.

# புதிய போதைப்பொருள் கடந்த வருடம் முதல் தடவையாக கடத்திவரப்பட்டது

கொழும்பு, டிசெ. 17

மெத்தபித்தமைன் எனும் புதிய வகைப் போதைப்பொருள் கடந்த வருடம் முதல் தடவையாக இலங்கைக்கு கடத்திவரப்பட்டிருந்தது என்று நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவிக்கப்பட்டது. இங்கு பாவனையில் உள்ள ஹெரோயின், ஹஷீஸ், .கொகேய்ன் ஆகியவற்றுக்கு மேலதிகமாக இந்தப் புதிய போதைப் பொருள் தருவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் 26 கிலோ மெத்தபித்தமைன் போதைப் பொருள் இலங்கை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டப்பட்டதாகவும் நாடாளுமன்றில் தெரிவிக்கப்பட்டது.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அமைச்சர் தினேஷ் குணவர்தன இவ்விபரங்களை சபையில் சமர்ப்பித்தார்.


''கடந்த 10 வருடகாலத்தில் 287 கிலோ கிராம் ஹெரோயின், 6.252 கிலோ கிராம் ஹஷீஸ் மற்றும் 16 கிலோ கிராம் கொகேய்ன் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. கடந்த வருடம் மட்டும் 116.5 கிலோகிராம்- ஹெரோயினும் இவ்வருடத்தில் நவம்பர் மாதம் வரை 4.8 கிலோகிராம் ஹெரேயினும் கைப்பற்றப்பட்டுள்ளன'' - என்றார் அமைச்சர்.

மெத்தபித்தமைன் போதைப் பொருள் இலங்கைக்கு எவ்வாறு கடத்திவரப்பட்டது என தயாசிறி ஜயசேகர இடைக் கேள்வி எழுப்பினார். ''இது இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமாக மாற்றும் அரசின் திட்டத்தின் ஓர் அம்சமா'' என்றார் அவர்.

அதற்கு, ''இது 1977ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டிறந்த சந்தைப் பொருளாதாரத்தின் ஒரு விளைவு'' என அமைச்ச் பதிலளித்தார். உடனே, ''அந்த ஆட்சி 1994ஆம் ஆண்டு முடிவுக்கு வந்துவிட்டது. எனவே தவறைத் திருத்திக் கொள்வதற்கு ஏராளமான கால அவகாசம் இருந்தது'' என்று வாயாடினார் தயாசிறி.

(உ)

# பொன்சேகாவின் மேன்முறையீடு நிராகரிப்பு



கொழும்பு, டிசெ.17

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு இராணுவ நீதிமன்றம் வழங்கியிருந்த தீர்ப்பை ஏற்றுக் கொள்வதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இரண்டாம் இராணுவ நீதிமன்றினால் சரத் பொன்சேகாவிற்கு இரண்டரை ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இந்தத் தண்டனையை அனுமதிப்பாக மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

எரிக் பஸ்நாயக்க, ஏ.டபிள்யு.ஏ. சலாம் மற்றும் உபாலி அபேரட்ன ஆகிய நீதவான்களினால் இந்த மனு விசாரணை செய்யப்பட்டது.

இராணுவ நீதிமன்றின் தீர்ப்பு சரியானதே என மூன்று நீதவான்களும் ஏகமனதாகத் தீர்ப்பளித்துள்ளனர்.

குற்றச்சாட்டுக்களை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு மனுதாரர் தவறியுள்ளதாகவும் இதனால் மனுதாரர் கோரியுள்ள நிவாரணங்களை வழங்க முடியாது எனவும் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

தண்டனையை நீக்குமாறு கோரி சரத் பொன்சேகா மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு தாக்கல் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**இந்தத் தீர்ப்பினை எதிர்பார்த்தோம்**

**- அபர்ணா பொன்சேகா**

இந்தத் தீர்ப்பினை எதிர்பார்த்தோம் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் மகள் அபர்ணா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நீதிக்கும் நேர்மைக்கும் இடமில்லை. இவ்வாறான ஓர் நிலைமையில் இலங்கையில் நியாயத்தை எதிர்பார்க்க முடியாது.

எனது தந்தைக்கு ஏற்பட்ட நிலைமை உங்களது தந்தைக்கும் நேர்ந்தால் என்னவாகும் என நினைத்துப் பார்க்கவும்.

அனைவரும் ஒன்றிணைந்து எனது தந்தையை விடுதலை செய்ய முயற்சிப்போம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சரத் பொன்சேகாவினால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்தனைத் தொடர்ந்து அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

# 58 தமிழர்களை நேற்று நாடு கடத்தியது பிரிட்டன்

**விமானநிலையத்தில் அவர்கள் மீது விசாரணை**

கொழும்பு, டிசெ. 17

எதிர்ப்புகள், போராட்டங்களுக்கு மத்தியிலும் லண்டனில் இருந்து 55 தமிழர்கள் நேற்று இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டனர். காலையில் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த இவர்களை புலனாய்வுப் பிரிவினர் விசாரணை செய்தனர்.

**நாடுகடத்தல்**

பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கேட்டவர்களில் 120 பேரின் கோரிக்கைகள் அந்த நாட்டு அரசால் நிராகரிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து அவர்களை நாடு கடத்த அரசு உத்தரவிட்டது.

இவர்களின் நாடு கடத்தலுக்கு எதிராக 'இனப்படு கொலைக்கு எதிரான தமிழர்கள்' அமைப்பு குயின் பெஞ்ச் நிர்வாக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

நாடு கடத்தப்படும் ஒவ்வொருவரினதும் விண்ணப்பங்கள் தனித்தனியே பரிசீலிக்கப்பட்ட பின்னரே முடிவுகள் எடுக்கப்பட்டன என்பதால், அரசின் கொள்கை ரீதியான முடிவாக இதனைக் கொள்ள முடியாது என்று கூறிய நீதிமன்றம் மனுவைத் தள்ளுபடி செய்தது.

**போராட்டம்**

நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து லண்டனில் உள்ள ஹார்மெண்ட் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 120 பேரையும் நாடு கடத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர்.

இதனை அறிந்த 'நாடு கடத்தலை நிறுத்து' என்ற அமைப்பினைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிறையின் முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர். நாடு கடத்தப்படுவோரை விமான நிலையத்துக்கு ஏற்றிச் சென்ற பஸ் சிறையில் இருந்து வெளியே செல்ல முடியாமல் மறியலிலும் ஈடுபட்டனர்.

எனினும் போராட்டக்காரர்களுக்கு போக்குக் காட்டிவிட்டு 55 பேருடன் வேறொரு பஸ் விமான நிலையத்துக்குப் புறப்பட்டுச் சென்றது. அங்கு, பிரிட்டிஷ் எல்லை முகவர் நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட விமானத்தில் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

**விசாரணை**

நேற்றுக் காலை 10 மணிக்கு அவர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தனர். அவர்களிடமிருந்து குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் வாக்குமூலங்களைப் பதிவு செய்தார்கள் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்தது.

நாடு கடத்தப்பட்டவர்கள் பதுளை, யாழ்ப்பாணம், கண்டி, வவுனியா, திருகோணமலை, வத்தளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ)

(எதிர்ப்புப் போராட்டம் பற்றிய விரிவான செய்தி 10ஆம் பக்கத்தில்)

# உயர்தரப் பெறுபேறு திங்களன்று

கொழும்பு, டிசெ. 17

க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அடுத்த திங்கட்கிழமை வெளியிடப்படும் என்று உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

உயர்தரப் பரீட்சை கடந்த ஓகஸ்ட் மாதத்தில் நடைபெற்றது. இன்னும் பெறுபேறுகள் வெளியிடப்படவில்லை. இசற் புள்ளிகளைக் கணிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதமே இதற்கான காரணம் என்று பரீட்சைகள் திணைக்களம் கூறிவருகிறது.

இப்போது, பழைய மற்றும் புதிய பாடத்திட்டங்களில் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு தனித் தனியே இசற் புள்ளிகள் கணிப்பிடப்பட்டுள்ளன என்று அரசு அறிவித்துள்ளது. (உ)

சிந்தியுங்கள்...! சொல்லுங்கள்...! வெல்லுங்கள்...!

குழந்தையின் மூளை சிறப்பாகச் செயற்படுவதற்கு அத்தியாவசிய கொழுப்பு அமிலங்கள் அவசியம் என்பதை நீங்கள் அறிவீர்களா?

ஆகவே, ஞாயிற்றுக்கிழமை 11ஆம் பக்கத்தில் பிரசுரமாகும் "அத்தியாவசிய கொழுப்பு அமிலங்களின் முக்கியத்துவம்" என்னும் கட்டுரையை வாசித்து, அதன் கீழுள்ள கேள்விகளுக்குப் பதிலளித்துப் பரிசுகளை வெல்லுங்கள்!

## இறுதிப்.. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு சட்டமா அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஆணைக்குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.பெரும் எதிர்பார்ப்புகளையும், பரபரப்புகளையும் ஏற்படுத்தியிருந்த நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை அரசு நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பித்தது.

இந்த அறிக்கையை சபை முதல்வரும், அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா சபையில் நேற்று சமர்ப்பித்து விளக்கமளித்தார்.

அவர் அளித்த நீண்ட விளக்கத்தின் சாராம்சம் வருமாறு:-

மோதலின் இறுதிக்கட்டங்கள் தொடர்பான சர்வதேச மனித நேயச் சட்டம் சார்ந்த விடயங்கள் பற்றிய விரிவான காண்புகளையும், விதப்புரைகளையும் இவ்வறிக்கையின் மூலம் ஆணைக்குழு எம்மிடம் சமர்ப்பித்துள்ளது. சிவில் குடிமக்களின் உயிர்ப்பாதுகாப்பை உறுதிசெய்வது, யுத்த நடவடிக்கைகளை அமுல்படுத்துவது குறித்த கொள்கைகளை வகுப்பதில் முக்கிய ஒரு காரணியாக அமைந்ததென்பதையும், சிவில் குடிகளை வேண்டுமென்றே இலக்குவைத்து தாக்குதல்களை மேற்கொள்வது ஒருபோதும் அக்கொள்கையின் ஓரங்கமாக இருக்கவில்லை என்பதையும் இவ்வறிக்கை தெளிவாக ஏற்றுக்கொள்கிறது.

தம்மிடம் முன்வைக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் செயலாற்றி, தமது அபிப்பிராயப்படி மேலும் விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டிய குறிப்பான சில சம்பவங்கள் ஆணைக்குழுவால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. ஆணைக்குழு அத்தகைய சம்பவங்கள் பற்றி தனது அறிக்கையில் குறிப்பிடுவதுடன், அத்தகைய சம்பவங்களுக்குப் பின்னணியாக அமைந்த நிலைமைகளும் பலதரப்பட்டவையாகும்.

அபிப்பிராய பேதத்திற்கு உள்ளாகியிருக்கும் காணொலிக் காட்சிகள் பற்றி குறிப்பிடுவதாயின், அவற்றின் உண்மைநிலை, உள்ளடக்கத்தின் நம்பகத்தன்மை ஆகியன குறித்து குறிப்பிடத்தக்க, சந்தேகத்திற்கிடமான தொழில்நுட்ப மற்றும் சட்ட மருத்துவப் பிரச்சினைகள் நிலவுவதாக ஆணைக்குழு குறிப்பிடுகிறது.

அவ்வாறான சகல சந்தேகங்களையும் தெளிவுபடுத்திக்கொள்ளும்பொருட்டு இவ்விடயங்கள் குறித்த ஒரு சுயாதீனமான புலன்விசாரணையை நடத்துமாறு ஆணைக்குழு விதந்துரைக்கிறது.

இவ்வனைத்து விடயங்கள் தொடர்பிலும் எழுகின்ற ஐயத்தை முற்றாக நீக்கும் பொருட்டு, இந்த ஒவ்வொரு விடயம் தொடர்பான உண்மைநிலையை அறிந்துகொள்வது அரசுக்கு மிக முக்கியமான ஒரு விடயமாகும். சட்டமீறல் குறித்த நம்பத்தகுந்த சாட்சியங்கள் எவையேனும் இருப்பின், இந்நாட்டின் சட்டத்தின்பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை எமது அரசு பல தடவைகள் வலியுறுத்தித் தெரிவித்துள்ளது.

சிற்சில குறிப்பான சம்பவங்களைச் சுட்டிக்காட்டி அவை இடம்பெறுவதற்குத் தூண்டுதலளித்த காரணிகள் எத்தகையவை என்பது குறித்து ஆராய்வது உசிதமானதென ஆணைக்குழுவின் அறிக்கை இப்போது குறிப்பிடுகிறது. இத்தகைய சம்பவங்களை முதலில் தீவிர விசாரணைக்கு உட்படுத்தி, தவறிழைத்துள்ளமை நிரூபணமாகுமெனில், சட்டரீதியாக தண்டனைக்கு உட்படுத்துவது உகந்தது என்பதில் அரசு திடமாக உள்ளது.

பிரஸ்தாப சம்பவங்கள் தொடர்பான உண்மையான தகவல்களைத் திரட்டுவதற்கும், மதிப்பீடுசெய்வதற்குமான பொறிமுறையொன்றை ஏற்படுத்தி, பலமான புலனாய்வுக் கட்டமைப்பொன்றின் உதவியையும் அதற்கு வழங்கி, அப்பொறிமுறையைத் தொழிற்பட வைப்பதே இச்சூழ்நிலையில் எடுக்கப்படவேண்டிய மிக உசிதமான நடவடிக்கையாகும்.

இத்தகைய செயன்முறையின் அடிப்படையில் எடுக்கப்படும் தீர்மானத்தின் பேரில் பிரஸ்தாப சம்பவங்கள் தொடர்பாகக் குற்றவியல் வழக்குத் தொடர்வது அவசியமா என்பது தீர்மானிக்கப்பட வேண்டும். இப்புலனாய்வின் மூலம் தெளிவாகும் விடயங்களை சட்டமா அதிபரிடம் சமர்ப்பித்து குற்றவியல் வழக்குத் தொடர்வதற்கான வாய்ப்புகள் குறித்த அவரது முடிவு பெற்றுக்கொள்ளப்படவேண்டும்.

மோதல் காரணமாக தமது நிலபுலன்களை இழந்துசென்ற அனைவருக்கும் தமக்குச் சொந்தமாகவிருந்த நிலபுலன்களில் மீள் குடியமர்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுப்பதை உறுதிசெய்வது எமது திடசங்கற்பமாகும் என்பதைக் குறிப்பிட விரும்புகின்றோம்.பலாலி, திருகோணமலை - சம்பூர் ஆகிய இரு அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் பற்றிக் கூறுவதாயின், ஆணைக்குழுவும் ஏற்றுக்கொண்டுள்ளவாறு, அவ்விரு வலயங்களுக்கும் உரிய காணிகளின் அளவு மிகக் குறிப்பிடத்தக்க அளவால் குறைவடைந்திருப்பதுடன், இந்நிலை குறித்து அரசு தீவிர கவனஞ்செலுத்தி இப்போக்கை தொடர்ந்தும் துரிதமாக இடம்பெற வழிவகைசெய்யும்.

குறித்த காணிகளின் உரித்தாளிகள் தமது காணிகளை விற்பதற்குத் தீர்மானித்துள்ள வேளைகளில் அல்லது யாதேனும் தடங்கலான ஒரு நிலைமையின்பேரில் காணிகளின் உரித்தை மீள வழங்குவது நடைமுறைச் சாத்தியமற்றதாக இருக்கின்ற வேளைகளில் மாற்றுக் காணிகளைப் பெற்றுக்கொள்ள முன்வருவார்களாயின், அதற்கவசியமான நடவடிக்கைகள் துரிதமாக நிறைவேற்றிக் கொடுக்கப்படும்.

இச்சூழமைவில் "இந்நாட்டின் சகல அரசியல் கட்சிகளும் எதிர் மனப்பான்மையில் இருந்துகொண்டே இருக்கின்ற அரசியலை கைவிட்டு தேசியப் பிரச்சினைகளில் பொது உடன்பாட்டுடன் தீர்மானமெடுக்க முன்வர வேண்டும்" என ஆணைக்குழு முன்வைக்கும் கருத்தை நாம் முற்றாக ஏற்றுக்கொள்கின்றோம்.

அது இவ்வேளையின் தேவையாகும்.

இந்தச் சபையின் அனைத்து உறுப்பினர்களும் தத்தமது கட்சித் தொடர்புகளைத் தாண்டி, உத்தேச வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச்செல்ல இத்தீர்மானகரமான வேளையில் ஒத்துழைப்பு நல்குவர் என்பது அரசின் நம்பிக்கையாகும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2010ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி கற்றறிந்த பாடங்கள், நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்தார். இவ்வாணைக்குழு, 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ஆம் திகதி தனது அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்தது. தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அளப்பரிய ஒரு பணியை நேர்மையுடனும், பொறுப்புடனும் நிறைவேற்றியதையிட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இவ்வாணைக் குழுவின் தவிசாளருக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் தனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றார்.- இப்படி அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரி வித்தார்.

## படையினர்..

அமைப்பது சரியில்லை. வலிகாமம் வடக்கில் 34 ஆயிரம் பேர் மீள்குடியேற வேண்டியுள்ளது. இதற்குப் படையினர் அனுமதி மறுத்துள்ளனர். மீள்குடியேற்றம் என்பது முகாம்களில் உள்ளவர்களை சொந்த இடங்களில் கொண்டுபோய் விடுவது மட்டுமல்ல,

மீள்குடியேற்றப்படும் மக்களுக்கு வீடுகள், நட்டஈடுகள், நிவாரணங்கள் போன்றவை வழங்கப்படவேண்டும். எஞ்சியுள்ள மக்களை மீள்குடியேற்ற, மீள்குடியேற்ற அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு நாங்கள் முழு ஒத்துழைப்பும் வழங்குவோம். அழைக்கின்ற இடங்களுக்கு நாம் வருவோம். மீள் குடியேற்றத்தின்போது ஏனைய அமைச்சர்களின் தலையீடு இருக்கக் கூடாது. அமைச்சர் ரிஷாத் பதியூதீன், மன்னார் சன்னர் பகுதியில் மீள்குடியேறிய மக்களை வெளியேற்றியுள்ளார். இதுதொடர்பாக மீள்குடியேற்ற அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும். மீள்குடியேற்றத்தை முழுமைப்படுத்தவேண்டும்.

மீள்குடியேற்ற அமைச்சர் கருணை உள்ளம் படைத்தவர். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு உதவ வந்த போது, நாம் இதை உணர்ந்தோம். ஆனால், மீள்குடியேற்ற அமைச்சுக்கு வரவு-செலவுத்திட்டத்தில் ஒதுக்கியுள்ள நிதி போதாது. அமைச்சின் செலவுக்கே அந்த நிதி போதுமானதாக இருக்கும் - என்றார். (ஒ-சி)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று
(17.12.2011)
சனிக்கிழமை
இந்து சமய கலாசார
அலுவல்கள்
திணைக்களத்தினால்
நடத்தப்படும் விருது
வழங்கும் விழாவில்
"கலாபூசணம்"
விருதைப் பெறும் பண்டிதை

**திருமதி வைகுந்தம் கணேசபிள்ளை**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவரது சேவைகள் மேலும் சிறப்படைய எல்லாம் வல்ல பரராஜசேகரனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
சொக்கலிங்கர், பரபரம், சத்தியமூர்த்தி குடும்பத்தினர்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.



## கண்ணீர் அஞ்சலி



**கனகரெத்தினம் குகதாஸ்**
(ராசம்மா-கனடா)

கடந்த 14.12.2011 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது உறவினர் கனகரெத்தினம் குகதாஸ் அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வளாக வீதி,கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்

ஐயாத்துரை குடும்பத்தினர்



## 31 நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 14 | 18 |
| ★ | ★ |
| 06 | 12 |
| ★ | ★ |
| 1955 | 2011 |



அமரர்
**சபாபதி தனபாலசிங்கம்**
(பிரபல இணுவில் பத்திரிகை முகவர்)

*அன்புடன் அனைவரையும் அரவணைத்து*
*பாசத்துடனும் பண்புடனும் வாழ்ந்த*
*எங்கள் குடும்பத்தின் குல விளக்கே*
*ஆல விருட்சமாய் ஆயிரம் வருடங்கள்*
*வாழ்வீர்கள் எனக்காத்திருந்தோம்- இன்று*
*காலன் கணக்கு இதுவென அறியாது தவிக்கின்றோம்*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனை*
*வேண்டி நிற்கின்றோம்.*

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**

கடந்த 18.11.2011 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப விளக்கின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை நிகழ்வுகள் இன்று(17.12.2011) சனிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார்,உறவினர்,நண்பர்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

61,பிறவுண் வீதி,
நீராவியடி,யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.



## மாபெரும் மலிவு விற்பனை

நத்தார் பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் 19.12.2011ல் இருந்து 31.12.2011 வரை விசேட கழிவுடன் விற்பனை செய்யக் காத்திருக்கிறோம்.

- பட்டு சாறிவகைகள் 50% கழிவு
- ஆடவர் சேட்வகைகள் 25% கழிவு
- சல்வார் வகைகள் விசேட கழிவுடன்

கணேசன் சென்ரர்,
K.K.S. வீதி, இணுவில்.



## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியை
திருமதி ஜெ.ஜெயாரட்ணா அவர்களின் அன்புத் தாய்

**திருமதி செல்லையா சரஸ்வதி**

அவர்கள் (16.12.2011) வெள்ளிக்கிழமை
காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.
சாவகச்சேரி.



## நல்லூர் பிரதேச சபையின் வரவு- செலவுத் திட்டம்
**மக்கள் பார்வைக்கு**

நல்லூர் பிரதேச சபையின் 2012ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்துக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இதனைக் கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் 19.12.2011 ஆம் திகதியிலிருந்து 26.12.2011 ஆம் திகதி வரை பார்வையிடலாம்.

★ தலைமை அலுவலகம்- கருவப்புலம்லேன், கொக்குவில்.
★ நல்லூர் உப அலுவலகம் - ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
★ கொக்குவில் உப அலுவலகம்- பிறவுண் வீதி, கொக்குவில்.
★ பொது நூலகம், கோண்டாவில்- ஸ்ரீ வல்லிபுரநாதர் கோயில் வீதி, கோண்டாவில் கிழக்கு.
★ பொதுநூலகம் கொக்குவில்- பிறவுண் வீதி, கொக்குவில்.
★ பொதுநூலகம் நல்லூர்- கலாசாலை வீதி, திருநெல்வேலி.

நல்லூர் பிரதேசசபை,
கொக்குவில்.

ப.வசந்தகுமார்,
தவிசாளர்,
நல்லூர் பிரதேச சபை.



## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினரும் கைதடி வடக்கு கிராம
அலுவலருமான திருமதி ஜெயப்பிரியா
அரவிந்தன் அவர்களின் பாசமிகு தந்தை

**கணபதிப்பிள்ளை குகானந்தன்**

நேற்று காலமாகியதை இட்டு அன்னாரின்
பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
தென்மராட்சி, சாவகச்சேரி.

பிரதேசசெயலக
ஊழியர் நலன்புரி சங்கம்

(சி/2890)(3.6.9)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழ்க் கைதிகள் மனிதர்கள் என்று எப்போது கொள்ளப்படும்?

நாட்டின் பல மாவட்டங்களில் உள்ள சிறைச்சாலைகளில் கைதிகளின் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. அவர்களின் நலன் குறித்து அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். சர்வதேச செஞ்சிலுவைக் குழு அரசிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது. செஞ்சிலுவைச் சங்க இலங்கைக் குழுவின் பொறுப்பாளர் யோவீஸ் கியாவனோனி தலைமையிலான குழு, நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்துப் பேசியபோதே இக்கோரிக்கை வலியுறுத்தப்பட்டது.

நாட்டில் உள்ள அநேக சிறைச்சாலைகளில் இடநெருக்கடி நிலவுகிறது. அதனால் விலங்குகள் போன்று கைதிகள் பலரை ஒரே அறையில் அடைத்து வைக்கும் நிலை காணப்படுகிறது. அதனால் சிறைச்சாலைகளை மறுசீரமைக்கத் தக்க நடவடிக்கை, தாமதியாது மேற்கொள்ளப்பட வேண்டும் என்று செஞ்சிலுவையின் கியாவனோனி எம்நாட்டு நீதி அமைச்சரிடம் சுட்டிக்காட்டி உள்ளார்.

உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது, இங்குள்ள சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளுக்கான வசதிகள் திருப்திகரமானவை என்று அமைச்சர் ஹக்கீம் தெரிவித்ததாகச் செய்திகள் கூறுகின்றன. எனினும், செஞ்சிலுவைக் குழு அதிகாரி தெரிவித்த முறைப்பாடுகளை சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சருடன் பேசி, தீர்வு காண முடியும் என்று நீதி அமைச்சர், செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் தலைமை அதிகாரியிடம் தெரிவித்தார் என்கிறது மற்றொரு தகவல்.

ஆனால் இங்குள்ள சிறைச்சாலைகளில் மிகப் பெரும்பாலானவற்றில் கைதிகள் மற்றும் நீதிமன்றில் முன்னிறுத்தப்படாதவர்கள், இடநெருக்கடி மற்றும் சுகாதார வசதிகள் குறைந்த ''கூடு''களிலேயே அடைத்து வைக்கப்படுகிறார்கள் என்பது நிதர்சனம்.

இடநெருக்கடி, நெரிசல் நிறைந்த சிறைச்சாலைகளில் நீதிமன்றங்களால் தண்டிக்கப்பட்டவர்கள் மட்டுமன்றி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், படையினர் மற்றும் பொலிஸாரால், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களும் நீதிமன்றங்களில் முன்னிலைப் படுத்தப்படாமல் வருடக் கணக்கில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

குற்றச்செயலில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் பொலிஸாரால் அல்லது படையினரால் கைது செய்யப்பட்டால், அவரை நீதிமன்றில் முன்னிறுத்தி, காவலில் வைத்திருந்து, இருபத்திநான்கு மணித்தியாலங்களுக்கு முன்னதாக அவர் மீதான குற்றச்சாட்டுக்களை எழுத்தில் விவரித்து வழக்குத் தொடரவேண்டும். ஆனால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பிரகாரம் தமிழர், இளைஞர் யுவதிகள் நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தப் படாமல் நீண்ட காலமாக சிறைகளில் பல ஆண்டு காலத்துக்கு அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பூஸா இராணுவத் தடுப்பு முகாமில் மட்டும் 800 தமிழ் இளைஞர் யுவதிகள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். வெலிக்கடை, நியு மகசீன் சிறைச்சாலை, கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலை ஆகியவற்றிலும் நாட்டின் ஏனைய சிறைச்சாலைகளிலும் 880 பேர் அரசியல் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த ''நரக வேதனையுடன்'' விரக்தியுடன் நாள்களைக் கழிக்கும் தமிழ் அரசியல் கைதிகள், சிறைச்சாலைகளில் தாக்கப்படுவதும் இலங்கை அரசாட்சியில் அடிக்கடி நடைபெறும் நிகழ்வாகிவிட்டது.

கடந்த (நவம்பர்) மாதம் 27ஆம் திகதி அனுராதபுரம் சிறையில் வைத்து சட்ட ஆட்சிக்கும், மனிதாபிமானத்துக்கும் மாசு பூசும் விதத்தில், தமிழ் அரசியல் கைதிகள் மனிதாபிமானம், மனிதநேயமற்ற முறையில் தாக்கப்பட்டமை இலங்கையின் வரலாற்றில் மேலும் கரி பூசியுள்ளது. அந்தத் தாக்குதல் குறித்துச் சம்பந்தப்பட்ட சிறைச்சாலை அதிகாரிகள் மீது எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படமாட்டாது என்பது மட்டும் நிச்சயம். வழமைப் பிரகாரம் பழக்கப்பட்ட பூசி மெழுகும் தந்திரோபாயங்கள் கொண்டு அவை அமுக்கப்பட்டுவிடும்.

இது போன்ற மனிதாபிமானமோ, மனிதநேயமோ அற்ற பல கொடுமைகள் முன்னரும் சிறைச்சாலைகளில் நடைபெற்றுள்ளன. நினைவுக்கு எட்டியவரை, வெலிக்கடைச் சிறைச்சாலையில் கைவிலங்குகளுடன் தடுத்து வைக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள், அதிகாரிகளின் அனுசரணை மற்றும் ஆதரவுடன், வெளியிலிருந்து ஏவிவிடப்பட்ட குண்டர்களால் பெரும் எண்ணிக்கையில் கொலை செய்யப்பட்டதை அகர முதலாக எடுத்துக்கொள்ளலாம். அத்தகைய மனிதக் கொடுமை இப்போதும் இனியும் தொடர்வது எழுதப்படாத ''சட்டம்'' என்றாகிவிட்டதோ என்று சந்தேகமுறும், அச்சம் கொள்ளும் நிலை உருவாகி வருகிறது.

காலத்துக்குக் காலம் இத்தகைய சம்பவங்கள் தலை தூக்குவதால், சட்டங்கள் மீதும், சட்டத்தின் காவலர்கள் மீதும் தமிழ் மக்களை அவநம்பிக்கை கொள்ளத் தூண்டும் செயற்பாடுகளே அரங்கேறுகின்றன; அரங்கேற்றப்படுகின்றன. அதன் விளைவு: தமிழ்க் கைதிகளை மனிதர்களாக மதிக்கும் காலம் வெகு தூரத்திலாவது கிட்டாது என்று நினைக்க வைக்கிறது.

ஜனநாயகம் நிலவுவதாகக் கூறப்படும் ஒரு நாட்டில், தமிழ்க் கைதிகள் சிறைச்சாலைகளில் தாக்கப்படுவதும், கொல்லப்படுவதும் தொடரும் போது, நீதி நிலைநாட்டப்படும் என்றோ, அவ்வாறு இல்லாவிடினும் நிலை நாட்டப்படுவதாகக் காண்பிக்கத் தானும் முயற்சிக்கப்படுமோ என்பதும் இந்த நாட்டில், பெரும் கேள்விக்குறியாகவே தொடரப்போகிறது! அதற்கு மேலதிகமாக வேறு எதுவும் ஆக்கபூர்வமாக, மனித நேய உணர்வுடன் உருவாகும் என்று எதிர்பார்ப்பது எங்ஙனம்?

# வடக்கு, கிழக்கில் தம்மைத்தாமே ஆள்வதை தமிழ்மக்கள் முழுமனதுடன் விரும்புகிறார்கள்

## ஆங்கில பத்திரிகைக்கான நேர்காணலில் முன்னாள் நீதியரசர்


கொழும்பு, டிசெ.17

தமிழ் பேசும் சமூகத் தினர் தங்கள் விவகாரங்களை தாங்களே பார்த்துக் கொள்ளவேண்டும் என்று விரும்புகின்றார்கள். சட்ட ரீதியான முறையில் சொல் வதானால் அதுதான் சுய நிர்ணயத்துக்கான உரிமை. அவர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமது மொழியி லேயே ஆளப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

இவ்வாறு இலங்கை உயர் நீதிமன்றின் முன்னாள் நீதியரசர்களில் ஒருவரான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். 'டெய்லி மிரர்' பத்திரிகைக்கு அவர் வழங்கியுள்ள ஒரு நேர்காணலில் தமிழ் சமூகத்தினர் உண்மையில் எதைத்தான் கோரி நிற்கிறார்கள் என்ற கேள்விக்கு முன்னாள் நீதியரசர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தற்காலிக வாழ்விடங்களிலிருந்து தமது முன்னோர்களின் பிரதேசங்களுக்குபோக விரும்புகிறார்கள். தமது பாதுகாப்பு, சட்ட ஒழுங்கு என்பன தமது இளைஞர்களின் கைகளுக்குப் போக வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

தங்கள் நிலங்களும் சொத்துக்களும் தங்களாலேயே நிர்வகிக்கப்படவேண்டும் என்று விரும்புகிறார்கள். வெளியாள்களால் அல்ல வெளிமுகவர் அமைப்புகளால் இராணுவ அதிகாரத்தால் அல்லது பணத்திமிர் அல்லது நிர்வாக அதிகாரங்களில் வற்புறுத்தப்படுபவர்களை அன்றி தமது சொந்த பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு அவர்கள் விரும்புகிறார்கள். அவர்களுக்கு தமது மொழியை கலாசாரத்தை, சமயத்தை, வாழ்க்கை முறைகளைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டியிருக்கிறது. வெளியாள்கள் வந்து இராணுவ பலத்துடன் தமது மத்தியில் சிலைகளை அமைத்தும் விகாரைகளைக் கட்டியும் தலையிடாத வகையில் இவைகளைப் பாதுகாத்துக் கொள்ள அவர்கள் விரும்புகிறார்கள். இவை எல்லாம் தமிழர்கள் தமக்குள் இட்டு கட்டிக் கொண்ட உரிமைகள் அல்ல சர்வதேச நியமங்களின்படி இவை எல்லாம் தமக்கென சில அடையாளங்களைக்கொண்டுள்ள எந்த ஒருமக்கள் சமூகமும் கேட்டுப்பெற வேண்டிய சுய நிர்ணய உரிமைகளாகும் என்றார்.



அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

### சமஷ்டி தான் இலங்கைக்கு பொருத்தும்

என்னைப் பொறுத்தவரை சமஷ்டி அமைப்பு முறைதான் எமது நாட்டுக்கு மிகப்பொருத்தமாகும் என்று கருதுகிறேன். அப்பொழுதுதான் பெரும்பான்மையோ, சிறுபான்மையோ ஒவ்வொரு சமூகமும் தமது தனித்துவ மற்றும் சிறப்பு அடையாளங்களை ஒரே கொடியின் கீழ் இருந்து வளர்த்துக் கொள்ள முடியும்.

தனி நாட்டைத்தான் பிரபாகரன் கேட்டார் சாத்வீக தலைவரான செல்வநாயகம் கேட்டதுதான் சமஷ்டி. இந்தச் சொல்மிகுந்த எதிர்மறைக் கருத்துக்களால் அசிங்கப்படுத்தப்பட்டுவிட்டது, சமஷ்டி என்பதைப் பயன்படுத்தாமல் விடலாம். ஆனால் பிரதேசங்களுக்கு மத்தியிலிருந்து அமைப்பு ரீதியான தலையீடுகளுக்கு சந்தர்ப்பம் இல்லாத அதிகபட்ச அதிகாரங்கள் வழங்கப்படுமானால் அது தமிழர்களுக்கு மகிழ்ச்சியளிப்பதாகவிருக்கும்.

இலங்கை - இந்திய ஒப்புந்தம் ஓர் ஆரம்பப் புள்ளியாக அமையலாம். அது ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும். ஆட்சிமுறை அரசமைப்பு செயற்பாடுகள், பொது நிர்வாகம் மற்றும் உள்ளூராட்சி முறைகளில் அடிப்படை மாற்றங்கள் செய்யப்பட வேண்டியிருக்கலாம். முக்கியமாக இந்த நாடு ஜனநாயக வழிமுறையில் முன்னேறவேண்டுமானால் பாதுகாப்புத்துறையில் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு நிலை நாட்டப்படுவது அவசியம் என்று நீதியரசர் விக்னேஸ்வரன் கூறினார்.

(ப)

# கல்வித் துறையின் வெற்றிடங்கள் யாவும் புதிய வருடத்துக்கு முன் நிரப்பப்படவேண்டும்

## வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், டிசெ.17

வடமாகாணத்திலுள்ள பிரதிக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர், அதிபர் மற்றும் சிற்றூழியர் ஆகிய பதவிகளிலுள்ள வெற்றிடங்கள் யாவும் அடுத்த வருட ஆரம்பத்துக்கு முன்னர் நிரப்பப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்ற வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

வடமாகாணத்திலுள்ள சகல வலயக் கல்விப் பணிமனைகள், மாகாணக் கல்வித் திணைக்களங்களில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

குறிப்பாக மாகாண கல்வித் திணைக்களத்துக்கு நான்கு பேரும் வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு துணுக்காய், கிளிநொச்சி, மடுபோன்ற கல்வி வலயங்களில் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

அதேபோல் வலயங்களிலுள்ள உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் ஆகிய வெற்றிடங்கள் நிரப்பப்படும் போது குறிப்பிட்ட பாடத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கு வழங்கப்படவேண்டும். அந்த வெற்றிடங்கள் யாவும் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

இதேபோல் அதிபர் வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்பட வேண்டும் சிற்றூழியர் நியமனங்களும் நிரப்பப்பட வேண்டும்.

இந்த வெற்றிடங்கள் அனைத்தும் எதிர்வரும் 01.01.2012 ஆம் திகதிக்கு முன்னர் நிரப்பப்பட வேண்டும் என அந்தக் கூட்டத்தில் ஏகமனதாகத் திர்மானிக்கப்பட்டது.

(ம-14)

# வடமாகாண கல்வி அமைச்சால் மாணவர்களுக்கான கல்விச்சுற்றுலா

தென்மராட்சி, டிசெ.17

வடக்கு மாகாண கல்வி அமைச்சும் விஞ்ஞான தொழில் நுட்ப ஆராய்ச்சி அபிவிருத்தி அமைச்சும் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலாவை ஏற்பாடு செய்துள்ளன.

ஆண்டிறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் வலய ரீதியாகத் தோற்றிய மாணவர் களில் வலய ரீதியாக 250 மாணவர்கள் இந்தக் கல்விச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு வருகின்றனர்.

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் நேற்று முன்தினம் வாகனங்களில் அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ- 207)

**நாளை**

மார்கழி 02, ஞாயிற்றுக்கிழமை18.12.2011

திதி: அட்டமி பி.ப. 2.59 வரை

நட்சத்திரம் - உத்தரம் மாலை 6.37 வரை

சுபநேரம்: 9.23 - 10.53 வரை, ராகு காலம்: 4.53 - 6.23 வரை

# நிரந்தரக் காணி இல்லாமையால் கட்டடம் அமைக்க முடியாத நிலை

## கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் சிரமத்தில்

அச்சுவேலி, டிசெ.17

யாழ்.மாவட்டத்தில் செயற்படும் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிரந்தரமான கட்டடம் அமைக்க உரிய காணி வசதிகள் இன்மையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணி வசதிகள் இருக்கும் பட்சத்தில் இவற்றுக்கான நிரந்தரக் கட்டடங்கள் அமைக்க முடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவற்றுக்கான கட்டடங்களை அமைத்துக் கொடுப்பதற்கு யு.எஸ்.எய்ட் நிறுவனம் முன்வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலர்கள் பொருத்தமான காணிகளை ஒதுக்கிக் கொடுக்க முன்வராமையால் உரிய வசதியைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகச் செயற்பட்டுவரும் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் தனியாருக்குச் சொந்தமான கட்டடங்களில் வாடகை அடிப்படையில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

யாழ். மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பு மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு யு.எஸ். எய்ட் நிறுவனம் கட்டட நிர்மாணப் பணிக்கு முதல் கட்டமாக 20 லட்சம் ரூபாவுக்குக் குறையாத தொகையை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு பொருத்தமான அரச காணியை ஒதுக்கீடு செய்து தருமாறு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களும் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும் பிரதேச செயலர்களிடம் தனித்தனியாகவும் கூட்டாகவும் கோரிக்கை விடுத்த போதிலும் இதுரை எந்தச் சங்கத்துக்கும் அரச காணி ஒதுக்கீடு செய்து கொடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பாகயாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ். சுப்பிரமணியம் தெரிவிக்கையில்:

யாழ். மாவட்டத்தில் உள்ள 12 கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களில் கரவெட்டி, சாவகச்சேரி சங்கங்களுக்கே புதிய கட்டட வசதியைப் பெறுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. சமாசம் உட்பட ஏனைய 10 சங்கங்களுக்கும் புதிய கட்டடத்துக்குரிய நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ள போதிலும் காணி இல்லாமையால் கட்டட வசதியை ஏற்படுத்திக் கொடுக்க முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் பிரதேச செயலர்கள் ஏற்புடைய நடவடிக்கைகளை இதுவரை மேற்கொள்ளாமையே சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்த முடியாமைக்கு காரணமாகும்.

பிரதேச செயலர்கள் அரச காணியை இனங்கண்டு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கினால் கட்டட நிர்மாணப் பணியை மேற்கொள்ள முடியும்.- எனத் தெரிவித்தார். (ம-11)

## பல்கிப் பெருகும் பாதீனியம்

அளவெட்டி, டிசெ.17

தெல்லிப்பளைச் சந்தியிலிருந்து கட்டுவன் வீதிவரை இரு பகுதிக் காணிகள் மற்றும் வீதியோரங்களிலும் பாதீனியம் படர்ந்து காணப்படுகிறது.

இவற்றை அழிப்பதற்கு எவரும் முன்வராத நிலையில் இது பல்கிப் பெருகிக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாவரத்தின் பெருக்கம், மேலும் பல பகுதிகளுக்குப் பரவும் நிலை காணப்படுகிறது.

அதனை அழித்து இல்லாது ஒழிக்கும் பணி விவசாய விரிவாக்க நிலையம், கமத் தொழில் திணைக்களங்களுக்கு உரியது.

எனவே உரியவர்கள் உடன் செயற்பட்டு இதனை இல்லாது ஒழிப்பதற்கு முன்வர வேண்டும் என்று விவசாயிகள் மிகுந்த கவலையுடன் தெரிவித்தார். (ம-36)

## பருத்தித்துறை வீதியோரங்களில் நடைபாதைகள் அமைக்கும் பணிகள்

யாழ்ப்பாணம், டிசெ.17

வீதி அகலிக்கப்பட்டு புனர்நிர்மானம் செய்யப்பட்டு வரும் பருத்தித்துறை வீதியோரத்தின் இரு மருங்கிலும் நடைபாதை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை வீதியில் கோப்பாய், பூதர்மடம் சந்தியில் இருந்து இந்த நடைபாதை மேடை அமைக்கும் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

வீதியில் இரு மருங்கிலும் கொங்கிறீட்டிலான நடைபாதை மேடை அமைக்கப்படவுள்ளன.

இதற்கான பொருள்கள் கொழும்பில் இருந்தும் எடுத்து வரப்பட்டுள்ளன.

இதேவேளை, பூதர்மடம் பகுதியில் இருந்து வீதியை அகலிக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை வீதியில் இருபாலை, கல்வியங்காடு போன்ற பகுதிகளில் உள்ள பாலங்களின் புனர் நிர்மாணப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் இந்தப் பணிகள் மிகவும் மந்த கதியில் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-29)



வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் சுன்னாகம் பொது நூலகத்தால் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள் புதன்கிழமை இடம்பெற்றன. நிகழ்வில் ஓவிய சிற்ப கண்காட்சிக் கூடத்தை வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் முத்து.இராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார். (ம- 38)

## யாழ்.பொது நூலகத்தை வடிவமைத்த கட்டடக்கலை நிபுணருக்கு அஞ்சலி





யாழ்ப்பாணம், டிசெ.17

யாழ். பொது நூலகத்தை வடிவமைத்த ஈழத்தின் புகழ் பெற்ற கட்டடக்கலை நிபுணர் வி.எஸ்.துரைராஜாவின் அஞ்சலி நிகழ்வு நேற்றுமுன் தினம் பிற்பகல் 2 மணியளவில் யாழ். மாநகர முதல்வர்திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் அஞ்சலி நிகழ்வில் ஆரம்ப உரையை வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை நிகழ்த்தினார். தொடர்ந்து அஞ்சலி உரையை யாழ். மாநகர ஆணையாளர் மு.சரவணபவ நிகழ்த்தினார்.

பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை தனது உரையில் தெரிவித்ததாவது:

அமரர் வி.எஸ்.துரைராஜா ஒரு கட்டடக்கலை நிபுணராக மட்டுமன்றி மிகுந்த தமிழ் பற்றாளர்களாகவும் விளங்கினார். 1972 தமிழராட்சி மாநாடு கொழும்பில் நடத்த வேண்டும் என அரசு கோரிய போதும் அதனை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்குரிய பண உதவிகளை வழங்கி அதனை நடத்த முன்னின்று உழைத்தார். அது மட்டுமன்றி 1976 ஆம் ஆண்டு மட்டக்களப்பிலும் 1983ஆம் ஆண்டு முல்லைத்தீவிலும் தமிழராட்சி மாநாட்டை நடத்த முன்னின்று உழைத்தார்.

இவர் கட்டடங்களை வடிவமைப்பதில் கிடைத்த பணத்தின் பெரும் பகுதியை தமிழின் வளர்ச்சிக்காகவும் தமிழின் வளர்ச்சிக்கு உதவுபவர்களுக்காகவும் செலவிட்டார்.

சர்வதேச ரீதியில் புகழ் பெற்ற நூலகத்தை வடிவமைப்பது மட்டுமல்ல துரையப்பா விளையாட்டு அரங்கு, யாழ். பல்கலைககழக கட்டடங்கள் என்பவற்றையும் அழகுற வடிவமைத்தார். திராவிடக் கட்டடக் கலை பாணியை செயல் ரீதியாக நிலைநிறுத்தினார்- என்றார்.

இந்த நிகழ்வில் யாழ். மாநகர சபை உறுப்பினர்கள் முன்னாள் மற்றும் தற்போதைய நூலகர்கள் மாநகரசபை ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ம-319)

## மந்திகையில் புதிய தபால்பெட்டி

வடமராட்சி, டிசெ.17

மந்திகை பொதுச் சந்தைக்கும் சிலையடிச் சந்திக்கும் இடையில் பலநோக்குக் கூட்டுவச் சங்க புலோலி தெற்குக் கிளைக்கு எதிரேயுள்ள இடத்தில் புதிதாகத் தபால் பெட்டி ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

சிலையடிச் சந்தியில் இருந்த தபால்பெட்டி கடந்த வருடம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் போது படையினரால் அகற்றப்பட்டு புலோலி உப தபால் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது.

இந்தத் தபால் பெட்டியை மக்கள் அதிகமாகக்கூடும் மந்திகை பொதுச் சந்தைச் சுற்றாடலில் நிறுவுவதற்காக பருத்தித்துறை பிரதேச சபையிடம் அனுமதிகேட்டு விண்ணப்பித்த போது சபை மௌனம் சாதித்ததால் அந்தச் சுற்றாடலில் தபால் பெட்டியை நிறுவ முடியாமல் போய்விட்டதாகத் தபால் நிலைய வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

எனினும் சந்தைக்குச் சமீபமாக தனியார் வர்த்தகர் ஒருவர் தபால் பெட்டியை நிறுவுவதற்கு இடம் ஒதுக்கியதையடுத்து அந்தப் பகுதியில் புதிதாக தபால் பெட்டி ஒன்றை புலோலி உப தபால் நிலையம் நிறுவியுள்ளது. (ம-236)

## சங்கானை மரக்கறிச் சந்தையில் கட்டாக்காலிகளால் தொல்லை

சங்கானை, டிசெ.17

சங்கானை மரக்கறிச் சந்தையில் உள்ள மரக்கறிகளை கட்டாக்காலிகள் அசிங்கப்படுத்தி வருவதாக வியாபாரிகளும் நுகர்வோரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இரவு நேரங்களில் இங்கு கட்டி வைக்கப்படும் மரக்கறிகள் மீது கட்டாக்காலியாகத் திரியும் நாய்கள் அசிங்கம் செய்வதுடன் ஆடு மாடுகளும் அப்பகுதியினில் படுத்துறங்கி அசிங்கம் செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதனால் மறுநாள் காலையில் வரும் வியாபாரிகள் பெரும் சிரமம் அடைவதுடன் பெருமளவான பொருள்களை வீசவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் யார் கவனம் எடுத்துச் செயற்படுவார்கள் என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (ம-29)

# குடாநாட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் புதிய இயக்குநர் சபைகளை தெரிவு செய்ய ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ.17

யாழ். குடாநாட்டில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் புதிய இயக்குநர் சபைகளை தெரிவு செய்வதற்காக ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சங்கங்களில் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தடவை இயக்குநர் சபை தெரிவு இடம்பெறுவது வழக்கம்.

கடந்த கால அசாதாரண சூழ் நிலைகளைக் கருத்தில் கொண்டு பெரும்பாலான சங்கங்களில் இந்தத் தெரிவுகள் நடத்தப்படவில்லை.

சில சங்கங்களில் நியமன இயக்குநர் சபையில் தற்போதும் வருடா வருடம் நீடிப்புச் செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் பெரும்பாலான சங்கங்களில் புதிய இயக்குநர் சபைகளை தெரிவு செய்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி இன்று சனிக்கிழமை பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலும் மறுநாள் உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலும் தேர்தல்கள் இடம்பெறவுள்ளன.

ஜனவரி மாதம் 07 ஆம் திகதி கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலும் கிளைக் குழு தேர்தல்கள் நடத்தப்படவுள்ளன.

இதேவேளை, அடுத்த ஆண்டில் பெரும்பாலான சங்கங்களிலும் கிளைக்குழு தேர்தல்களை நடத்தி புதிய இயக்குநர் சபை தெரிவுகள் இடம்பெறவுள்ளன.

இதற்கு முன்னேற்பாட்டாக சகல சங்கங்களும் தமது வாக்காளர் இடாப்புக்களைத் தயார் படுத்துமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ம-26)

# குறிகாட்டுவான் படகுச் சேவைக்கு ஏற்றவாறு பஸ் சேவை நடத்துக!

## யாழ். பிராந்திய முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.17

நெடுந்தீவு குறிகாட்டுவான் படகுச் சேவைக்கான நேர அட்டவணைக்கு ஏற்றதாக உள்ளூர் பஸ் போக்குவரத்துச் சேவையை நடத்த நடவடிக்கை எடுக்குமாறு யாழ். பிராந்திய முகாமையாளர் சாலை முகாமையாளருக்கு அறிவித்தல் விடுத்துள்ளார்.

நீண்ட தூரங்களில் இருந்து படகுப் பயணத்துக்காக வரும் மக்களும் வெளியிடங்களில் இருந்து நெடுந்தீவுக்கு வரும் மக்களும் படகுச் சேவை நேரங்களுக்கு உகந்ததாக பஸ் சேவை இடம்பெறாமையால் சில சமயங்களில் படகைத் தவறவிட வேண்டியுள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதனால் நீண்ட தூரங்களுக்குத் தமது பொருள்களுடன் நடந்து செல்ல வேண்டிய நிலையும் ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


இது தொடர்பாக நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிராந்திய முகாமையாளரிடம் படகுச் சேவைகளுக்கு ஏற்றதாக பஸ் சேவையை நடத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டிருந்தார்.

இதற்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# அபராதம் விதிப்பு

மதுபோதையில் வாகனம் செலுத்திய மூவருக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் 17 ஆயிரத்து ஐந்நூறு ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய பொலிஸ் நிலையங்களால் சாவகச்சேரி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டபோது வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிமன்றத்தின் பதில் நீதிவான் மதுபோதையில் சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய கிளிநொச்சி வாசிக்கு 7 ஆயிரத்து ஐந்நூறு ரூபாவும், மதுபோதையில் பதிவு செய்யப்படாத வாகனம் செலுத்திய நுணாவில் வாசிக்கு 5 ஆயிரம் ரூபாவும், பொது இடத்தில் மதுபோதையில் குழப்பம் விளைவித்த வவுனியா வாசிக்கு 5ஆயிரம் ரூபாவும்அபராதம் விதித்தார். (ம-207-313)



யாழ்ப்பாணத்தில் அதி வலுகொண்ட மின் இணைப்புக்களை மேற்கொள்வதற்கென கம்பங்கள் தென்பகுதியில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளன. இந்த மின்கம்பங்களில் ஒரு தொகுதி கொக்குவில் ரயில் பாதை ஓரங்களில் வைக்கப்பட்டுள்ளன. (ம- 26)

# சுயதொழில் கொடுப்பனவுகள்

வடமராட்சி, டிசெ.17

வல்வெட்டித்துறை நகரப் பகுதியில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்கள் சுயதொழிலில் ஈடுபட வசதியாக கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன் இரண்டாம் கட்டமாக 70 குடும்பங்களுக்கு சுய தொழில் ஊக்குவிப்புக் கடன் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வழங்கப்படவுள்ளது.

சனச அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் வல்வெட்டித்துறை மதவடியில் உள்ள பொது நோக்கு மண்டபத்தில் வைத்து இந்த நிதி உதவி வழங்கப்படும்.

நகரசபைத் தலைவர் ந. ஆனந்தராஜ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சனச அபிவிருத்தி வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ். அச்சுதம்பிள்ளை, பொது முகாமையாளர் கோ.சற்குணபாலன், பருத்தித்துறைக் கிளை முகாமையாளர் மற்றும் நகர சபை உறுப்பினர்கள் கலந்து கொள்வர்.

சுயதொழில் கடன் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் இந்தக் கடன் வழங்கப்படும் என ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது. (ம-236)

# நிவாரணம் விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ.17

தென்மராட்சிப் பிரதேசத்தில் சமுர்த்தி நிவாரணம் பெறுவோருக்கான டிசெம்பர் மாத நிவாரணப் பொருள்கள் இன்று சனிக்கிழமை முதல் அந்தந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் விநியோகிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வருட இறுதிக் கணக்குகள் முடிவுறுத்த இருப்பதால் நிவாரணப் பொருள்களை எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னதாகப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-207)

# நோயாளியைத் தாக்கிய பார்வையாளர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் பரபரப்பு

யாழ்ப்பாணம், டிசெ.17

வைத்தியசாலை விடுதியில் தங்கியிருந்த நோயாளியைப் பார்வையாளர் தாக்கிய பரபரப்பூட்டும் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சாவகச்சேரி வைத்தியசாலையின் நோயாளர் விடுதியில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

மட்டுவில் தெற்குப் பிரதேசத்தில் உள்ள காணியொன்றில் மேய்ச்சலுக்குக் கட்டப்பட்டிருந்த மாடு வேலிக் கதியால்களைச் சேதப்படுத்தியதன் காரணமாக இரு தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலின் போது காயமடைந்த இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையின் நோயாளர் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இதில் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த துரைசிங்கம் ரவிக்குமார் (வயது- 33), செல்லத்துரை சந்தனராசா (வயது- 60) ஆகிய இருவருமே சிகிச்சை பெற்று வந்தனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் பார்வையாளர் நேரத்தில் தனது தந்தையைப் பார்வையிட வந்த மகனான சந்தனராசா பிரசாந்தன் என்பவர் விடுதிக் கட்டிலில் படுத்திருந்த துரைசிங்கம் ரவிக்குமார் என்பவரை மோசமாகத் தாக்கியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்தினர் சாவகச்சேரி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். (ம-207-313)

# மயங்கி விழுந்து மரணமான பெண்

யாழ்ப்பாணம், டிசெ.17

வீட்டிலிருந்து பாண் சாப்பிட்டுக்கொண்டிருந்த குடும்பப் பெண் திடீரென மயங்கி விழுந்து மரணமான சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சாவகச்சேரி நகர் பகுதியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி செருக்கல் பிள்ளையார் வீதி எனும் இடத்தைச் சேர்ந்த மன்மதராசா கனகேஸ்வரி (வயது 40) என்பவரே திடீரென மரணமாகியுள்ளார்.

இவரது சடலம் சாவகச்சேரி வைத்தியசாலையின் சாவகச்சேரி சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகச் சாவகச்சேரி பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்ததை அடுத்து சாவகச்சேரி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி செல்வி.இ.சசிகலா உடல் கூற்றுப் பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து சாவகச்சேரி சட்ட வைத்திய அதிகாரிகளுக்கு, சடலத்தை உடல் கூற்றுப் பரிசோதனை செய்யுமாறு சாவகச்சேரி நீதிமன்றத்தின் பதில் நீதிவான் உத்தரவிட்டார். (ம-207-313)

# நெடுந்தீவு உள்ளூர் பஸ் சேவை பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.17

நெடுந்தீவு உள்ளூர் போக்குவரத்துச் சேவையில் உள்ள இரண்டு பஸ்களில் ஒன்று கடந்த ஒரு மாதமாக சேவையில் ஈடுபடாமையால் போக்குவரத்துச் சேவை பாதிக்கப்பட்டுள்ளது. சில நாள்கள் பஸ் காற்றுப் போய் விட்டால் செயற்பட முடியாத நிலை இருந்ததாகவும் பின்னர் அது சாரதி இல்லாத நிலையில் சேவையில் ஈடுபட முடியாதிருப்பதாகவும் பொது மக்கள் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட பஸ் இன்னமும் தனது சேவையை ஆரம்பிக்கவில்லை என்றும் அதனால் தாம் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-7)

# சைவநெறித் தேர்வு வெற்றியாளருக்கு பரிசில் வழங்கல்

யாழ்ப்பாணம், டிசெ.17

யாழ். சைவ பரிபாலன சபையின் ஏற்பாட்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் 132 ஆவது குருபூசை தினமும் அகில இலங்கைச் சைவ நெறித் தேர்வு- 2010 இன் பரிசளிப்பு விழாவும் நேற்று வெள்ளிக்கிழமை நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றன.

சைவபரிபாலன சபைத் தலைவர் த.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் உருவப்படத்துக்கு அஞ்சலி செலுத்தலுடன் ஆரம்பமானது.

அதனைத் தொடர்ந்து திருமுறை ஓதல் இடம்பெற்று நாவலர் சோலை முன்பள்ளி மாணவர்களின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது.

தொடர்ந்து நிகழ்வின் வரவேற்புரையை சைவபரிபாலன சபையின் சைவப் பிரகாச அமைச்சர் மு.திருஞானசம் பிள்ளை நிகழ்த்தினர். தலைமையுரையை இந்து சமய கலாசார திணைக்களத்தின் ஓய்வு நிலை உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின்



குருபூசைத் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவர்களின் பேச்சுக்களும் நாவலர் முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. நிகழ்வின் பிரதான நிகழ்வாக பரிசில் வழங்கல் இடம்பெற்றது. (ம-313)

# Vacancies

A leading Finance company is seeking for qualified candidates for the following positions

**01. Sales Executive**
**02. Cashier**
**03. Documentation Officer**
**04. Office Assistance**

Those who are interested, forward your CV to P.box ...on or before 24th December 2011

C/o Uthayan, Advt No:4207
361,Kasthuriyar Road, Jaffna.

(c/6925)3,7,6)


## பதிவுகள் ஆரம்பம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 2011,2012 ஆம் ஆண்டு புதிய கல்வியாண்டின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பதிவுகள் நேற்று வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ளன.

இந்தப் பதிவு நடவடிக்கைகள் தொடர்ந்து இன்று சனிக்கிழமையும் நாளைஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறும்.

அத்துடன் பழைய மாணவர்களுக்கான மீள்பதிவுகள் நாளை மறுதினம் திங்கட்கிழமையும் மறுநாள் செவ்வாய்க் கிழமையும் இடம்பெறும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

(ம-313)


# IMMEDIATE VACANCIES

பிரபல பொறியியல் கல்வி நிறுவனமொன்றிற்கு பின்வரும் பகுதி நேர/முழு நேர விரிவுரையாளர்கள் தேவை.

**விரிவுரையாளர்கள்**


1. Civil Engineering/Quantity Surveing
2. Tele communication
   Data Communication/Radio Systems
3. Electrical and Electronics
   Power/ Electronics

Marketing Executive / office Assistant

apss engineering@yahoo.com

மின்னஞ்சல் ஊடாக Biodata ஐ எதிர்வரும் 22.12.2011க்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.
apss international , No.242, Dr. Subramaniam Road, Chunnakam


# நீங்கா நினைவில்




**அமரர் பொன்னையா தம்பையா**

(திதி: மார்கழி மாத அபரபக்க ஸப்தமி, 17.12.2011)
எங்கள் அன்புத் தெய்வமே! பாசமிகு தந்தையே!!
எம்மையெல்லாம் அன்புடன் வளர்ந்தெடுத்து அறிவூட்டி,
உயர்த்திட்ட உத்தமரே!
தங்களைக் காணாது இன்றுடன் ஐந்தாண்டுகள் நிறைவடைகிறது
என்றும் உங்கள் அன்பை நினைத்து உருகுகின்றோம்
தங்களின் ஆத்மா சாந்திக்காக தெருவாரப்
பிள்ளையாரை தினம் வேண்டுகின்றோம் நாம்.

நீங்கா நினைவுடன்
- குடும்பத்தினர்.

(சி/2888)(2-6-7)


## பிரத்தியேக வகுப்பு

தரம் -5 புலமைப்பரிசில் வகுப்பு,தரம் 6,7,8,9,10,11 மாணவர்களுக்கு பிரத்தியேகமாக பிரபல ஆசிரியரினால் கற்பிக்கப்படும். யாழ். நகரம், நல்லூர், கோப்பாய் பகுதி மாணவர்கள் தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு:0772487080

## வீடுவாடகைக்கு

யாழ். மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் பல வாகனங்கள் நிறுத்தக்கூடிய வசதியுடன் களஞ்சியசாலை அல்லது தனியார் நிறுவனங்கள் கல்வி நிலையங்கள் என்பவற்றுக்கு உகந்த பெரிய வீடு உண்டு . ( ஏ-9 வீதிக்கு அருகில்) 0750421969


## தவறிவிட்டது

செம்மணி வீதி, நாயன்மார்கட்டு, சித்த மருத்துவமனை முன்பாக வசிக்கும் தர்சினி சிவமூர்த்தி என்பவரது தேசிய அடையாள அட்டை(886772718V) 33, மாவடி வீதி, யாழ்ப்பாணம்), பணவைப்புப் புத்தகம், காப்புறுதி அனுமதிப் பத்திரம், வரிப்பத்திரம் என்பன கச்சேரிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் 0779900044/0774725690 இற்கு தொடர்பு கொள்ளவும் (சன்மானம் வழங்கப்படும்)


# VACANCY

- ACCOUNT ASSISTANT
- I T EXECUTIVES
- SALES BOY/GIRLS

**Requirements:**

Good Knowledge in Accounting, Computer & English is necessary for account and it executives.

**Walk in Interview:**

**From:** 18th Dec. 2011 onwards
**Time:** 10.00 a.m. to 4.00 p.m.
**At:** Annai Nagaa Food City, 175, K.K.S. Road, Jaffna.
**Tel.:** 0774773483


# மரண அறிவித்தல்



## முத்துக்குமாரு கார்த்தியேசு (சின்னராசா)

ஆஸ்பத்திரி வீதி, சங்கானையை பிறப்பிடமாகவும், கனடா ரொறன்ரோவை வதிவிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு கார்த்தியேசு (16.12.2011) அன்று ரொறன்ரோவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு -அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா-பொன்னம்பலம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், சந்திரகானம் (சித்திரா-கனடா) அன்புக்கணவரும், விஜயசுகந்தன் (பொறியியலாளர்-கனடா), சுகந்தி (துளசி-கனடா), சுடர்ஒளி (சங்கானை), கயல்விழி(அரசி-கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுப்பிரமணியம் (B.Sc, நடேஸ்வரா கல்லூரியின் முன்னாள் ஆசிரியர், உடுவில்) , இராசம்மா (கனடா), நடராசா (கனடா), கதிரவேலு (உதயன் பத்திரிகை விளம்பரப்பகுதி), தனவதி(இந்திரா-சங்கானை) ஆகியோரின் சகோதரனும், திருநாவுக்கரசு, நாகேஸ்வரி (கனடா), பொன்னுத்துரை (கனடா), குருமூர்த்தி (சங்கானை) ஆகியோரின் மைத்துனரும் (நஞ்சன்), நளினா, உதயகுமாரன் (கனடா), புஸ்பசோதி (சங்கானை), கிரிசாந் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனும், பரிதி, கீர்த்தி, அருள்மொழி, கனிமொழி (கனடா), சேயோன், செம்பருத்தி (சங்கானை), நயனி (கனடா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் Chacel, ridge, funeral Hall , markkam, Canada வில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C/6924)(6-7-8)

ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.
சுகந்தன் : 0014169070000
சுகந்தி (துளசி):00116476800011
தகவல்: பிள்ளைகள், மருமக்கள்.

## என்னத்தைச்...
## ...சொல்ல?!

அவர்களுக்கோ கஷ்டம்.......!
.........எங்களுக்கோ கஷ்டமும் நட்டமும்!!

ஆட்டை மாட்டைக் கடித்த நாய் அடுத்து மனிதரையும் கடிப்பது வழமை. நாய்கள் தெருவோரம் திரிகின்றன. ஆள்களைக் கடிக்கின்றன; நிறுத்தவில்லை. ஆனால் விசர்நாய்க் கடி குறைந்து கொண்டே வருவதாக ஓர் ஆய்வு கூறுகின்றது.

இன்று நாய்களுக்கு மகா சுதந்திரம் கிடைத்துவிட்டது. அவை தமக்குள்ளே சண்டை இடுவதைத் தவிர்த்துக்கொள்ளும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன போலவே தோன்றுகின்றது.

முன்பு இலங்கை குடியரசான காலத்தில் நாயொன்றை நாய் கண்டால் நடுத்தெருவில் பிரண்டு உருண்டு மல்யுத்தம் போட, அருகில் உள்ள நாய்கள் கட்சிகட்டி மோதியதைக் கண்டிருக்கிறோம்.

ஆனால், நாம் நாய்களுக்கு நாம் சுதந்திரம் கொடுத்துவிட்டோம் என்று, அரசு அறிவித்து நாய் பிடிகாரரை கடமையில் இருந்து நிறுத்தியதன் பின்னர், மழை காலத்தில் நாய்கள் தம் இஷ்டத்துக்கு மலம், சலம் கழித்து கிணற்று நீரில் கலக்க வைத்து, எம்மைக் கிண்டல் செய்வதுபோல் எனக்குத் தோன்றுகின்றது.

வீட்டுக்கிருத்தியம் செய்தால் தொடக்கு நீங்கிய தாகக் கிணற்றிலே தீர்த்தத்தைவிடும் காலம்போய், இன்று நாயாரின் தீர்த்தமும், மலமும் நனி சிறந்த பதார்த்தமாகி தெருவெல்லாம் கரைந்து பரவுகின்றது.

பின், வயிற்றோட்டம், வாந்திபேதி, டெங்கு, இரத்தச் சோகை, புற்றுநோய் தடுப்புகளுக்கு என்று மருத்துவ மகா நாடுகள் நடப்பதையும் இப்போது காண்கிறோம்.

மிதந்துவரும் நாயாரின் மலசலக் கழிவை மிதித்துக்கொண்டே, சுகாதார உத்தியோகத்தர்கள், பொலிஸார் சகிதம், டெங்கு வேட்டையாடுவதும் நீதிமன்றில் தண்டப் பணம் கட்டுவதும் இன்று நாம் காணும் நிகழ்வுகள்.



வீட்டு வாசலில் நாயார் வடித்த ''தீர்த்தத்தைக்'' கண்டு, ''இன்று கண்ட பாவனையில் கொண்டை முடிப்பது'' போன்று படலைக்குப் படலைப் போத்தலில் நீர் நிரப்பிக் கட்டித் தொங்கவிடுகின்றனர். இதே நாயார் தன் காலினை உயர்த்தி இந்தப் போத்தலில் தன் சிறுநீரை முறையாக விடுவது, அதிகாலை தெருவிலே நடைபவனி செல்பவர்கள் காணும் காட்சியாகிவிட்டது. நித்திரைகொள்பவர் இதனைக் காணவா போகின்றனர்! கழுதை மயிர் பிடுங்கித் தீர்த்தமாடிய கதையாகவே இது அமைகின்றது.

பசுவின் சாணம் ஒன்ற விட, மற்றைய பிராணிகளின் ஏன் மனித மலமும் கூட, மிகப்பெரும் தீங்கை விளைவிப்பவை. இது ஆய்வாளர் கண்ட உண்மை. அதிகாலையில் நல்லைக் குமரன் வீதியைச் சுற்றி வருவதற்குச் செல்வோர் காணும் காட்சியே இங்கு சொல்வது பொருத்தம்.

இரவுக் காவல் கடமையை முடித்துவிட்டுக் கட்டையன், வெள்ளையன், கறுவல், குட்டைவாலன், குமரி, கிழவி இப்படிப் பல நாய்களும் திருப்பள்ளி எழுச்சி கண்டு எழுந்து செல்வதும் ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும்.

இவைவிட்ட மலக் குவியல் திரு வீதியில் நீரோடு சங்கமித்து விடுகின்றது. இங்குதான் அங்கப் பிரதஷ்டையும் நடைபெறுவதுண்டு.

யாழ்.மாநகர சபைக்கு நாட்டு நலன் விரும்பிகளால் ஒரு வேண்டுகோள் விடப்பட்டது. நன்றாக ஞாபகமிருக்கிறது. வாரம் ஒருமுறைகூட, குப்பை வண்டி வருவதில்லை. ஏனையா! தகரத்தால் ஆன பெரிய பெட்டிகளை அல்லது தார் பீப்பாக்களையாவது- முக்கிய தெருக்களில் வைத்தால் குப்பை கூளங்களை மக்கள் தெருவில் கொட்டாது, அந்தப் பீப்பாக்களில் போடுவார்களே. அவற்றைப் பின்னர் அகற்றலாமே என்பது வேண்டுகோள். ஆனால்....

நாம் இப்போது கட்சி கட்டி மோதுகிறோம். அடிதடியும் நடத்தி உள்ளோம். எமக்கு இப்போது வேலை. சண்டை இடுவது கட்சி மாறுவது அவற்றில் அடங்கும். உங்கள் பிரச்சினைக்கு நாம் என்ன செய்வது? இப்போதைக்கு அது கஷ்டம் என்று சொல்வது போலிருக்கிறது என்பதுபோல், நடக்கிறார்கள். மாநகரைக் கட்டி ஆள வந்தவர்களுக்கும் கஷ்டம்! எங்களுக்கும் கஷ்டமும் நட்டமும் ஆகிவிட்டது....!



பிரசண்டன்

# குற்றச்சாட்டு பொய் என்பதை நிரூபிக்க இலங்கைப் படையினர் நடவடிக்கை

## அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்கிறார் இராணுவத் தளபதி ஜயசூரிய


கொழும்பு,டிசெ.17

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பொய் என்பதை நிரூபிக்க இலங்கை இராணுவம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பு றொக் ஹவுஸில் நேற்றுமுன்தினம் இலங்கை இராணுவத்தின் கவசப்படைப் பிரிவின் 56 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.நா. நிபுணர்குழு அறிக்கையில் கூறப்பட்டுள்ள ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளுக்கு இலங்கை இராணுவம் பதில் அளிக்கவுள்ளது. இந்த அறிக்கையைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன.



போரின் இறுதிக்கட்டத்தில் வன்னியின் கிழக்கில் நிலைகொண்டிருந்த படைப்பிரிவுகள் பற்றிய தவறான தகவல்களைஐ.நா. நிபுணர்குழு அறிக்கை உள்ளடக்கியிருந்தது. இவை பொய்யான குற்றச்சாட்டுகள் என்பதை உறுதிப்படுத்துவதற்கான அறிக்கை விரைவில் ஐ.நா. விடம் சமர்ப்பிக்கப்படும்.

நிபுணர்குழு அறிக்கையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்பதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஒளிப்பட, காணொளி, செய்மதிப்பட ஆதாரங்களும் இந்த அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பில் அறிவிக்கப்பட்ட பொதுமக்களுக்கான பாதுகாப்பு வலயத்தில் இருந்து 200 மீற்றர் தொலைவில் இலங்கை இராணுவம் நிலை கொண்டு படை நடவடிக்கைகளை மேற்கொண்டதாக ஒரு பொய்யான குற்றச்சாட்டு கூறப்பட்டுள்ளது. ஆனால் அப்போது, படையினர் சில கிலோ மீற்றருக்கு அப்பாலேயே நிலைகொண்டிருந்தனர். இதனை நிரூபிக்கும் வகையில் குறிப்பிட்ட நாளில் எடுக்கப்பட்ட செய்மதிப்படங்கள் இந்த அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையில் போரின் இறுதிக்கட்டத்தில் படைப் பிரிவுகள் எங்கெங்கு நிலை கொண்டிருந்தன என்ற விவரங்களை, தேவைப்படும் ஆதாரங்களுடன் சமர்ப்பிக்கவுள்ளோம்- என்றார். (ச)

# வதிவிட விசா கோருவோருக்கு கட்டாய மருத்துவ சோதனை

கொழும்பு,டிசெ.17

இலங்கையில் வதிவிட விசா கோரும் வெளிநாட்டவர்களுக்கு கட்டாய மருத்துவ சோதனை நடத்தப்படும் என்று அரசு தெரிவித்துள்ளது.

30 ஆண்டு யுத்தத்தின் பின்னர் வெளிநாட்டுப் பிரஜைகள் இலங்கையில் வதிவிட விசா கோரி வருகின்றனர். இவர்களிடம் மருத்துவ சோதனை நடத்தப்பட வேண்டியது அவசியமானது என்று ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

குடிவரவு சுகாதாரப் பிரிவும் இலங்கை சுகாதார அமைச்சும் கூட்டாக இணைந்து இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (ச)

# துமிந்தவுக்கு 3 மாத விடுமுறை

கொழும்பு,டிசெ.17

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு நாடாளுமன்றம் மூன்று மாத விடுமுறையை நேற்று வெள்ளிக்கிழமை வழங்கியுள்ளது.

முல்லேரிய சம்பவத்தில் காயமடைந்த கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா சிங்கப்பூரில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த நிலையிலேயே துமிந்த சில்வாவுக்கு மூன்று மாத விடுமுறை வழங்குமாறு கோரப்பட்டதைத் தொடர்ந்து நாடாளுமன்றம் மூன்று மாத விடுமுறைக்கான அங்கீகாரம் வழங்கியது. (ச)

# கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தாதியர்கள் தொழிற்சங்க நடவடிக்கை

கொழும்பு,டிசெ.17

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தாதியர் சபை நேற்று வெள்ளிக்கிழமை தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

வைத்தியசாலையின் கனிஷ்ட ஊழியர் ஒருவரால் தாதி உத்தியோகத்தர் ஒருவர் தாக்கப்பட்டமை தொடர்பில் முறையான விசாரணைக்கு வலியுறுத்தியே தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக அகில இலங்கை சுவசேவா சங்கம் தெரிவித்துள்ளது.

முறையான விசாரணைகளின் பின் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க சுகாதார அமைச்சு மற்றும் வைத்திய சாலை பணிப்பாளர் ஆகியோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால் தொடர்ந்தும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அகில இலங்கை சுவசேவா சங்கம் எச்சரித்துள்ளது. (ச)

# கின்னஸ் சாதனை படைக்கத் தயராகும் வெலிக்கடை சிறைச்சாலை!

கொழும்பு,டிசெ.17

உலகின் மிக நீலமான புதுவருட வாழ்த்து அட்டை ஒன்றை தயாரித்து புதிய கின்னஸ் சாதனை படைக்கும் முயற்சியில் வெலிக்கடை சிறைச்சாலை களமிறங்கியுள்ளது.

இந்த புதுவருட வாழ்த்து அட்டையை தயாரிக்கும் பணியில் கைதிகள், அதிகாரிகள் எனப் பலர் ஈடுபட்டுள்ளனர்.

195 அடி நீளமும் 5 அடி அகலமும் கொண்டு தயாரிக்கப்பட்டுவரும் புதுவருட வாழ்த்து அட்டை எதிர்வரும் முதலாம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்படவுள்ளது. (ச)

# 7 மாவட்டங்களில் மண்சரிவு அபாய வலயம்

கொழும்பு,டிசெ.17

இலங்கையின் 7 மாவட்டங்களில் மண்சரிவு ஏற்படக்கூடிய அபாயகரமான பகுதிகள் இனங்காணப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மண்சரிவு ஏற்படக்கூடிய இடங்களை முன்கூட்டியே அறிவதற்கு பயன்படுத்தப்படும் இயந்திரம் நேற்று முன்தினம் கண்டியில் உபயோகப்படுத்தப்பட்டது.

மண்சரிவு அபாயத்தை கண்டறிய இதற்கு முன்னர் பயன்படுத்தப்பட்ட முறை அதிக செலவுடன் கூடியது என்று தெரிவிக்கப்படுகின்றது. புதிய இயந்திரத்தின் மூலம் நிலத்திற்கு அடியில் உள்ள நிலைமைகளையும் அறியக் கூடியதாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# தமிழர் நாடு கடத்தப்படுவதைக் கண்டித்து பிரிட்டனில் வேற்று இன மக்கள் ஆர்ப்பாட்டம்



லண்டனில் உள்ள ஹர்மொண்ட் சிறைச்சாலைக்கு வெளியே வேற்றின மக்கள் தமிழர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்பக்கூடாது எனப் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். இந்தத் தகவல் தமிழ் ஊட கங்களில் பரவியதால் தமிழ் சமூகத்தினர் உள்ளிட்ட மேலும் பலர் அவர்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டத்தில் இணைந்துள்ளனர்.

முதலில் போராட்டத்தை ஆரம்பித்த வெள்ளை இன மக்கள் தமது கைகளை பெரிய இருப்புக் கம்பிகளில் தாமே விலங்கிட்டுக் கொண்டனர். இதனால் பொலிஸாரால் அவர்களை அங்கிருந்து இலகுவாக அகற்ற முடியவில்லை. இதற்கும் ஒரு படி மேலே போய் சில வெள்ளையின மக்கள் கம்பிகளைக் கட்டி அதன்மேல் ஏறி நின்று ஆர்ப்பாட்டத்தை நிகழ்த்தினர்.

இதனால் அவர்களைக் கீழே இறக்க முடியாமல் பொலிஸார் திண்டாடினர். சிறைச்சாலை வளாகத்தில் இருந்து தடுப்புக்காவலில் உள்ளோரை ஏற்றி வந்த பஸ் ஒன்றை போராட்டக்காரர்கள் தடுத்துள்ளதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் ஏற்பட்ட பதற்றத்தை நீக்க மேலதிகப் பொலிஸார் வரவழைக்கப் பட்டதோடு ஹெலிகொப்டரின் உதவியும் நாடப்பட்டது. வானில் வட்டமிட்ட ஹெலிகொப்டர் மூலம் பொலிஸாருக்கு தகவல்களை வழங்கிய வண்ணம் இருந்தது. இதனை அடுத்து பஸ்ஸை சாரதி திரும்பவும் சிறைச் சாலைக்குள் எடுத்துச் சென்றார்.

இதனிடையே பிறிதொரு இரகசிய வாசல் வழியாக அந்த பஸ் புறப்படத் தயாரானது. இதனை அறிந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அந்த வழியையும் சென்று மறித்தனர். இதனால் 70 பேரை ஏற்றிக்கொண்டு சிறிய ரக பஸ் ஒன்று வேறு திசையால் விமான நிலையம் நோக்கிப் புறப்பட்டது.

இது லண்டன் ஸ்ரான்ஸ்ரெட் (Stansted Airport) விமான நிலையம் நோக்கிச் சென்றது. அதில் பயணித்த 70 பேரை நேற்று முன்தினம் பிரிட்டன் அரசு இலங்கைக்கு நாடு கடத்தியுள்ளது என்று அறியப்படுகிறது.

இனிவருங்காலங்களிலும் இவ்வாறான நாடு கடத்தல் நடைபெற்றால் அதனைத் தடுக்க பெரியளவில் தமிழர்கள் முன் வரவேண்டும் என்று ஸ்ராப் டிபோடேஷன் அமைப்பினர் தெரிவித்தனர். (வ)

# மீண்டும் ஒளிபெற்றது கொழும்புத்துறை வீதி

கொழும்புத்துறை, டிசெ.17

கொழும்புத்துறை வீதியில் நீண்டகாலமாக ஒளிராது காணப்பட்ட வீதி மின் விளக்குகள் புதிதாகப் பொருத்தப்பட்டு ஒளிர விடப்பட்டுள்ளன.

இலங்கை மின்சார சபையினால் நேற்றுமுன்தினம் புதிய மின்விளக்குகள் பொருத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கணக்கர் சந்தியிருந்து துண்டிச் சந்தி வரையுள்ள மின்கம்பங்களில் உள்ள பழுதடைந்த மின் விளக்குகள் அகற்றப்பட்டு புதிதாகப் பொருத்தப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகளில் இரவு வேளைகளில் வீதி மின் விளக்குகள் ஒளிராமையால் பொதுமக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக செய்தி வெளிவந்ததைத் தொடர்ந்து இந்தக் குறைபாடு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக மக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர். (வ-135)

# சர்வதேச கனிஷ்ட விஞ்ஞான போட்டியில் யாழ். இந்து மாணவனுக்கு வெண்கலம்



யாழ்ப்பாணம், டிசெ.17

சர்வதேச ரீதியில் 42 நாடுகளிலிருந்து பாடசாலை மாணவர்கள் பங்குபற்றிய சர்வதேச 8 ஆவது கனிஷ்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவன் சுந்தரேஸ்வரன் வித்தியாசாகர் வெண்கலப் பதக்கம் பெற்றுள்ளார்.

இந்தப் போட்டியானது கடந்த முதலாம் திகதி தென்னாபிரிக்கா டேர்பன் நகரில் இடம்பெற்றது. சர்வதேச ரீதியாக 300 மாணவர்கள் போட்டியில் பங்கு பற்றிய போது இலங்கையைச் சேர்ந்த 5 மாணவர்கள் பங்கு கொண்டனர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலிருந்து சுந்தரேஸ்வரன் வித்தியாசாகர், ஆனந்தராசா ஹரிசங்கர் ஆகியோரும், குருநாகல் மளிய தேவக் கல்லூரியிருந்து கவிந்து நதீசனகுமார, கொழும்பு விசாகாக் கல்லூரியிருந்து விறூரி ஹேமல்கா, கண்டி மகமாயக் கல்லூரியிருந்து வினுரி சந்தன ஆட்டிகல ஆகிய மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதில் யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சு.வித்தியாசாகர் 3 ஆம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார். (வ-313)

# இளைஞர் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் இளைஞர், யுவதிகள் இன்று யாழ். வருகை

யாழ்ப்பாணம், டிசெ.17

உள்நாட்டு இளைஞர் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் கேகாலை மாவட்டத்திலிருந்து 50 இளைஞர், யுவதிகள் இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர். இவ்வாறு வருகை தரும் இளைஞர் யுவதிகள் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் தங்கியிருந்து இளைஞர் அபிவிருத்தித் திட்டம், சிரமதானம், விளையாட்டு ஆகிய நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ளனர். இவர்களுடன் சப்ரகமுவ மாகாண இளைஞர் விளையாட்டு துறை அமைச்சர் சிறிலால் விக்கிரம வும் வருகை தரவுள்ளார். (வ-23)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
**மாணிக்கம் கனகம்மா**

தோற்றம்
15.04.1932

மறைவு
17.11.2011

அம்மா என்று
வாயார உனை அழைக்க
—எம்
வார்த்தைகள் தவிக்குதம்மா
எம் நினைவுகளால்
தோய்ந்த நிலா
இன்று வெளிச்சத்தை
பறித்துச்சென்றாய் அம்மா.
எம்மை உன் கண்ணுக்குள்
அடைகாத்து
உன் கருவறையில்
சுமந்தவளே
நீ மண்ணுக்குள்
போனதனால் – நாம்
மண்டியிட்டு
தவிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*17.12.2011 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

தியேட்டர் வீதி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(11628)(3,6,7)

## தவறிவிட்டது

வியாழக்கிழமை இரவு 11 மணியளவில் எனது செல்லப் பிராணியான லசி எனும் பெயருடைய வெள்ளை நிறப்பொமேரியன் ஆண் நாய், ஆனையிறவுக்கும் பளைக்குமிடையில் A9 பாதையில் தவறிவிட்டது. கண்டு பிடித்துக் கொடுப்போருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு கொள்ளவும்: வி. செல்வேந்திரன் 0776704148

## விற்பனைக்கு

50 நாள் நிரம்பிய ஜேர்மன் செப்பேட் பெண்குட்டி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0775148602

## வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி, விதானையார் வீதியில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: S.S. நாதன், இல. 16/3, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P 0776146434

## மலிவு விற்பனை

யாழ் நகரில் எங்குமில்லாத மலிவு விலையில் Sony 21', 25", 29" TV கள், அம்பிளிபயர், Box DVD, குளிர்சாதனப் பெட்டிகள், ரேடியோக்கள் என்பன பெருந் தொகையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0770440570, 0771393670
சோனி ரேட்ற் சென்ரர், (கொமர்ஷல் வங்கி எதிரில்), இல. 56, KKS வீதி, சுன்னாகம். (10730)(6-7-8)

## தலைநகரில் தங்குமிட வசதி

Rooms A/C, Non A/C, Attached Bath room, T.V, புகையிரத நிலையம், பஸ்தரிப்பு நிலையம், பொதுச் சந்தை மிக அருகில், சகல வசதிகளையும் கொண்ட (New Oasiss rest) ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள். முன்பதிவு ஏற்றுக் கொள்ளப்படும்.

இல.155, மெலிபன் வீதி,
கொழும்பு-11
தொ.பே: 0112338437,
0112323449,
0112470209.

(10693)(6-19-8)

## ஈரவிழிகளுடன் ஆறு வருடங்கள் ....



மலர்வு: 18 12 1955
உதிர்வு: 17 12 2005

அமரர் **கதிர்காமு முருகேசு (சிவபாதம்)**

ஈர விழிகளுடன் ஆறு வருடங்கள் ஆறா தையா எம் ஆழ்மனது
பாராள வந்த பரிதி நீ, பரிதவிக்க விட்டு பாதிவழி தேடினையோ....
பாலைவன மானதையா இன்று பார்புகழும் சோலை வனம் ஒன்று...
ஆரை நோவோம் ஐயா யாங்கனம் உனைக் காண்போமையா.....

நாகர்கோயில் கிழக்கு,
நாகர்கோயில்.

பிரிவால் துயருறும்,
சகோதரியர், மனைவி, மருமகன்.

(11491)(6,8,7)

## யாழ். பல்கலைக்கழகம், இலங்கை

### ஏலவிற்பனை-மருத்துவபீடம்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பாவிக்கப்பட்ட பொருள்கள் 21.12.2011 (புதன்கிழமை ) அன்று மு.ப. 10.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. மின்சார உபகரணங்கள்
2. ஆய்வு கூட உபகரணங்கள்
3. தளபாடங்கள்
4. அலுவலக உபகரணங்கள்

மேற்படி பொருள்களை 19.12.2011 (திங்கட்கிழமை) அன்று மு.ப 10.30 மணியிலிருந்து 12 மணி வரை உதவிப் பதிவாளர்/மருத்துவபீடத்துடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

ஏலத்தில் வெற்றி பெறுபவர்கள் பணத்தை பல்கலைக்கழக நிதியாளரிடம் செலுத்தி பொருள்களை அன்றைய தினமே அப்புறப்படுத்தல் வேண்டும்.

பதிவாளர்,
15.12.2011

(C/6911)(6,7,8)

# போராட்டக்காரர்களைச் சுட்டுத் தள்ள இராணுவ அதிகாரிகளே உத்தரவு

## மனித உரிமைக்கான சிரியா ஆய்வகம் தெரிவிப்பு

டமாஸ்கஸ், டிசெ.17

சிரியாவின் அதிபர் ஆஷாத்துக்கு எதிரான போராட்டக்காரர்களைச் சுட்டுத்தள்ள இராணுவ அதிகாரிகளே உத்தரவிட்டுள்ளனர். அந்தத் தகவலை லண்டனில் உள்ள மனித உரிமைக்கான சிரியா ஆய்வகம் தெரிவித்துள்ளது.

நியூயோர்க் நகரில் உள்ள HRW என்ற மனித உரிமைக் கண்காணிப்பகம் சிரிய இராணுவத்தைச் சேர்ந்த 60 பேரிடம் தகவல் திரட்டினர். இதன்போது அவர்கள் கூறியதாவது:

போராட்டக்காரர்களை சுட்டுத்தள்ள அதிகாரிகள் உத்தரவிட்டனர். அதுமட்டுமல்லாமல் அருகில் இருந்து வேடிக்கை பார்ப்பவர்களையும் சுட்டுக் கொல்லுமாறும் தோட்டாக்களை கணக்கின்றிப் பயன்படுத்துங்கள் என்றும் தமக்கு உத்தரவு பிறப்பித்ததாகவும் கூறினர்.

மேலும் தெரிவிக்கையில்;

கொல் அல்லது சித்திரவதை செய் என்பது இந்தக் கொலை வெறித் தாக்குதலுக்கான தாரக மந்திரமாகப் போதிக்கப்பட்டது. குண்டடிபட்டுச் சாகாதவர்களுக்கு மின்சார அதிர்ச்சி கொடுத்தல், குறிப்பிட்ட இடத்துக்குள் அடைத்து வைத்தல் போன்ற சித்திரவதைகளும் வழங்கப்பட்டன என்றனர்.

இதேவேளை தங்களுக்கு எந்த அதிகாரி உத்தரவு பிறப்பித்தார் என்பதையும் இந்த வீரர்கள் தெரிவித்திருப்பதால் அவர்கள் மீது முறையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று மனித உரிமைக் கண்காணிப்பகத்தின் அதிகாரி அன்னா நெய்ஸ்டாட் தெரிவித்துள்ளார்.

ஆனால் சிரியாவின் அதிபர் ஆஷாத் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளார். எனினும் மனித உரிமைச் சட்டத்தின்படி ஒருவரின் பணியாளரால் ஏற்படும் இழப்புகளுக்கு அவரது மேலதிகாரியே காரணமாவார் என்பதால் ஆஷாத் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கைச் சந்திப்பது உறுதியாகிவிட்டது.

# மக்கள் ஆதரவை இழந்தால் பதவியில் நீடிக்க மாட்டேன்

## ரஷ்யப் பிரதமர் தெரிவிப்பு

மொஸ்கோ டிசெ.17



ரஷ்யாவில் மக்கள் ஆதரவை இழக்க நேரிட்டால் ஒருநாள் கூடப் பதவியில் நீடிக்க மாட்டேன்; விலகத் தயாராக இருக்கிறேன். இவ்வாறு விளாடிமிர் புடின் கூறினார்.

ரஷ்யாவில் சமீபத்தில் நடந்த பொதுத் தேர்தலில் ஆளும் கட்சி பெரும்பான்மை பெற்றதையடுத்து புடினுக்கு எதிராகப் போராட்டங்கள் நீடிக்கும் நிலையில், ரஷ்யத் தொலைக்காட்சியில் நேரடி உரையாடல் நிகழ்ச்சியில் புடின் நேற்றுமுன்தினம் பங்கேற்றுப் பேசினார். அதன்போது கேட்கப்பட்ட மக்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அப்போது அவர் மேலும் கூறியதாவது:

மக்கள் ஆதரவுடன் கடந்த 12 ஆண்டுகளாக ஆட்சி நடத்தி வருகிறோம். அரசின் கொள்கை, செயற்பாடு எதிலாவது தவறு இருந்திருந்தால் இதுவரை ஏன் எதிர்ப்பு எழவில்லை? இப்போது தேர்தல் முடிந்து மீண்டும் பெரும்பான்மை பெற்ற ஓர் ஆட்சிக்கு எதிராக எப்படித் திடீரென கிளர்ச்சி வந்தது? எனவே, அதில் வெளிநாட்டு சதி இருப்பதாக நினைக்கிறேன். மறுதேர்தல் நடத்துவது உட்பட எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகளை நிராகரிக்கிறேன். எனக்கு உண்மையிலேயே ரஷ்யர்களிடம் ஆதரவு இல்லை என்று தெரிந்தால் ஒருநாள் கூடப் பதவியில் நீடிக்கமாட்டேன்; விலகத் தயாராக இருக்கிறேன் - இவ்வாறு புடின் கூறினார். (ந)



பெல்ஜியத்தின் பிரசெல்ஸ் நகரில் நடந்துவரும் ஐரோப்பிய யூனியன் கவுன்சில் மாநாட்டில் ரஷ்ய அதிபர் திமெட்ரி மெத்வதேவ், (நடுவில்) ஐரோப்பிய யூனியன் கமிஷன் தலைவர் ஜோஸ் மானுவல் பர்சோ (வலது), கவுன்சில் தலைவர் ஹெர்மன்வான்ரூம்பி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கடாபி கொலை குறித்த விசாரணை வேண்டும்

## மகள் ஆயிஷா சர்வதேச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல்

லிபியாவின் முன்னாள் அதிபர் கடாபியை புரட்சிப் படையினர் கடந்த ஒக்ரோபர் மாதம் 20 திகதி சுட்டுக் கொன்றனர்.

இந்த நிலையில் கடாபியின் மகள் ஆயிஷா தனது தந்தை மற்றும் சகோதரர் கொலை பற்றி முறையாக விசாரணை நடத்தக் கோரி சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

ஆயிஷா சார்பில் அவரது சட்டத்தரணி நிக்காப்மேன் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடாபியும், அவரது மகனும் கொலை செய்யப்பட்டதில் பல்வேறு மர்மங்கள் உள்ளன. கடாபி கொலை செய்யப்பட்ட பின் அவரது படத்தை தனியார் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பினர். இதில் புரட்சிப் படையினர் கடாபியின் உடல் அவமதிக்கப்பட்டதைத் தொலைக்காட்சியில் பார்த்த அவரது குடும்பத்தினர் பெரும் வேதனைக்குள்ளானார்கள். இறந்த பின் இது இஸ்லாமிய சட்டத்துக்கு எதி



ரானதாகும்.

இதுபற்றி சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உரிய விசாரணை நடத்தி குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்று மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

லிபியாவில் இராணுவத்துக்கும், புரட்சிப்படைக்கும் இடையே போர் நடந்த சமயத்தில் கடாபி மகள் ஆயிஷா அவரது சகோதரர்கள் முகமது, ஹரிபால், தாயார் சபியா உட்பட அவரது குடும்ப உறுப்பினர்கள் அல்ஜீரியா நாட்டுக்குத் தப்பிச் சென்றனர். தற்போதும் அவர்கள் பாதுகாப்புக் கருதி அங்கேயே தங்கி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

# ஆஸ்திரேலியப் பிரதமரின் சம்பளம் உயர்வு

ஆஸ்திரேலியப் பிரதமர் ஜூலியா கிலார்டின் சம்பளம் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த சம்பள உயர்வின் மூலம் அவர் அதிபர் ஜனாதிபதி ஒபாமா, பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் ஆகியோரைவிட அதிகமாக ஊதியம் பெறுபவராகிறார்.

ஜூலியா கிலார்டின் சம்பளத்தை உயர்த்துவதற்காக அமைக்கப்பட்ட குழு, அவரின் சம்பளத்தை வருடத்துக்கு ரூ.2 கோடியே 56 லட்சத்து 37 ஆயிரத்து 120 ஆக உயர்த்தியுள்ளது. இதன்படி முன்னர் வழங்கப்பட்ட சம்பளத்தை விட இது 31 சதவீதம் கூடுதலாகும். இது குறித்து கருத்துத் தெரிவித்த சம்பள உயர்வுக் குழுவின் தலைவர் ஜோன் கோண்டி, இந்த சம்பள உயர்வு காரணத்துடனே செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். பிரதமருக்கு மட்டுமல்லாமல் அமைச்சர்களுக்கும் 20 இல் இருந்து 27 சதவீதம் வரை சம்பள உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. பொதுவாகவே ஆஸ்திரேலியாவில் மக்கள் பிரதிநிதிகளுக்கு நிறைவான சம்பளம் வழங்கப்படுவதாகக் கருத்து உண்டு என்றார். (ந)

# தமது நாட்டு மக்களை கனடா அழைப்பு

கடந்த 9 மாதங்களாகத் தொடரும் கலவரங்களால் சிரியாவில் வாழும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கனடாவைச் சேர்ந்தவர்களை நாடு திரும்புமாறு அந்நாட்டு அரசு ஆலோசனை வழங்கியுள்ளது.

சிரியாவில் அந்தநாட்டு அதிபருக்கு எதிராக நடைபெறும் போராட்டத்தில் நேற்றுமுன்தினம் ராணுவத்தினர் சுட்டு 27 பேர் பலியானார்கள். இதுவரை அங்கு நடந்த கிளர்ச்சியில் 5000 பேர் கொல்லப்பட்டிருப்பர். இந்நிலையில் அங்கு வாழும் கனடாவைச் சேர்ந்தவர்கள் சிரியாவை விட்டு உடனடியாக வெளியேறுவது சிறந்தது என அந்நாட்டு அமைச்சகம் ஆலோசனை தெரிவித்துள்ளது. (ந)

# சட்டவிரோத குடியேற்றவாசிகளை தேடும் பணி மலேசியாவில் தீவிரம்

கோலாலம்பூர், டிசெ. 17

பலர் தங்கள் சொந்த நாட்டில் குற்றம் செய்து விட்டு மலேசியாவில் வேறு பெயர்களுடன் நடமாடி வருகின்றனர். அவ்வாறான 3 ஆயிரம் பேரைத் தேடும்பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது.

இதற்காக மலேசிய அரசால், குடியேற்ற விதிமுறைகள் கடுமையாக்கப்பட்டு கைரேகைப் பதிவின் மூலம், வெளிநாட்டவர்களின் தகவல்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

இதுதொடர்பாக மலேசிய குடியுரிமைத் துறை அதிகாரிகள் தெரிவித்ததாவது;

தோட்டத் தொழிலாளர்கள், ஹொட்டல் வேலை செய்பவர்கள், தகவல் தொழில் நுட்ப வல்லுநர்கள் என மலேசியாவில் பணிபுரியும் வெளிநாட்டவரில் பலர், பல்வேறு பெயர்களில் கடவுச் சீட்டு வைத்துள்ளனர். இன்னும் பலர், தங்கள் சொந்த நாட்டில் குற்றம் செய்து விட்டு, மலேசியாவில் வேறு பெயர்களில் நடமாடி வருகின்றனர். இது போன்ற பின்னணி உடைய 3 ஆயிரம் பேரைக் கண்டறிந்துள்ளோம். அவர்களைத் தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. இதற்காக சர்வதேச பொலிஸாரின் உதவியையும் கோரியுள்ளோம் - என்றனர். (ந)

# பாகிஸ்தானுடன் 'கூடா நட்பு'


## என்கிறார் ஹிலாரி கிளின்டன்

வாஷிங்டன், டிசெ. 17

அமெரிக்கா, பாகிஸ்தான் இடையே உள்ள உறவில் விரிசல் அதிகரித்து வருவதாகத் தெரிவித்துள்ள அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன், பாகிஸ்தானுடனான நட்பு கூடா நட்பு என்று விமர்சனம் செய்துள்ளார்.

அமெரிக்க வெளியுறவு துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன், வொஷிங்டனில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது;

பாகிஸ்தான் பல்வேறு துறைகளில் சீர்திருத்தம் செய்ய வேண்டும். குறிப்பாக, விவசாயத்துறை, எரிசக்தித் துறைகளில் திட்டங்களைச் செயற்படுத்தினால் மட்டுமே போட்டி



நிறைந்த சூழ்நிலையில் பொருளாதார வளர்ச்சியடைய முடியும். மேலும் பாகிஸ்தானில் வரி செலுத்துவோரின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது. ஒரு சிலர் மட்டுமே வருமான வரி செலுத்த முன் வருகின்றனர். ஏராளமானோர் வரி ஏய்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். இது பாகிஸ்தானின் வளர்ச்சிக்கு ஏற்றதல்ல. எனவேதான் பாகிஸ்தானுக்கு நிதியுதவி செய்வதைக் காட்டிலும் ஆப்கானிஸ்தானின் வளர்ச்சிக்கு முழுமூச்சாக செயற்பட்டு வருகிறோம்.

அமெரிக்க, பாகிஸ்தான் நாடுகளிடையே தற்போது ஸ்திரத்தன்மையற்ற நிலை இருந்து வருகிறது. கடந்த சில ஆண்டுகளாகப் பாகிஸ்தானுடனான நட்பு சொல்லிக் கொள்ளும்படி இல்லை. இதை நாங்கள் எக்காலத்திலும் மறுப்பதற்கில்லை. பாகிஸ்தானுடனான நட்பு 'கூடா நட்பு' தான் - என்றார். (ந)

## ஏமாந்து போய் நிற்கும் இரண்டு வருடங்கள்



திருமதி
**சூ.மேரிதிரேசா கிறிஸ்ரீன்**

மலர்வு
24.07.1941

உதிர்வு
17.12.2009

அம்மா இரண்டு வருடங்களாக எப்படி அம்மா
எங்களைப் பார்க்காமல் எங்கள் குரலைக் கேட்காமல்
எங்களை வழிநடத்தாமல் உங்களால் இருக்க முடிந்தது??
இந்த இரண்டு வருடங்களும் நீங்கள்
இறைவனைப் பார்த்துக் கொண்டு ,
அவர் குரலைக் கேட்டுக்கொண்டு
அவரால் வழிநடத்தப்பட்டுக்கொண்டிருந்தால்
அதுதானம்மா அது மட்டும் தானம்மா எங்கள் நிறைவு
இறைவனே கண்ணீருடன் கை ஏந்தி நிற்கின்றோம்
எம் அன்னை என்றும் இனிய ராகத்தை அந்த அழகிய புஸ்பத்தை
உமது இல்லத்தில் நிரந்தரமாக ஒலிக்கச் செய்யும்
உமது திருப்பாதத்தை அலங்கரிக்கும் மலராக மாற்றிஅருளும்.

தொடரும் உங்கள் ஏக்கத்தோடு...
கணவர் , பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள்.

பெரிய விளான்,
இளவாலை.
(11717)(3.6.7)

## 22 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**நடராஜா சந்திரராஜா**
[போஸ்]
(குகன் ஸ்ரோர்
முன்னாள் உரிமையாளர்,
தலவாக்கலை)

தோற்றம்
20.02.1948

மறைவு
19.12.1989

திதி: 17.12.2011

அறிவைப் பெருக்கி அகிலம் போற்ற வாழ்வு என்னும்
கொடையை இவ் வையகத்தில் வாழவைத்த அப்பாவே
என்றென்றும் எம்முன் நிழல் போல இருந்து என்றும்
தங்கள் ஆசிகிடைக்கப் பிரார்த்தித்து தங்கள்
ஆத்மாசாந்தியடைய தினமும் வேண்டுகின்றோம்.


இல.311, பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்
(11718)(3.6.7)

என்றும் உங்கள் நினைவுகளுடன்...
குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
10 - 05 - 1940

ஆண்டவன் அடியில்
30 - 12 - 2007



**அமரர் வீரகத்தி ராஜா**

பலகோடி இன்பங்கள் இருந்தென்ன
பலகோடி உறவுகள் இருந்தென்ன - சித்தப்பா
இனியார்தான் துணை சித்தப்பா
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்களை எப்படித்தான் மறப்பது - சித்தப்பா
வேறு எனக்கு நிழலில்லை சித்தப்பா
பொல்லாத நோய்வந்து மறைந்ததுவோ!
உங்களின் அன்புக் குரல் நிதமும்
என் காதில் ஒலிக்குது சித்தப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிள்ளையாரிடம்
பிரார்த்திக்கின்றோம்.
உங்கள் பிரிவாலும் துயரத்தாலும் வாடும்

சரஸ்வதி (மகள்),
முருகையா (அண்ணா),
பராமகள்,
செயராணி
(மகள் - பிரதேச வைத்தியசாலை, சில்லாலை)

பன்னாலை, நெல்லிப்பழை.
(11715)(2.6.7)

## சனிப்பெயர்ச்சியை முன்னிட்டு விசேட யாகம்

யாழ்ப்பாணம், டிசெ.17

சாவகச்சேரி சந்திரசேகர வாரிவன நாதர் சிவன்கோயிலில் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிப்பெயர்ச்சியை முன்னிட்டு சனிமாற்ற விசேட யாகம் இடம் பெறவுள்ளது.

உமாசுதன் குருக்கள் தலைமையில் பல சிவாச்சாரியர்கள் இணைந்து நடத்தும் இந்த யாக நிகழ்வில் சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், கும்பம், மீனம், இடபம் ஆகிய இராசிகளில் பிறந்தவர்கள் கலந்துகொண்டு தமது கிரக தோஷங்களை நிவர்த்தி செய்ய லாம். (வ-207)

***

யாழ்ப்பாணம், டிசெ.17

யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரத ராஜப் பெருமாள் ஆலயத்தில் சனிப் பெயர்ச்சியை முன்னிட்டு விசேட நவக் கிரக ஹோமம் எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதில் நவக்கிரக தேவர்களுக்கு விசேட ஹோமம், அபி ஷேகம் செய்யப்பட்டு சனீஸ்வரனுக்கு 1008 அர்ச்சனைப் பூசையும் இடம்பெறும்.

இந்த நவக்கிரக ஹோம வழிபாட் டில் பங்குபற்றும் அடியவர்கள் எள் தீபம் ஏற்றி தமது கிரக தோஷ கிரியை வழி பாடுகளை நிறைவேற்றலாம். (வ-313)

## "அருள் ஒளி"மலர் 76 வெளியானது

யாழ்ப்பாணம், டிசெ.17

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆல யத்தால் வெளியிடப்படும் மாதாந்த ஆன்மிக சஞ்சிகையான "அருள் ஒளி" மலர் 76 வெளிவந்துள்ளது.

இந்த மாதாந்த சஞ்சிகையானது கந்தசஷ்டி விரதம், சித்திரைப் பௌர் ணமி விரதம் மற்றும் பல ஆன்மிக விட யங்களை உள்ளடக்கிய மலராக வெளி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

## யாழ்.பல்கலையில் துண்டுப்பிரசுரம்

யாழ்ப்பாணம்,டிசெ.17

யாழ்.பல்கலைக்கழக மாண வர்கள் 8 பேர் மற்றும் விரிவுரையாளர்கள் 5 பேரை அச்சுறுத்தும் துண்டுப் பிரசுரம் பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று முன்தினம் காணப்பட்டதாகக் கூறப் படுகின்றது.

அதில் எட்டு மாணவர்களது பெயர் களும் மூன்று விரிவுரையாளர்களது பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. பல்கலைக்கழக பொது அறிவித்தல் பலகை மற்றும் ஆண்கள் விடுதியில் நேற்று முன்தினம் இது ஒட்டப்பட்டி ருந்தது. பின்னர் அவை அகற்றப்பட்டன என்று கூறப்பட்டது.

'நாம் இலங்கையர் பாதுகாப்புப் படை' எனத் துண்டுப் பிரசுரத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டிருந்ததாக வும் தெரிவிக்கப்பட்டது. (உ-14)

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

மிகவும் சிறிய அரச உத்தியோகத்தர் குடும்பத் திற்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்ய கூடிய 30 வயதிற்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை. உணவு தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மா னிக்கலாம். 0755537060

**நியூரெக்ஸ் ரைல்ஸ் ரெயிலறிங்**

**வேலைக்கு ஆள் தேவை**

நான்கு ஆண்களும்,2பெண்களும்
கட்டிங்வெட்டி தைக்கக்கூடிய
அனுபவம் வாய்ந்தவர்கள். சம்பளம்
நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு கொள்ளவேண்டிய
இல. 0771387239
35A, பலாலி வீதி,
பரமேஸ்வரா சந்தி,
(பெற்றோல் செற் அருகில்)
யாழ்ப்பாணம்.
(11700)(6.6.7)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை *திருமதி கமலினி சிவயோகன்* அவர்களின் அன்புத் தந்தை
**பொன்னையா விநாயகமூர்த்தி**
அவர்களின்
மரணச்செய்தி கேட்டு துயரடைவதுடன் அவரது குடும் பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.இந்து மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்
(C/11714)(6,7,8)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### எமில் ஏபன்

யாழ். குருநகர் 136, பாங்ஷால் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பிரான்ஸை வசிப்பிடமாகக் கொண்டவரு மான எமில் ஏபன் (15.12.2011) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் யாழ். புனித சம்பத்தரிசியார் கல்லூரியின் பழைய மாணவரும், பிரான்ஸ் (O.B.I) பழைய மாணவர் சங்க அங்கத் தவருமாவார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். அன்னாரின் இறுதிச் சடங்கு பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

308, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம்.
(11761)(6-7-8)

தகவல்:
யேம்ஸ் எமில் (தந்தை)

### பொன்னுத்துரை செல்வராஜா

(பெரியாம்பி)



நல்லூர், 2 ஆம் குறுக்குத் தெருவை பிறப்பிடமாகவும், தற் போது கொக்குவில் மேற்கு, சிவகுரு லேனை (லக்சுமி பவனம்) வசிப்பிடமாகவும் கொண்ட பொன் னுத்துரை செல்வராஜா 15.12.2011 வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான பொன்னுத்துரை -தங்கம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற வர்களான கார்த்திகேசு (ஆயுள்வேத வைத்தியர்)- பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், யோகலஸ் சுமியின் அன்புக் கணவரும், சுஜோத், அஜந்தூரன், பிருந்தாவனி ஆகியோரின் அன்புத்தந் தையும், நித்தியானந்தத்தின் மாமனும், சிவராஜா- யசோதராதேவி, கணேசலிங்கம்-வினுதா, சிவயோகம்- நடராஜா, தவ நாதன்-பிறேமசுதா, மனோரஞ்சிதம்- ரஞ்சித்குமார், பாலேந்திரன்- சர்வேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சடாச்சரலக் ஷ்மி-நல்லையா தேசியர், நடராஜா மற்றும் அன்னம்மா, தனலட்சுமி- காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் தவபாக்கியம்- அமிர்தலிங்கம், கணேசமூர்த்தி- செல்வராணி ஆகி யோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின் னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"லக்சுமி பவனம்"
சிவகுருலேன்,
கொக்குவில் மேற்கு.
(C/6920)(6-7-8)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி நடராஜா தேவி



சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் ஸ்ரேசன் வீதி, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராஜா தேவி (14.12. 2011) புதன்கிழமை இரவு காலமானார்.

அன்னார் செ. நடராஜாவின் (கேசரி) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர் களான பொன்னையா-செல்லம் தம்பதி யரின் அன்பு மகளும், கிருஷ்ணமூர்த்தி, வசந்தி, கணேசபிள்ளை, நேசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்லையா- பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், தயானந்தராசா (லண்டன்), தயாளினி, மோகன்ராஜ் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், தர்மினி(லண்டன்), ஈஸ்வரன் (ஆசிரியர், யா/ நாவற்குழி ம.வி) ஆகியோரின் பாசமிகு மாமியும், அபிஷா, அபிநய மேனன், அம்ஸவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், இராஜதுரை (மட்டக்களப்பு), தர்மலிங்கம், மகேசன் (கனடா), வசந்தா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.12.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கிழக்கு, கட்டை யாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஸ்ரேசன் வீதி,
கோண்டாவில்.
(11759)(6-7-8)

தகவல்:
கணவர்,
பிள்ளைகள்.

# பாடசாலை விடுமுறையை பயனுள்ளதாக்குவோம்

**அடுத்த வருடப் புத்தகங்களைப் படி... படி என்று பிள்ளைகளைக் கரைச்சல் படுத்தாது. அவர்கள் விரும்புவது போல் ஓரளவு விளையாடவும் விடவேண்டும். பாமர விவசாயிகூட தனது நிலத்தில் தொடர்ந்து பயிர் செய்தால் விளைச்சல் குறைந்து விடும் என்பதற்காக தொடர்ந்து அந்த நிலத்தில் பயிர் செய்வதில்லை. அந்த விளை நிலம் போன்றதுதான் குழந்தைகளின் மனங்களும்... இதை உணர்வார்களா பெற்றோர்கள்?**

பாடசாலை விடுமுறை என்பது மாணவர்களுக்கு என்றுமே கொண்டாட்டம்தான். அதுவும் ஆண்டிறுதி விடுமுறை என்பது பெரும்பாலான மாணவர்களுக்கு சந்தோஷகரமானதாகவே காணப்படும். இக்காலத்தில் மாணவர், ஆசிரியர், பெற்றோர் என முத்தரப்பினருக்கும் பாடசாலை செல்வதற்கான பரபரப்பிலிருந்தும் விடுதலை கிடைக்கும் காலமாகும்.

மாணவர்கள் காலையில் எழுந்து கடமைகள் முடித்து பாடசாலை செல்லல், மதியத்தின் பின் பாடசாலையில் இருந்து வீடு திரும்புதல், பின் தனியார் கல்வி நிலையம் சென்று கற்றல், வீடுவந்து மாலைக் கடமைகளை நிறைவு செய்து பாடசாலை, வீட்டு வேலைகளையும் அடுத்த நாள் கற்றலுக்கான ஆயத்தப்பாடுகளையும் பாட மீட்டல் செயற்பாடுகளையும் மேற்கொள்ளல் என்றவாறாகக் கல்விச் சக்கரத்தினுள் மாணவர் சுழன்று கொள்கிறனர். இந்த விடுமுறை மாணவருக்கு ஆறுதல் தரும் இனிமையான காலமாகவும் பேணப்பட வேண்டும். இரண்டரை மணிநேரம் ஓடும் திரைப்படத்துக்குக் கூட 15 நிமிட நேர இடைவேளை வழங்கும் போது, வருடம் முழுவதற்கும் கல்வியே நற்கதியென இருக்கும் உங்கள் பிள்ளைகளுககு ஓய்வு தேவையில்லையா?

**விடுமுறையை வெற்றி கொள்வோம்**

பெற்றோர் ''அடுத்த வருடப் புத்தகங்களைப் படி... படி'' என்று அவர்களைக் கரைச்சல் படுத்தாது, அவர்கள் விரும்புவது போல் ஓரளவு விளையாடவும் விடவேண்டும். எமது பகுதிப் பாமர விவசாயிகூட தனது நிலத்தில் தொடர்ந்து பயிர் செய்தால் விளைச்சல் குறைந்து விடும் என்பதற்காக தொடர்ந்து அந்த நிலத்தில் பயிர் செய்வதில்லை. அதே போல்தான் குழந்தைகளின் மனங்களும் இந்த விடுமுறைக் காலத்தில் கலைத் திட்டத்துடன் தொடர்பான பாடமாக இல்லாமல் வாழ்வியற் கல்வியையோ, விடுமுறைக் காலக் குறுகிய பயிற்சிகளையோ பிள்ளையின் விருப்புடன் தேர்ந்தெடுத்துப் பயில வகை செய்யலாம்.

**தொலைக்காட்சிக்குள் புதைந்திருக்கும் பிள்ளையை மீட்டெடுத்தல்**

விடுமுறைக் காலத்தில் பிள்ளைகள் ரீவியே கதியென்றிருப்பார்கள். காட்டூன் சனல்கள், காமெடிச் சனல்கள், கிரிக்கெட் சனல்கள், ரீ.வி கேம் என்று சின்னத் திரைக்குள்ளேயே பிள்ளைகள் புதைந்து விடுவார்கள். இதனால் அவர்களின் உடலசைவுகள் செயற்பாடின்றி பருத்த உடலையும் சோம்பல் நிலையையும் அடைய வாய்ப்பேற்றப்படும். அத்துடன் மாணவர் பிற செயற்பாடுகள் எதிலும் நாட்டமில்லா நிலையையும் தோற்றுவிக்கும். எனவே இச்செயற்பாட்டிலிருந்து மீட்டெடுத்து அவர்களுக்கு சந்தோஷத்தை அள்ளி வழங்கும் செயற்பாடுகளில் ஈடுபடுத்தலாம் அல்லவா!

**சுற்றுலா ஒன்றை ஒழுங்கு செய்யலாம்**

விடுமுறைக் காலத்தில் உறவினர்கள், நண்பர்கள் சேர்ந்து சுற்றுலா ஒன்றை ஒழுங்கு செய்து ஒரு குறிப்பிட்ட நாள்களில் பிள்ளைகளை சந்தோஷத்தில் ஆர்வத்துடன், அவர்களுக்குப் புது அனுபவம் கிடைப்பதற்கும் வகை செய்யலாம். இதன் மூலம் உறவினர் மற்றும் நண்பர் குடும்பங்களுடனான உறவும் வலுவடைவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

**புத்தகப் பண்பாட்டை அறிமுகப்படுத்தல்**

விடுமுறைகாலத்தில் பிள்ளையின் வயதிற்கேற்ற புத்தகங்களை வாங்கி வாசிக்கக் கொடுக்கலாம். அல்லது அருகில் உள்ள நூலகத்துக்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு தமது வயதுக்கேற்ற புத்தகங்களை அறிமுகப்படுத்தலாம். இதன் மூலம் பிள்ளையை அவர்களாகவே நூலகம் சென்று படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி விடமுடியும்.

ஒரு பிள்ளையின் ஏனைய எல்லாத் திறமைகளையும் வளர்த்தெடுக்கவும் சிந்தனையைச் சீர்படுத்தவும் நூல் நுகர்வு பலமான அத்திபாரமிடும். உலகில் மேல் நிலைக்கு வந்த பலரும் புத்தகங்களே தங்கள் குரு, தோழன், வழிகாட்டி என்று கூறுகின்றனர். பிள்ளைகளைச் சிறந்த பிரஜைகளாக்க நூல் நுகர்வுப் பண்பாட்டை ஊக்கப்படுத்தலாமல்லவா?

**கைகொடுக்கும் கைத்தொழில் ஒன்றைக் கற்றல்**

''கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள் கவலை உனக்கில்லை ஒப்புக்கொள்'' எனும் கவிதை வரிகள் கைத்தொழில் ஒன்றைக் கற்பதன் அவசியத்தைப் பறைசாற்றி நிற்கிறது. இன்று தையல் வேலை, பூச்செய்தல், புடைவைகளுக்கு மெருகூட்டல், விதவிதமான பொம்மை செய்தல், பூமாலை செய்தல் போன்ற பல்வேறு கைத்தொழில்களில் ஒன்றையாவது கற்றுக் கொள்ளச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கலாம்.

பிள்ளைகள் சிறுவயதிலிருந்தே கைப்பணி வேலைகளில் ஈடுபடுவதால் அவர்களின் கற்பனைத் திறன் அதிகரிக்கும். எதையும் நிதானத்துடன் செய்யும் ஆற்றல் வளரும். மூளையின் வேலைத்திறன் அதிகரிப்பதோடு அறிவுக் கூர்மை ஏற்படவும் வகை செய்யப்படுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக பிள்ளை கற்றுக் கொள்ளும் அந்தக் கைப்பணியானது எதிர்காலத்தில் அந்தக் குடும்பத்தையே தாங்கும் பொருளாதாரத் தூணாகக் கூட மாற்றமடையலாம்.

**மரம், செடி வளர்ப்பில் ஆர்வத்தைத் தூண்டல்**

எமது பிரதேசத்தில் மரங்களை உற்பத்தி செய்வதற்கு ஏற்ற காலம் இதுதான். மரம், செடிகளின் பால் இயற்கையிலேயே பாசங்கொண்டவர்களாக உங்கள் பிள்ளைகளை உருவாக்கி நாளைய பசுமை உலகை உருவாக்க அவர்களுக்கு அடி அத்திபாரமிடவும் ஏற்றகாலமும் இது.

நல்ல நாற்றுக்களை வளர்க்க விரும்பும் உங்கள் பிள்ளைகளுக்கு ஆசைப்படும் நாற்றுக்களை வாங்கிக் கொடுத்து அவர்களையே பராமரிக்கச் செய்யலாம். இது அவர்களைப் பொறுப்புணர்ச்சி உள்ளவர்களாக்குவதுடன் மென்மனப்பாங்குள்ள பிரஜைகளாகவும் ஆக்குகிறது. இயற்கையில் இலை, செடி, கொடி, மரம், பூ, காய், கனி , அதன் அமைப்பு, செயற்பாடுகள் பற்றிக் கவனித்து சிந்தித்துவரும் பிள்ளை எதிர்காலத்தில் உயிரியல், தோட்டக்கலை, விவசாயம், வணவியல் போன்ற பாடங்களின் பால் ஆர்வம் ஏற்பட்டு அத்துறையில் பட்டங்கள் பெற்று அத்துறைசார் உயர் பதவிகளுக்கு வருவதற்கும் சந்தர்ப்பம் ஏற்படும்.

**வேற்று மொழி கற்க வகை செய்தல்**

பிள்ளைகள் பல புதிய ஆங்கில, சிங்கள மொழியிலான சொற்களை, வாக்கியங்களைக் கற்பதற்கு இந்தக் காலத்தைக் களமாகப் பாவிக்கலாம். விடுமுறை காலத்தில் தினந்தோறும் ஒரு சில சொற்களை, வாக்கியங்களைக் கற்றுவிட்டால் விடுமுறை முடிந்து பாடசாலை தொடங்கும் போது பிள்ளையின் அறிவுத் தொகுதியில் வேற்று மொழிச் சொற்களஞ்சியம் மேலும் வலுவடைந்து கொள்ளும்.

■ ப.அருந்தவம்,
ஆசிரிய ஆலோசகர்,
வலிகாமம் கல்வி வலயம்.

**மருத்துவச் சோதனைகளை நிறைவு செய்யலாமே**

பிள்ளைக்கு ஏதாவது மருத்துவச் சோதனைகளை செய்ய வேண்டியிருந்தால் பல் பிடுங்கல் போன்ற செயற்பாடுகள் செய்ய வேண்டியும் இருந்தால் இவ்விடுமுறை காலம் அந்தச் செயற்பாட்டுக்குச் சிறந்த காலமல்லவா. இதேபோல் குலதெய்வ வேண்டுதல்கள், மொட்டையடித்தல், தூரக் கோயில்களுக்கு சென்றுவரும் நேர்த்திக் கடன்கள் போன்றவற்றையும் இந்தக் காலத்திலே மேற்கொள்ளலாம். இதன் மூலம் பாடசாலை நாள்களில் பிள்ளை லீவுகள் எடுக்க வேண்டிய தேவை ஏற்படாது.

**சுயமாக தனது வேலையைச் செய்ய திசை முகப்படுத்தல்**

இக்காலத்தில் பிள்ளை தனது உடையைத் தானே துவைக்க, தனது பாதணிக்குத் தானே பொலிஸ் இட, தனது மேசையைத் தானே அலங்கரிக்க போன்ற சிறிய வேலைகளைப் பழக்கவும் இக்காலத்தைப் பயன்படுத்தலாம்.

**புதிது புதிதாக உணவுகளைச் செய்துண்ணல்**

விடுமுறைக் காலத்தில் பிள்ளைகள் விரும்பிய உணவு வகைகளை செய்வதுடன் புதிது புதிதான உணவு வகைகளையும் உருவாக்கி அனைத்து குடும்ப அங்கத்தவரும் சேர்ந்து உண்ணலாம். இது அன்றைய பொழுதை உல்லாசமாக்கும். நமக்கு புதிய வகை உணவு கிடைப்பதுடன் பிள்ளையும் உணவுப் பண்டம் தயாரிப்பதில் பயிற்சி பெறுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக இச் செயற்பாடு தூய்மையான போசாக்கு நிறைந்த உணவை உண்பதற்கும் வகைசெய்கிறது. உணவைக் குடும்பமே கூடி உருவாக்கி உண்ணும் போது குடும்ப உறவும் மேலும் வலுவடையும்.

**விமுறைக்காலத்தில் பெற்றோர்**

விடுமுறை விட்டதுமே பிள்ளைகளின் பாடசாலைச் சீருடைகளை சலவை நிலையத்துக்குக் கொடுத்து விரைவாக எடுத்து விடவேண்டும். இதேபோல் பிள்ளைக்கு புதிய சீருடைகள் தைக்க விரும்பினும் ஏற்கனவே உள்ள சீருடைகளை சீர் செய்ய விரும்பினும் பாடசாலை ஆரம்பிக்கும் காலம்வரை காத்திருக்காது நேரம் கிடைக்கும் போதெல்லாம் இவற்றை மேற்கொண்டு விடலாம். இதேபோல் பிள்ளை பாடசாலைக்கு செல்லும் போது புதிதாக வேண்ட வேண்டிய பொருள்களை கால நேரத்துடன் திட்டமிட்டு பாடசாலை தொடங்குவதற்கு குறைந்தது 15 நாள்களின் முன்பாகவே வாங்கி விடல் சிறந்தது. அத்துடன் கொப்பிகள், புத்தகங்கள் போன்றவற்றுக்கு உறையிட்டு பெயர் எழுதி பாடசாலைக்கு மாணவன் செல்வதற்கு தயார் நிலையில் இருப்பது சிறந்தது.

பிள்ளைகளின் விடுமுறையில் பெற்றோர் சுகமான அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளவும், எதிர்கால வாழ்க்கைக்கு அவர்களை வழிகாட்டவும் விடுமுறைகளைப் பயன் படுத்தலாம். பெற்றோரினால் சிறந்த முறையில் திட்ட மிட்டு செயற்படுத்தும் விடுமுறைச் செயற்பாடுகள் அடுத்துவரும் கல்வியாண்டுகளுக்கான உந்துதல்களாகவும் அமையுமென்பதில் ஐயமில்லை. ✱

# அதிர்ஷ்டத்தை கணிப்பிடுங்கள் (10)

சந்திர ஆதிக்கத்தில் பிறந்தவர்களது தன்மைகள் குறித்த விபரங்கள் இவ்வாரமும் தொடர்கிறது

### பிறப்பு எண் 2 விதி எண் 6

எளிதில் மற்றவர்களைக் கவர்வதிலும் நண்பர்களாக்கிக் கொள்வதிலும் கைதேர்ந்தவர்கள். மற்றவர்கள் இவர்களின் குறைகளைச் சுட்டிக்காட்டினால் வெறுப்புடன் பேசுவார்கள். திறமைசாலிகள், திட்டமிட்டுச் செயற்படுபவர்கள்.மனதில் தீமையான எண்ணங்களுடன் அவ்வப்போது செயற்படுவார்கள்

யாரிடமும் பேச்சை அளந்தே பேசுவார்கள். தன் மனதில் தோன்றும் எண்ணங்களை அப்படியே வெளியிடுவார்கள். குழந்தைகள் மீது அன்பு காட்டுவார்கள். புகழ் பெறும் ஆர்வமிருக்கும். எளிதில் காதல் வயப்படுவார்கள். பெரும் சோதனைகள் இவர்களுக்கு வருவதில்லை

**அதிர்ஷ்ட திகதிகள்**

1,10,19,28,6,15,24,7,16,25

**அதிர்ஷ்ட நிறங்கள்**

வெளிர் நீலம்,பச்சை,வெளிர் பச்சை,வெள்ளை

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**

முத்து,மரகதம், சந்திர காந்தக்கல், அக்கோமரின்,டெரிடாட், பெரில்,டைகர்ஸ்ஐ,ஜேட்

### பிறப்பு எண் 2 விதி எண் 7

நிர்வாகத்திறமை வாய்ந்தவர்கள் அன்புள்ளம் கொண்டவர்கள்.சிறந்த வாழ்க்கைத் துணையும் அமைந்து விடும். வெற்றி பெறுவதையே குறிக்கோளாகக் கொள்வார்கள். தெய்வ நம்பிக்கை அசைக்க முடியாதபடி இருக்கும். கலைஞானமும், தேர்ச்சியும் இருக்கும் பிற ருக்கு உதவும் நல்லகுணமுடையவர்கள்.

மனக்கவலையும் பயமும் உடையவர்கள். இயற்கையாகவே தைரியம் குறைந்தவர்கள். மனம்,உடல் முழுவதும் சந்திரனின் சக்தி பரவிக் காணப்படும்.

மனதைக் கட்டுப்படுத்தி நல்ல வழியில் சென்றால் மகத்தான புகழ் உண்டாகும். எப்போதும் தூய்மையாகவே காட்சிளிப்பார்கள் ஆரோக்கியமாக வாழ விரும்புவார்கள். கடினமாக உழைத்து முன்னேறுவார்கள். அன்பும் அழகும் வாய்ந்த வாழ்க்கைத் துணை அமையும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**

1,10,19,28,6,15,24,

**அதிர்ஷ்ட நிறங்கள்**

வெளிர் நீலம்,மஞ்சள்,வெளிர் பச்சை,வெள்ளை

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**

முத்து,ஓபல்,வைடூரியம்,சந்திரகாந்தக்கல், டைகர்ஸ்ஐ, ஜேட்

### பிறப்பு எண் 2 விதி எண் 8

உலக அனுபவமிக்கவர்கள். இளவயதிலேயே காதல் வயப்பட்டு விடுவார்கள். பொதுநல அக்கறை கொண்டவர்கள். மிகுந்த வசீகரமான தோற்றமுடையவர்கள். உடல் பலமுடையவர்கள். மனப்பயம் மிகுந்து தன்னைத்தானே குழப்பிக் கொள்வார்கள்.

புதுமையை விரும்புவார்கள்.எவரையும் மிக விரைவில் எடைபோட்டு விடுவார்கள் வாதாடும் திறமை மிக்கவர்கள்.பிறரிடம் கோபமாக நடந்து கொள்வார்கள். கடவுள் பக்தி அதிகம் உடையவர்கள்

பருவ வயதுக்குப் பின்னர் வாழ்க்கையில் அனைத்துச் சுகங்களையும் அனுபவித்து வாழ்வார்கள்.

உதவியென்று யார் கேட்டு வந்தாலும் இல்லை என்று கூறமாட்டார்கள். அஞ்சாத நெஞ்சத்தோடு செயற்படுவார்கள்.பெரிய மனிதர்களை மதிப்பார்கள்.



எத்துறையிலும் முதன்மை பெறுவதையும்,புகழ் பெறுவதையும் தன்னுடைய குறிக்கோளாகக் கொள்வார்கள்.

**அதிர்ஷ்ட திகதிகள்**

5,14,23,6,15,24,7,16,25

**அதிர்ஷ்ட நிறங்கள்**

வெளிர் நீலம்,பச்சை,வெளிர் பச்சை,வெள்ளை

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**

முத்து,வைடூரியம், சந்திரகாந்தக்கல், டைகர்ஸ்ஐ, வைடூரியம், இந்திர நீலம்.

### பிறப்பு எண் 2 விதி எண் 9

மனப்பலம் மிகுந்த இவர்கள், எதையும் துணிச்சலாக செய்து வெற்றி பெறுவார்கள். மிகவும் துணிச்சல் வாய்ந்தவர்கள். எதிலும் தலைமைப் பொறுப்பை ஏற்று நடப்பவர்கள்.

பலவிதமாக வாழ்க்கை அனுபவங்களை இளமையிலேயே பெற்று விடுவார்கள். வாக்குசாமர்த்தியம் மிக்கவர்கள். பலருக்கு நன்மைகளைச் செய்பவர்கள்

இவர்களின் நண்பர்கள் இவர்களால் நன்மை அடைவார்கள். வாய்ப்புக்கள் வலிய வந்து சேரும். எப்போதும் தூய்மையாகவே இருக்க விரும்புவார்கள்.

உத்தியோகம் மற்றும் சுயதொழிலிலும் நல்ல பொருளாதார வசதியுடன் வாழ்வார்கள்.கலை அறிவும்,பொது அறிவும் நிரம்பியவர்கள். குருபக்தியும்,இறைபக்தியும் மிக்கவர்கள்.அயராத உழைப்பின் மூலம் மிக்க உயர்ந்த நிலை அடைவார்கள்.

தாமதமான திருமண வாழ்க்கை நல்லபடியா அமைந்து விடும். மனிதருள் மாணிக்கமாகத் திகழ்வார்கள்.எளிமையே இவர்களின் தனித்தன்மை. ஆடம்பரம் பிடிக்காது.

**அதிர்ஷ்ட திகதிகள்**

5,14,23,6,15,24

**அதிர்ஷ்ட நிறங்கள்**

வெளிர் நீலம்,மஞ்சள்,சந்தனம்

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**

முத்து, வைடூரியம், சந்திரகாந்தக்கல், டைகர்ஸ்ஐ, பவளம், பிளட்ஸ்டோன்,கார்னட்,செவ்வந்திக்கல்.

**அதிர்ஷ்ட பெயர் மாற்றம்**

சந்திர ஆதிக்கத்தினர் தங்கள் பெயரை அதிஷ்டகரமானதாக்க சந்திர,சூரிய ஆதிக்க எழுத்துக்களையும்,விதி எண் சார்ந்த எழுத்துக்களையும் சரியான முறையில் முரண்பாடு இன்றிச் சேர்த்துப் பெயர் அமைக்க வேண்டும்.

கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி அதிஷ்டப்பெயரை அமைத்துக்கொண்டு வளமான வசியமான வாழ்க்கையைப் பெறலாம்.1ஆம் எண் பெயர்கள் மிகுந்த அதிஷ்டத்தை நல்கும் 10,19,37, 46,55,82,73 போன்ற எண்களின் வரிசையில் பெயரமைக்கவும்.

நல்ல விரைவான அதிஷ்டம் கிடைக்கும். விதி எண் வழுவாக இருந்தால் விதி எண் சார்ந்த அதிஷ்ட எண்ணுடைய பெயரை அமைக்கலாம். பெயரை அமைக்கும் போது மாத, வருட எண்களைக் கவனத்தில் கொண்டு பெயரமைக்கவும்.

நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், புரிந்தாலும் புரிந்து கொள்ளாவிட்டாலும் அதிஷ்டப் பெயரும் துரதிஷ்டப் பெயரும் தங்களுடைய சக்தி அதிர்வுகளை வெளியிட்டுக் கொண்டு ஒவ்வொரு மனிதனையும் அதன் சக்திக்கேற்ப வழிநடத்திச் செல்லும். அவரவருடைய பெயரானது அதிஷ்டகரமாக இருந்தால் அதிஷ்டமான அதிர்வுகளுடன் இயக்கங்கள் நடைபெற்று அனைத்தும் சுபமாக இருக்கும். வாழ்க்கை வெற்றிகரமாக அமைந்துவிடும்.

**அதிஷ்டப் பெயர் மாற்றம்**

| பிறப்பு எண் | கூட்டு எண் | அதிர்ஷ்டப் பெயர் எண் |
|---|---|---|
| 2 | 1 | 1,5,6,3 |
| 2 | 2 | 1,5,6,7 |
| 2 | 3 | 3,1,5 |
| 2 | 4 | 1,5,6 |
| 2 | 5 | 1,5 |
| 2 | 6 | 1,6 |
| 2 | 7 | 1,6,5 |
| 2 | 8 | 1,5,6 |
| 2 | 9 | 5,6 |

*(தொடரும்)*

# மார்கழியைப் போற்றுவோம்

தேவர்கள் துயிலெழும் அதிகாலை வேளையாகிய மார்கழி மாதமானது பல்வேறு சிறப்புக்களையுடையது.

தேவர்கள் துயிலெழும் அதிகாலைப் பொழுதாகிய இந்த மாதத்தில் நாமும் அதிகாலையில் துயில் எழுந்து நீராடி இறைவனைத் துதித்து வணங்குவது சகல விதமான சுகபோகங்களையும் நற்பாக்கியங்களையும் கிடைக்கவழி செய்யும்.

இது மார்கழி மாதம் பூரணை நன்னாள். அழகு மிளிரும் ஆபரணங்களை அணிந்தவர்களே, சீர்மிக்க செல்வச் சிறுமிகளே, உலகோர் புகழும்படி நோன்பு செய்து நீராடுவோம் வாருங்கள்.

நந்தகோபனின் மற்றும் யசோதையின் சிங்கக் குட்டியும் மேகத்தை ஒத்த கருமேனி, செந்தாமரை மலர் போன்ற கண்கள், சந்திரன் போன்ற முகம் இவற்றை உடையவனும் ஆகிய ஸ்ரீமத் நாராயணன், நமது நோற்புக்கான அருளைப் பொழிவான்.

இது ஸ்ரீ ஆண்டாள் பாடிய ''மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால் நீராடப் போதுவீர்! போதுமினோநேரிழையீர்! சீர்மல்கும் ஆயர்பாடிச் செல்வச் சிறுமீர்காள்! கூர்வேர் கொடுந்தொழிரிழையீர்! சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்! கூர்வேர் கொடுந்தொழிலன் நந்தகோபன்குமரன், ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம், கார்மேனிச்செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான் நாராயணனே நமக்கே பறை தருவான் பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்'' என்ற பாடலின் கருத்தாகும்.

மற்றும் ஆறாவது பாடலாக ஸ்ரீ ஆண்டாள் மார்கழியின் சிறப்பைப் பாடுகிறார்.

**''புள்ளும் சிலம்பின காண் புள்ளரையன் கோயிலில்**
**வெள்ளை விரிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?**
**பிள்ளாய்! எழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு**
**கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி,**
**வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை**
**உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்,**
**மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்**
**உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்!**

இதோ பறவைகள் குரலெழுப்பத் தொடங்கி விட்டன. இன்னுமா உறங்குகிறாய்? பறவைகளுக்கு அரசனான கருடனை வாகனமாகக் கொண்ட நம் நாயகனின் கோயிலில் ஊதுகின்ற வெண்சங்கின் பேரொலி உன் காதில் விழவில்லையா?

மகளான பூதகி தனது தனத்தில் தடவி வந்த நஞ்சை அவள் உயிருடன் உறிஞ்சிக் குடித்தவனும் கடும் வேகத்தில் வந்த வண்டி உடைந்து சிதையுமாறு உதைத்தவனும், திருப்பாற் கடலில் அறிதுயில் கொண்டிருப்பவனுமாகிய நாராயணனை, உள்ளத்தில் எண்ணித் தியானம் செய்யும் ரிஷிகளும் யோகிகளும் மெதுவாக எழுந்து ஹரி ஹரி என்று கூறும் ஒலி உனது உள்ளத்தில் புகுந்து குளிரவில்லையா? இனியாவது எழுந்திரு என்று பொருள் பொதிந்த பாடல்மூலம் கூறுகிறார்.

மற்றொரு பாடலாக இருபத்தொன்பதாவது பாடலில் இதே அதிகாலையில் வந்து உன்தாமரைத் திருப்பாதங்களைப் போற்றும் காரணத்தைக் கேட்டருள், ஆயர் குலத்தில் அவதரித்த நீ எங்கள் கைங்கரியங்களைப் பெற்றுக்கொள்ளாமல் விட்டுவிடுவது தகாது. நாங்கள் இங்கு வந்தது இன்று நீ தரும் அருளுக்காக மட்டும் அல்ல, இன்றைக்கு இந்தப் பிறவியில் மட்டுமன்றி இனிவரும் ஏழேழு பிறவிகளுக்கும் உன்னைத்தவிர வேறொன்றையும் பெரிதாக எண்ணாதவர்களாக உனக்கே ஆட்பட்டு உன் பணியையே செய்பவர்களாக நாங்கள் இருக்கும்படி அருள்புரிவாய்.

**இன்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு**
**உற்றாமே ஆவோம், உனக்கே நாம் ஆட்செய்வோம்.**
**மற்றை நம் காமங்கள் மாற்றே லோரெம் பாவாய்!**

திருப்பாவை பாடி ஆண்டாள் நாராயணனை துதித்து நாயகனாய் அடைவதற்கு மார்கழி மாதம் முழுவதும் நோன்பிருந்தார்.

ஸ்ரீ வில்லிபுத்தூரிலே ஆடிப்பூரத்தில் அவதரித்து பங்குனி உத்தரத்தில் அரங்கனையே மணாளனாக அடைந்தவள் கோதை. ஸ்ரீ ஆண்டாள் இன்றும் தனது பக்தியால் பாடிய பனுவல்களால் எமையெல்லாம் ஆண்டுவருகிறாள், பன்னிரு ஆழ்வார்களில் ஆண்டாள் ஒருவரே பெண் ஆவார்.

உமைக்கு இடப்பாகம் தந்த ஈசன் தனது இடது பாதம் தூக்கி நடராஜனாக திருநடனம் புரிவதும் மார்கழியில்தான். மார்கழி அதிகாலையில் எழுந்து வாசல் பெருக்கி வண்ணக் கோலமிட்டு விநாயகரை உருண்டை வடிவில் பிடித்து வைத்து அதில் பூசணிப் பூவைச் சொருகி வைப்பது இந்துக்களின் வழக்கமாகும்.

இந்த மார்கழி மாதம் முழுவதும் இறை தியானம் செய்ய வேண்டும். கீதையில் பகவானும் மாதங்களில் சிறந்த மார்கழியாக நானிருக்கிறேன் என்று கூறியுள்ளார், எனவே இந்துப் பெருமக்களாகிய நாமும் அதிகாலை நீராடி இறைவழிபாடு செய்து நல்வழியில் நடந்து சுபீட்சமான நல்வாழ்வை அடைவோம்.

* * *

பிரம்மஸ்ரீ ச.க. சுதர்சனக்குரு
பிரதம குரு,
ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோவில், புலோலி.

## சர்வதேச குறியீடுகள்

★ வெண்புறா, ஒலிவ் மரத்தின் இலை- சமாதானம்
★ சிவப்புச் சக்கரம்- வளர்ச்சி
★ சிவப்பு விளக்கு- மருத்துவமனை, ஆபத்து, நிறுத்துக
★ கறுப்புக் கொடி- எதிர்ப்பு, சோகம், மரணம்
★ மஞ்சள் கொடி- தொற்று நோய்
★ செஞ்சிலுவை- மருத்துவ உதவி
★ செம்பிறை- அரபு நாடுகளின் செம்பிறைச் சங்கம்
★ பச்சை விளக்கு- அனுமதி

ச.கௌசிகா,
தரம்-9ஏ, யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

## விடுகதைகளும் விடைகளும்

*1.சிவப்பாக இருக்கும். உடல் பெரியது. வாய்க்குள் மனிதர்கள் கடிதம் போடலாம். அது என்ன?*
*2.ஆயிரம் பேர் சேர்ந்து கட்டிய வீடு. ஒருவர் கல்லெறிந்தால் உடையும் வீடு. அது என்ன?*
*3.நின்றால் நிற்பான். இருந்தால் இருப்பான்.நடந்தால் கூட வருவான். அவன் யார்?*
*4.மழை பெய்தால் குடை பிடிப்பான். அவன் யார்?*
*5.நாங்கள் ஒன்றில் பார்த்தால் அந்த உருவம் எங்களுக்குத் தெரியும். அது என்ன?*
*6.சின்னத்தம்பிக்கு தொப்பியே வினை?*
*7.தண்டே இல்லாத வட்ட இலை அது என்ன?*
*8.உலகம் எல்லாம் படுக்கை விரித்து, அமைதியின்றி அலைகின்றான். அவன் யார்?*
*9.காட்டுக்குப் போனேன். இரண்டு விறகு கொண்டு வந்தேன் பகலில் ஒன்றை எரித்தேன். இரவில் ஒன்றை எரித்தேன். அது என்ன?*
*10.குட்டைப் பெண்ணுக்கு அழகழகான சட்டைகள்?*

விடைகள்

**1.அஞ்சல் பெட்டி 02.தேன்கூடு 03.நிழல் 04.காளான் 05.கண்ணாடி 6.தீக்குச்சி 7.அப்பளம் 8. கடல் 9.சூரியன், சந்திரன் 10.வெங்காயம்.**

நா.வைஷ்ணவி,
தரம்-6, யா/இந்து மகளிர் கல்லூரி.

## பேராசையால் வந்த ஆபத்து

(சென்றவாரத் தொடர்ச்சி)

அடித்து வீசிய முத்து திரும்பி வருவதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த வைரமும் இரத்தினமும் அதனை வெளியில் காட்டிக் கொள்ளாது ''உன்னைக் காணாமல் நாங்கள் இருவரும் எவ்வளவு துயரத்தில் இருக்கிறோம்'' என்று கூறினார்கள். இவர்களின் வஞ்சகக் குணத்தை அறியாத முத்து தனக்கு கடவுள் கொடுத்த வரத்தைப் பற்றி அவர்களிடம் கூறினான். தாங்களும் அத்தனை காலம் வாழ விரும்பிய வைரமும் இரத்தினமும் தங்களையும் அடித்துப் போடுமாறு ஏற்பாடு செய்து அந்த ஆலயத்தின் முன் கிடந்தனர். அவர்கள் முன் கடவுள் தோன்றி ''உங்களுக்கு என்ன வரம் வேண்டும்?'' என்றார்.


வைரம் ''நான் நூறு ஆண்டுகள் வாழ வேண்டும்'' என்றான். இரத்தினம் ''நான் இருநூறு ஆண்டுகள் வாழ வேண்டும்'' என்றான். உடனே வைரம் ''நான் நானூறு ஆண்டுகள் வாழ வேண்டும்'' என்றான். இரத்தினம் ''ஐந்நூறு ஆண்டுகள் வாழ வேண்டும்'' என்றான். இவர்களின் பேராசையைப் புரிந்து கொண்ட கடவுள் அருகில் இருக்கும் நதியைக் காட்டி ''இந்த நதியில் ஒருமுறை மூழ்கி எழுந்தால் நூறு வருடங்கள் வாழலாம் என்று கூறினார். உடனே இரத்தினமும் வைரமும் மாறி மாறி நீரில் மூழ்கி இறுதியில் இருவரும் இறந்தே விட்டனர்.


-ஆ.கபிலன்



# லண்டன்







லண்டன் பிரிட்டனதும் தலைநகரமாகும். இது உலகின் நான்காவது பெரிய நகரமாகும்.ஏழு மில்லியனுக்கு மேற்பட்ட குடித் தொகையைக் கொண்ட பெருநகர் லண்டன். மொஸ்கோவுக்கு அடுத்ததாக ஐரோப்பாவின் இரண்டாவது பெரிய குடித்தொகை கொண்டது உரோம மாகாணமான பிரிட்டனின் தலைநகரமான லண்டனியம் ஆக இருந்து பிரிட்டன் பேரரசின் மையமாகத் திகழ்ந்த லண்டன். இன்று ஐக்கிய இராச்சியத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 17 வீதமான பங்களிப்பை வழங்குகின்றது.

பல நூற்றாண்டுகளாக லண்டன் உலகின் முக்கியமான வணிக மற்றும் அரசியல் மையமாகத் திகழ்கின்றது.

லண்டன் ஐக்கிய இராச்சியத்தின் மிகப் பெரிய 100 நிறுவனங்களில் பெரும்பாலானவற்றின் தலைமையகங்களைக் கொண்டிருப்பதுடன், ஐரோப்பாவின் மிகப்பெரிய 500 நிறுவனங்களில் 100 நிறுவனங்களின் தலைமையகங்களையும் கொண்டுள்ளது.

அரசியல், நிதி, கல்வி, பொழுதுபோக்கு, ஊடகம், கலைகள், பண்பாடு போன்ற துறைகளில் லண்டனின் செல்வாக்கு அதனை உலகில் முக்கியமான ஒரு நிலையில் வைத்துள்ளது. இந்நகரம், உள்நாட்டினரதும், வெளிநாட்டினரதும் சுற்றுலாப் பயணத்துக்குரிய இடமாகவும் விளங்குகின்றது.

1948 ஆம் ஆண்டின் கோடைகால ஒலிம்பிய விளையாட்டுக்கள் லண்டனில் நிகழ்ந்தன.

மீண்டும் இது 2012 ஆம் ஆண்டில் லண்டனில் நடைபெறவுள்ளது. லண்டனில் நான்கு உலகப் பாரம்பரியக் களங்கள் அமைந்துள்ளன. இவை, லண்டன் கோபுரம், பழங்கால கிரீனிச் குடியிருப்புக்கள், ரோயல் தாவரவியல் பூங்கா; அரண்மனை, வெஸ்மினிஸ்டர் மடாலயம், புனித மார்கிரட் தேவாலயம் பகுதி என்பனவாகும்.

லண்டனில் பல வகையான மக்களுடன், பல பண்பாடுகளும், சமயங்களும் நிலவுகின்றன.

இந்த நகரத்தின் எல்லைக்குள் 300க்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுவதாகச் சொல்லப்படுகின்றது. இது ஐரோப்பிய ஒன்றியத்தின் மிகக் கூடிய மக்கள்தொகை கொண்ட மாநகரப் பகுதியாக விளங் குகிறது.

-வாணி-
யாழ்ப்பாணம்

## தமிழ் படிப்போம்




வாருங்கள்! வாருங்கள்!
வண்ணத் தமிழ் படிப்போம்
வசீகரத் தமிழ் படிப்போம்
வளமான தமிழ் படிப்போம்


ஆரியத்தின் மூலமொழி
திராவிடத்தின் தாய் மொழி
உலக முதன் மொழியென்று
மொழிந்தார் பாவாணர்

ஔவை மொழி பயில்வோம்
வள்ளுவர் மொழி படிப்போம்
கள்ளமற்ற நல்வழியால்
வெள்ளை மனமாய் வாழ்வோம்

வளர்ப்பது தமிழெனும்
-எண்ணத்தால்
வளமான தமிழ் பாய்ச்சுவோம்
வாக்குத் திறமை கூட்டி
வசீகரத் தமிழாய் கொட்டுவோம்



'சில்றன் வேள்ட்' சிறுவர் பாடசாலையின் வருடாந்தக் கலைவிழா அண்மையில் யாழ். சன்மார்க்க வித்தியாலயத்தில் நடைபெற்றது. அதில் இடம்பெற்ற கலை நிகழ்வில் வேடிக்கை காட்டும் சிறுவர்கள்.



# வாலுக்கு ஆசைப்பட்டு தலையை இழக்காதே

நம்மில் பலர் வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சியைத் தேடி அலைகிறோம். எங்காவது சென்றால் நமக்கு மகிழ்ச்சி கிடைக்கும் என்றும், ஏதாவது புதிய செயல்களைச் செய்தால் மகிழ்ச்சி கிடைக்கும் என்றும் நம்புகிறோம்.

விளம்பரங்கள் காட்டும் புதிய வழிகளை மகிழ்ச்சிக்கான வழிகளாக ஏற்று நம்பிக்கைகளை உருவாக்கி, அவற்றிற்காக நமது நேரத்தையும், பணத்தையும் உழைப்பையும் செலவழிக்கிறோம்.

நமது உள்ளுணர்வுகளின் வழிநடத்தலுக்குச் செவிமடுப்பதற்குப் பதிலாக, நமது புலன்களையே அதிகம் நம்புகிறோம். புலன்களுக்கு அழகாகவும் ஈர்ப்பாகவும் இருப்பவை நம் உண்மையான தேவைகள் என்று அலைந்து, அதன் பின்னால் ஓடிக்கொண்டிருக்கிறோம். இப்படியாக உண்மையை ஏற்றுக் கொள்ள முடியாதவர்களாகவும் இன்னும் சொல்லப் போனால், உண்மையான நீடித்த மகிழ்ச்சிக்குப் புறம்பானவற்றையே உண்மையான, மகிழ்ச்சிக்கான வழியாகவும் நம்பிக் கொண்டும் அதையே வாழ்ந்து கொண்டும் இருந்து வருகிறோம்.

மகிழ்ச்சியைத் தேடி அலைந்த ஒரு நாயின் கதை இது. அந்த நாய்க்குக் கொஞ்ச நாளாகவே ஒரே வருத்தம். தன் வருத்தத்திற்கு காரணம் அதன் வால்தான். அந்த வால் நேராக இல்லாமல் சுருண்டு இருந்ததால் அது தன் ஆளுமையைப் பாதிக்கின்றது என அந்த நாய் நினைத்தது. அதை யாரோ சொல்லிக் காட்டியதும் அது இன்னும் காயப்பட்டுப் போனது. அதனால் எப்படியாவது தன் வாலை நிமிர்த்தி விடவேண்டும் என்று முடிவு செய்தது. வாலை நிமிர்த்தி விட்டால் தனது மகிழ்ச்சி நிறைவாகிவிடும் என நம்பியது.

அதற்காகப் பல நாள்களாக, தன் வாலை எப்படியெல்லாம் நிமிர்த்த முடியும் என ஆராய்ச்சியில் இறங்கியது. ஒருமுறை தனது சக நாய்களிடம் கூறி, அவற்றின் வாயால் அதன் வாலைப் பிடித்து நிமிர்த்தச் சொன்னது. ஆனால் பலமுறை செய்தும் பலனில்லாமல் போனது. மேலும், ஒருநாள் ஒரு குழாயில் தன் வாலை வைத்து முக்கால் மணி நேரமாக அசையாமல் நின்று, அதன் பின் மெல்ல தன் வாலை இழுத்துப் பார்த்தது. ஆனால் வால் நிமிர்ந்தபாடில்லை. என்ன செய்வதெனப் புரியாமல் அது திகைத்தது.

திடீரென அந்த நாய்க்கு ஒரு புதிய யோசனை தோன்றியது. அந்த ஊரின் வழியாகச் செல்லும் ரயில் தண்டவாளத்தில் தனது வாலை வைத்து, அதன் ஒவ்வொரு சக்கரமும் தனது வாலில் ஏறிச் செல்லவிட்டால் நிச்சயமாக அதன் பளுவால் தன் வாலைக் கொஞ்சம் கொஞ்சமாக நிமிர்த்தி விடலாம் எனக் கனவு கண்டது. அதை அப்படியே செய்து பார்க்கத் துணிந்து, தனது வாலைத் தைரியமாக ரயில் தண்டவாளத்தில் வைத்து ரயிலுக்காகக் காத்திருந்தது.

ரயிலும் வந்தது. அதன் ஒவ்வொரு சக்கரமும் அதன் வாலில் ஏறஏற வலி தாளாமல் துடித்தது. ஆனால் மனதின் ஆழத்தில் ஒரு மகிழ்ச்சி. இன்னும் கொஞ்ச நாளில் தனது வால் நிமிர்ந்து தன் ஆளுமையை வளர்த்துவிட முடியும் என நம்பியது. அந்த நம்பிக்கைக்கு முன்னால், இந்த வலி ஒன்றும் பெரிய வலியே அல்ல எனத் தனக்குள் ஆறுதல் சொல்லிக் கொண்டது.

ரயில் மெல்லத் தன்னைக் கடந்து சென்றதும்.. தன் முயற்சி வெற்றி பெற்றுள்ளதா எனப் பார்ப்பதற்காக, மெல்லத் திரும்பிப் பார்த்தது. மகிழ்ச்சிக்குப் பதிலாக அதற்கு அதிர்ச்சிதான் காத்திருந்தது.

ரயிலின் பளுவால் அதன் வால் துண்டிக்கப்பட்டு, அது ரயில் சக்கரத்தோடு ஒட்டிக்கொண்டுவிட்டது. இப்போது நாய் முன்பை விட அதிகமான வருத்தத்துடன் காணப்பட்டது. இந்த முயற்சிக்கு முன்பு, குறைந்தது வாலாவது இருந்தது. இப்போது நிமிர்த்துவதற்கு மட்டுமல்ல, குறைந்தபட்ச அழகிற்குக்கூட வால் இல்லாமல் போய்விட்டது. தன்னையே அது மிகவும் நொந்து கொண்டது. அந்த இடத்தை விட்டுச் சென்றால் வேறு ஏதாவது நாய்கள் பார்த்துவிட்டால் , 'மொட்ட வால் நாய்'; 'மொட்ட வால் நாய்' எனக் கிண்டல் செய்யுமே என்ற பயத்தில் வேறு எங்கும் செல்வதற்குப் பயந்தது.


சற்று நேரம் கலவரமடைந்த பின் அந்த நாய்க்கு ஓர் புதிய யோசனை பிறந்தது. மேற்குப் புறமாகத் தன் வாலைத் துண்டித்துச் சென்ற ரயில் மீண்டும் இவ்வழியாகத்தானே வரும். அப்படி வரும்போது தன்னுடைய துண்டான வாலை எப்படியாவது பிடித்து ஒட்ட வைத்துக் கொள்ளவேண்டும் என எண்ணியது. வாலை நிமிர்த்தியதெல்லாம் போதும், இனிவால் நிமிராவிட்டாலும் பரவாயில்லை. இருக்கவேண்டிய வால் கிடைத்தாலே போதும் என எண்ணியது.

அந்த ரயில் திரும்ப வருமென மேற்குப் புறமாக தலையை வைத்துக் காத்திருந்தது. பசி மயக்கம். தூக்க கலக்கம். மெல்ல தண்டவாளத்தின் மீது தலையை வைத்துத் தூங்கிவிட்டது. சிறிது நேரம் கழித்து ரயில் வந்தது. ஆனால் அந்த நாய் எழுந்திருக்கவில்லை. இந்தமுறை அதன் தலை துண்டிக்கப்பட்டு இறந்தது.

''வாலுக்கு ஆசைப்பட்டு தலையை இழக்காதே'' என்று பெரியவர்கள் கூறுவார்கள். மகிழ்ச்சியின்றி வாழ்பவர்களின் நிலை அனைத்தும் வாலுக்கு ஆசைப்பட்டு தலையை இழந்த கதைதான். அவர்கள் துன்பத்தையும் உணராமல் இன்பத்தையும் உணராமல் நினைப்பில் வாழ்ந்து, வாழ்க்கையை அர்த்தமற்றதாக மாற்றிக் கொள்கிறார்கள். சிறிய விஷயங்களுக்கு ஆசைப்பட்டு பெரியவற்றில் கோட்டை விடுகின்ற மனிதர்களாகவே நம்மில் பலர் வாழ்கிறோம். உண்மையான நீடித்த மகிழ்ச்சி என்பது, அற்பமான புலன் சார்ந்தவற்றில் கிடைப்பதில்லை. உன்னதமானவற்றை நேர்த்தியாகச் செய்வதில்தான் அடங்கியிருக்கின்றது.

# அவனருளின்றி அவனடி தாழ்தல் அரிது

இ- மணி



யமுனோத்திரி

(சென்றவாரத் தொடர்ச்சி)




இமயமலைப்பிரதேசத்தில் உத்தர கண்டத்தில் அமைந்துள்ள புனித ஸ்தலங்களுள் ஒன்றான யமுனோத்திரியை நோக்கி எமது பிரயாணத்தை மேற்கொண்டோம். சாரோதாம் (நாற்படை வீடு) என்று அழைக்கப்படும் நான்கு புனித ஸ்தலங்களுள் முதலில் தரிசிக்க வேண்டிய தலம் இதுவாகும். இத்தலம் இமய மலைத் தொடரில் 3,165 மீற்றர் (10550 அடி) உயரத்தில் அமைந்துள்ளது. இங்கேயே யமுனா நதி உற்பத்தி உற்பத்தியாகின்றது. இவ்வாலயம் பனிமூட்டம் காரணமாக சித்திரை மாத அக்ஷய திருதியில் திறக்கப்பட்டு தீபாவளிப் பண்டிகையுடன் மூடப்படுகின்றது. மிகுதிக் காலமான நவம்பர் தொடக்கம் ஏப்ரல் வரையான காலத்தில் தேவர்கள் வந்து இவ்வாலயத்தைப் பூஜிப்பதாகக் கூறப்படுகின்றது.

ரிஷிகேசத்திலிருந்து பாகீரதி நதிக்கரையின் இடப்புறமாக நரேந்திரநாகர், சம்பா, தெஹ்சி, தராசு, பிரம்மகால், பார்கோட், சேனாசட்டி ஆகிய ஊர்களினூடாக 235 கிலோமீற்றர் பிரயாணம் செய்து ஹனுமான் சட்டி என்ற இடத்தை அடைந்தோம். இங்கே ஹனுமான் கங்கை பக்தர்களை வரவேற்கிறது. ஹனுமான் கங்கையும் யமுனையும் ஹனுமான் சட்டியிலேயே சங்கமமாகின்றன. பெயர் ஹனுமான் சட்டி என்று இருந்தாலும் அங்கு ஆஞ்சநேயர் கோவில் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. சற்றுத் தொலைவில் லக்ஷ்மி நாராயணர் கோவில் ஒன்று காணப்பட்டது. இங்கிருந்து சற்றுத் தூரத்திலுள்ள கர்சாலி என்ற ஊரில் யமனுக்குக் கோயில் இருப்பதாகக் கூறினார்கள். அது தீபெத்தின் எல்லையில் இருப்பதாகக் கூறப்பட்டதால் நாம் அங்கு செல்ல முயற்சிக்கவில்லை. (எல்லைக்கு அப்பால் செல்வதற்கு சீன அரசாங்க விசா தேவை) அது மட்டுமல்லாமல் பாதை கஷ்டமானதும், கரடுமுரடானதும் செங்குத்தான மலை தாண்டி செல்ல வேண்டியும் உள்ள தாகவும் இருப்பதாகக் கூறினார்கள். அதாவது ஹனுமான் சட்டி 2134 மீற்றர் உயரமானது. யமுனேந்திரி 3165 மீற்றர் உயரமானது) கால்நடையாக மலை யேறி மிகவும் கஷ் டப்பட்டு யமுனா தேவி ஆலயத்தைச் சென்றடைந்தோம். எங்கும் பனிமூட்டம். ஒரே குளிர். கைகால்கள் எல்லாம் நடுங்குகின்றன. கைகளி லுள்ள கையுறைக ளைக் கழற்றியவுடன் கைகள்யாவும்விறைத்து விட்டன. கதைக்க இயலாத நிலை. மூச்சு வாங்கிய நிலையில் பலர் கஷ் டப்பட்டார்கள் சிலர் தலையில் பொருட்களைச் சுமந்த வண்ணம் 'ஜமுனா மாய்க்கு ஜெய்' என்றும் 'கங்கா மலைக்கு ஜெய்' என்று ஓலமிட்டவாறே மலையேறினார்கள். சிலர் குதிரைகளிலும் சிலர் தண்டியிலும் (தண்டி என்பது ஆளை ஒரு கதிரையை நான்கு பேர் தோளில் சுமந்து வருவது) வந்தார்கள்.

யமுனோத்திரியை அடைந்ததும் அப்பகுதி நீலவானங்கள் இருண்டு காட்சியளித்தன. குளிர்காற்று பலமாக வீசிக் கொண்டிருந்தது. ஆலயத்தின் அருகிலே யமுனை ஆவேசமாகப் பாய்ந்து கொண்டிருந்தது. எமது களைப்புத் தீர நீராடுவோம் என்று ஆற்றிலிருந்து ஒரு சொம்பு நீரை எடுத்து எமது காலில் ஊற்றினோம். அது ஐஸ்கட்டி போல் குளிர்ந்தது. எம்மால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. கொஞ்சம் நீரை மட்டும் தீர்த்தமாகப் பரிகினோம். யமுனை நீர் ஒருவாய் பருகினால் பெரிய யாகங்கள் செய்த புண்ணியம் கிடைப்பதாகக் கூறுகின்றார்கள்.

*(தொடரும்)*

# நம்பிக்கை

-பாஷோவின் கரும்பலகை-

பாஷோ அந்த ஆற்றங்கரையில் நின்று கொண்டிருந்தார். ஆறு வறண்டு கிடந்தது. ஓர் இளைஞர் மிகுந்த கவலையோடு பாஷோவின் அருகில் வந்தார்.

"என் வாழ்க்கை சூன்யமாக இருக்கிறது.. ஒரே தோல்விகள்... என்னால் இனிமேல் ஜெயிக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்குப் போய்விட்டது..? இன்னமும் நான் எந்த நம்பிக்கையில் காத்திருக்க வேண்டும்? செத்துவிடலாம் போல் இருக்கிறது..."

பாஷோ புன்னகைத்தார்.

"என்னோடு வாருங்கள்..." என்று அந்த ஆற்றுக்குள் இறங்கினார். வெறும் மணல். இருவரும் அந்த மணலில் நடு ஆற்றில் நின்று கொண்டிருந்தார்கள்.

"இதன் பேர் என்ன? என்றார் பாஷோ.

"ஆறு..."

"என்ன கொடுமை இது? ஒரு துளி தண்ணீர் ஓடவில்லை... இதுவும் அதோ மேலே இருக்கிற தரை போலத்தான் இருக்கிறது. இதை மட்டும் ஆறு என்கிறீர்கள்... மேலே இருக்கிற அதை மட்டும் தரை என்கிறீர்கள்.. முட்டாள் தனமாக இல்லையா"

அந்த இளைஞர் பாஷோவைப் பார்த்தார்.

"இல்லை பாஷோ... இதில் தண்ணீர் வந்துவிடும்.. எனக்கு நம்பிக்கை இருக்கிறது..."

பாஷோ சிரித்தார்.

"உங்கள் கட்டுப்பாட்டில் இல்லாத ஒன்றின் மேல் இவ்வளவு நம்பிக்கை வைக்கிறீர்கள்.. உங்கள் வெற்றியும் தோல்வியும் உங்களிடம் இருக்கிறது... உங்கள் மேல் நம்பிக்கை வைக்கக் கூடாதா?"

இளைஞர் மௌனமாக இருந்தார்.

"இதில் தண்ணீர் வந்துவிடும் என்ற நம்பிக்கையில்தான் இந்த ஆறு தனது பெயரை இழக்காமல் இருக்கிறது... தண்ணீர் வந்துவிடும் என்ற நம்பிக்கையில்தான் அதோ அந்த ஊரே காலி செய்யாமல் காத்திருக்கிறது... சம்பந்தமே இல்லாத விஷயத்தில் நீங்கள் காட்டும் நம்பிக்கை ஏன் உங்கள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் காட்டக்கூடாது? தண்ணீர் இல்லை என்பதற்காக இந்த ஆறு தரையோடு தன்னை சமன்படுத்திக் கொள்வதில்லை. பள்ளமாகவே இருக்கிறது... பள்ளமாகவே இருந்தால்தான் அதில் தண்ணீர் வர வாய்ப்பு உண்டு.. எதை அடைய வேண்டுமோ அதற்காக உங்களைத் தயார்ப்படுத்திக் கொள்வதின் மூலம்தானே அதை அடைய முடியும்? பள்ளமாக இருந்தால் தான் தண்ணீர் வரமுடியும் என்பதுதானே இயற்கையின் விதி"

அந்த இளைஞர் மலர்ந்தார்.

பாஷோ தனது கரும்பலகையில் எழுதினார்.

# விசர் நாய்க்கடிக்கு மருந்து கண்டுபிடித்த

# லூயிஸ் பாஸ்டர்

(சென்றவாரத் தொடர்ச்சி)

- அருணா தர்மலிங்கம்



1854 ஆம் ஆண்டு 'லீல்' பல்கலைக்கழகத்தில் இரசாயனப் பேராசிரியராகவும் விஞ்ஞானத்துறைத் தலைவராகவும் திகழ்ந்தார். பின்னர் பிரான்ஸ் பாஸ்டர் கழகத்தின் தலைவராக இறுதிக்காலம் வரை பணியாற்றினார். முதலில் பௌதிகத் துறையிலும் பின்னர் இரசாயனத் துறையிலும் ஆராய்சிகளை மேற்கொண்ட லூயிஸ் பாஸ்டர் பக்ரீரியாக்கள் (Bacterias) என்ற நுண்ணியிர் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு மருத்துவத்துறையில் ஓர் உன்னத புரட்சியை உண்டு பண்ணினார், திராட்சையிலிருந்து தயாரிக்கப்படும் வைன் (Wine) அடிக்கடி பழுதடைந்து ஒருவகை நுண்ணுயிர் திராட்சை ரசத்தைப் புளிக்கச் செய்வதும் மற்றொருவகை நுண்ணுயிர் வைன் பானத்தை முற்றாகக் கெடச் செய்வதுமே இதற்குக் காரணம் என்று கண்டு பிடித்தார். ஒரு குறிப்பிட்ட வெப்ப நிலையில் வைனை வைத்தால் அது கெடாமல் இருக்கும் என்பதனையும் அறிந்து கொண்டார். பசுவி லிருந்து கறந்த பாலைக் கெடாமல் பாதுகாக்கவும் தற்போது பாஸ்டர் முறை பயன்படுகிறது.

சுமார் நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன் பிரான்ஸில் பட்டுப்புழுக்கள் நோயினால் தாக்கப்பட்டு அழிந்தன. பிரான்ஸ் அரசாங்கத்தின் வேண்டு கோளுக்கு அமைவாக பாஸ்டர் இந்தநோய் பற்றி நன்கு ஆராய்ந்து நோயுற்ற புழுக்களை அழித்துவிட்டு நல்லநிலையில் உள்ள புழுக்களின் இனவிருத்திக்கு வழிசமைத்தார்.கால்நடைகளுக்கு 'அந்திராக்ஸ்' என்னும் ஒரு வகை நோய் வராமல் தடுப்பதற்கு அம்மைப் பால்போன்ற தடுப்பு மருந்தையும் தயாரித்தார். இம்முறையைப் பின்பற்றியே பின்னர் 'டைபாயிட்', மஞ்சள் காமாலை, தொண்டை அடைப்பான் போன்ற தொற்று நோய்களுக்குத் தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

வெறிநாய் கடித்தால் அதைக் குணமாக்க 'ஸீரம்' என்ற மருந்தையும் கண்டு பிடித்துப் பாதிக்கப்பட்டோரின் இன்னுயிரைக் காப்பாற்றினார் என்பது நிதர்சனமாகும்.

*(முற்றும்)*

# ஒரு குழந்தை அழுகிறது

-கவிஞர் கண்ணதாசனின் கடைசிப் பக்கம்-

அதோ, அங்கே ஒரு குழந்தை அழுது கொண்டிருக்கிறது.

அதை அப்படியே அழ விடுங்கள்

அது ஒன்றும் பசியால் அழவில்லை.

தொடர்ந்து அழ வேண்டுமே; அழுவது எப்படி? என்று அது ஒத்திகை பார்க்கிறது.

இறைவன் முதலில் அதற்குக் கற்றுக் கொடுக்கும் வித்தை அதுதான்.

பிறந்து சில நாள்கள் வரை அது அழுமே தவிர, அதன் கண்களிலிருந்து கண்ணீர் வராது.

அது ஏன்...?

அதன் பெயர்தான் ஒத்திகை!

நாகரிகச் சட்டை போட்டுக் கொண்டு ராஜா வேஷத்து வசனத்தைப் பேசும் நடிகன், மேடையில் அரங்கேறும் போதுதானே ராஜா வேஷத்துச் சட்டை போடுகிறான்.

குழந்தையும் அப்படித்தான்.

மனிதரின் முகங்களை எப்போது அது அடையாளம் கண்டு கொள்ளத் தொடங்குகிறதோ, அப்போதுதான் அதன் கண்களில் கண்ணீர் வரத் தொடங்குகிறது.

இதோ, அதுதான் தாய் என்று அடையாளம் கண்டு கொண்டு முகம் பார்க்கிறது. அதன் கண்கள் கண்ணீர் வடிக்கின்றன.

உனக்கு ஒருநாள் சந்தோஷம்; எனக்கு எவ்வளவு நாள் தலையெழுத்தோ?

இனி நான் செய்யப் போகிற பாவங்களுக்கோ, அனுபவிக்கப் போகும் துன்பங்களுக்கோ எந்த வகையில் நான் பொறுப்பு?

உங்கள் பள்ளியறையில் உங்களிடம் வேண்டிக் கொண்டு இந்தப் பூமியிலே நான் ஜனித்தேனா?

உங்கள் ஆச்சரியக் குறியில் உருவான கேள்விக் குறியில் உருவான கேள்விக்குறி நான். உங்கள் ஆதங்கத்தில் வந்து விழுந்த மிருதங்கம் நான்.

தாயே! என்னைப் பெறுவதற்காக நீ மிகுந்த சிரமப்பட்டதாகப் பெருமைப்படுகிறாயா?

உனக்குப் பத்து மாதம் தானே சிரமம். எனக்கு எத்தனை வருசமோ? இனி நான் எத்தனை கேள்விக் குறிகளுக்கு ஆச்சரியக் குறியாக இருக்கப் போகிறேனோ?

புஷ்பங்களைப் போல மலர்ந்தோம், மறைந்தோம் என்றில்லாத மனித வாழ்க்கையில், என்னை உருவாக்கும் பொறுப்பை மட்டும்தானே நீ ஏற்றுக் கொண்டாய்?

*(தொடரும்)*

# சிறுகதை எழுதுவது எப்படி?

(சென்றவாரத் தொடர்ச்சி)



### திருத்தி எழுதுதல்

சிறுகதை எழுதி முடிந்ததும் அவசரப்பட்டு பத்திரிகைகளுக்கு அனுப்பாதீர்கள். அதைச் சிறிது காலம்- சில மாதங்களுக்காவது வைத்திருந்துவிட்டுத் திரும்பவும் வாசியுங்கள். அப்போது அதில் உள்ள பிழைகள் சில உங்களுக்கே தெரியவரும். பிழைகளைத் திருத்தி எழுதக் கதையில் மெருகு ஏறும். உலகில் தலைசிறந்த இலக்கியங்கள் எல்லாம் பல முறை திருத்தி எழுதப்பட்ட இலக்கியங்களே!

கல்வி கற்ற குடும்பமானால், நீங்கள் எழுதிய கதையை குடும்ப உறுப்பினர்கள் சிலரிடம் வாசிக்கக் கொடுங்கள். அவர்கள் உங்கள் நலனினும் உங்கள் கதையின் தரத்திலும் அக்கறை உள்ளவர்கள். நல்ல கருத்துக்கள் சிலவற்றைச் சொல்லலாம். அவை பொருத் தமானவையாக இருந்தால் அவற்றையும் உள்ளடக்கிக் கதையைத் திருத்தி எழுதலாம். எக்காரணம் கொண்டும் வெளி ஆள்களிடம் கதையை வாசிக்கக் கொடுக்காதீர்கள். அவர்களில் சிலர் அக்கறை இல்லாமலும் உங்கள் உற்சாகத்தைக் கெடுக்கும் நோக்கத்துடனும் கதையை மட்டந்தட்டிப் பேசவும் கூடும்.

### விமர்சனம்

ஒரு கதை பிரசுரிக்கப்பட்ட பிறகு அது பொதுச் சொத்தாகின்றது. அது பற்றி யாரும் கருத்துக் கூறலாம். அவற்றில் நல்லவை இருந்தால் ஏற்றுக் கொள்ளுங்கள். அல்லாதனவற்றைத் தட்டிவிடுங்கள். தூசி தட்டுவது போல!

ஒவ்வொரு படைப்பாளிக்குள்ளும் ஒரு விமர்சகன் இருக்கின்றான். எழுத்தாளன் தான் எழுதுவதைப் பல முறை சுயவிமர்சனம் செய்தே எழுதுகிறான். அதே நேரத்தில் தங்களை விமர்சகர்கள் என்று கூறிக்கொள்பவர்களும் சிலர் இருக்கிறார்கள். அவர்களுடைய எழுத்தை எழுத்தாளன் மிகுந்த எச்சரிக்கையுடன்தான் வாசிக்க வேண்டும். அநேகமான விமர்சகர்கள் இலக்கியம் படைக்க முயன்று தோற்றுப் போனவர்களே! எனவே அவர்கள் இலக்கியம் படைப்பவர்களை விழுத்த வேண்டும் என்ற காழ்ப்பு உணர்வுடனேயே கருத்துக்களை உதிர்ப்பார்கள். அவற்றில் நல்லன இருந்தால் ஏற்றுக் கொள்ளுங்கள். பிழையானவை பற்றிக் கவலைப்படாதீர்கள்!. இக்கருத்துக்கள் உங்களை ஒன்றும் செய்யமாட்டா!

### ஏன் எழுதுகிறோம்?

எங்களது கருத்துக்களை கடதாசியில் பதித்து மற்றவர்களுக்கு வாசிக்கக் கொடுக்கவே எழுதுகிறோம். அவர்கள் அதைவாசித்து எங்களைக் கவிஞன் என்றோ சிறுகதை எழுத்தாளன் என்றோ, நாடகாசிரியன் என்றோ பாராட்ட வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறோம். அதில் சுயநலமும் கலந்துதான் இருக்கிறது. தனது எழுத்தை அச்சில் பார்க்க வேண்டும் என்ற ஆசை யாருக்குத்தான் இல்லை? எனக்கு இருந்தது. எழுதக்கூடியவர்கள் எல்லோருக்கும் இருக்கும் இயல்பான ஆசைதான். நான் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பொழுதே நல்ல கட்டுரைகள் எழுதி ஆசிரியர்களது பாராட்டுக்களைப் பெற்றவன். அவற்றை "சுதந்திரன்", "வீரகேசரி" ப் பத்திரிகைகளுக்கும் அனுப்பினேன். அவை பிரசுரிக்கப்பட்ட பொழுது பார்த்து மகிழ்ந்தேன். அதனால் மேலும் மேலும் எழுத வேண்டும் என்ற ஆர்வம் பெருகிற்று!

புதிதாக ஒன்றைச் செய்ய வேண்டும் என்ற உந்துதல் எல்லோரது உள்ளத்திலும் இருக்கிறது. அதனால்தான் ஒரு கலைஞன் ஓவியம் தீட்டுகிறான். பாடகன் பாடுகிறான். ஒரு பெண் நடனமாடுகிறாள். ஒரு தையல்காரன் அழகிய ஆடைகளைத் தைக்கிறான். ஒருவன் வீட்டைக் கட்டுகிறான். இது ஒரு பிள்ளையைப் பெற்று வளர்த்து, கல்வி கற்பித்து, சமூகத்திற்குப் பயனுள்ளவனாக வளர்த்தெடுப்பதற்கு ஒப்பானது. ஆசிரியர் ஒரு பிள்ளைக்குக் கற்பித்து அவனை ஆளாக்குவதற்கு ஒப்பானது. புதிதாக ஒன்றைப் படைக்கும் இன்பத்திற்கு ஈடேது? இணையேது?

நான் 65 சிறுகதைகளும் 'சிறுகதை எழுதுவது' எப்படி? என்ற நூலும் எழுதியவன். மாணவர்களுக்காகவே இந்தச் சிறிய கட்டுரையை எழுதினேன். *(முற்றும்)*

ந.சுந்தரம்பிள்ளை

# அழகுக்கு அழகு சேர்க்க...



அழகு... இதை யாருக்குத்தான் பிடிக்காது. ஆனால் எப்படி அழகுபடுத்திக் கொள்வது என்பதும் தெரியாது. அதுதான் எமது சமூகத்தில் உள்ள தவறு என்றாலும் தற்போது அழகு சார்ந்த விடயத்தில் எமது சமூகம் சற்று முன்னேறித்தான் இருக்கிறது என்று கூறுகிறார் அழகுக் கலை நிபுணர் திருமதி யோகினி சண்முகநாதன்.

1987 ஆம் ஆண்டு அழகுக்கலைத்துறையில் காலடி எடுத்து வைத்த இவர் இன்று வரைக்கும் ஆயிரக் கணக்கான மாணவர்களுக்கு இத்துறை சார்ந்த பயிற்சிகளை வழங்கி வெளியேற்றியுள்ளார்.

இவரிடம் கற்றுக் கொண்ட எத்தனையோ மாணவர்கள் இன்று தாம் தனித்து நின்று செயற்படுகின்றனர் என்றால் அது இவரது பயிற்சியின் தெளிவையே எடுத்துக்காட்டுகின்றது.

தற்போது எமது சமூகத்தில் இளம் சமூகத்தின் எதிர்பார்ப்புக்களில் ஒன்றாக விளங்குவது அழகுக்கலைதான். பெண்களைப் பொறுத்தவரையில் தம்மை எவ்வாறு அழகுபடுத்திக் கொள்ளலாம் என்ற ஒரே நோக்கத்துடன்தான் அவர்கள் உள்ளனர்.

உச்சந்தலையில் இருந்து உள்ளங்கால் வரையில் இன்று அழகு சாதனப் பொருள்கள் வந்து குவிந்துள்ளன. அதை எவ்வாறு பயன்படுத்துவது எதற்குப் பயன்படுத்துவது என்றுதான் எமக்குத் தெரியா துள்ளது.

ஒவ்வொருவரும் தமது உடல் உறுப்புக்களைப் புதுப் பொலிவுடன் வைத்திருக்க வேண்டும் என்று தான் எண்ணுகிறார்கள். ஆனால் அவற்றை எவ்வாறு பாதுகாப்பது என்று எவருக்குமே தெரியாத ஒன்றாகவே உள்ளது. இந்த விடயத்தில் நாம் ஒரு அழகுக் கலை நிபுணரிடம் சென்று ஆலோசனை பெற்றுக் கொள்வதே சிறந்தது என்று கூறுகிறார் அழகுக் கலை நிபுணர் திருமதி யோகினி சணமுகநாதன்.

என்னதான் பல்வேறு வகையாக வாசனைத் திரவியங்கள் வந்தாலும் அவற்றை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது தெரியாமலேயே எமது சமூகத்தில் பலர் உள்ளனர்.

எமது சருமத்துக்கு ஏற்ற வகையில் எமது சருமம் வரண்ட சருமமா அல்லது எண்ணெய்ச் சருமமா என்று ஆராய்ந்து அது தொடர்பான பூரண விளக்கங்கள் பெற்ற பின்னரே எந்த வகையான முகப் பூச்சுக்களைப் பூச வேண்டும் என்று தீர்மானிக்க வேண்டும்.

இல்லாது விட்டால் நாம் என்னதான் செலவு செய்து என்னத்தைத்தான் வாங்கி முகத்துக்குப் பூசினாலும் அதனால் எந்த விதமான பயனும் கிடைக்காது போய்விடும். தலை முடியில் இருந்து கால் நகம் வரை அழகு படுத்த முடியும். இதை எவருமே உணர்ந்து கொள்வதில்லை.

ஒவ்வொரு உறுப்புகளுக்கும் ஒவவொரு பாகங்களுக்கும் ஏற்றவகையில் தற்போது அழகுத்துறை அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டுள்ளது என்று மகிழ்ச்சி பொங்கத் தெரிவிக்கிறார் இவர்.

அழகுக் கலை தொடர்பான மேலும் பல விடயங்களையும் இது தொடர்பான சந்தேகங்களையும் தொடர்ந்து நாம் இப்பகுதியின் ஊடாக திருமதி யோகினி சண்முகநாதனிடம் கேட்டுக்கொள்வோம்.

உங்கள் சந்தேகங்களையும் கேள்விகளையும் அனுப்பி வையுங்கள் உதயனுக்கு...

## சரும பராமரிப்பு



பெண்களின் அழகை ஜொலிக்க வைப்பதில் காதுகளுக்கும் அதிக பங்கு உண்டு. ஆனால் நம்மில் பலர் முகத்திற்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை காதுகளுக்கு கொடுப்பதில்லை.
இதனால் முகம் பளபளப்பாக இருந்தாலும் காதுகள் இரண்டும் முக அழகை கெடுத்து விடும். காதுகள் அழுக்கடைந்து பார்ப்பதற்கு அகோரமாக காட்சி அளிக்கும்.
உங்கள் காதை ஜொலிக்க வைக்க இதே யோசனை.
உங்களது காது மடல்கள் மீது அதற்கேற்றவாறான லோஷனைத் தடவவும்.
15 நிமிடம் கழித்து காதுகளை அழுத்தமாக துடைக்கவும். இப்படி தொடர்ந்து செய்து வந்தால் நாளடைவில் கறுப்பு வளையம் மாயமாகி விடும்.
சிலருக்கு நகைகள் அணிவதால் கழுத்தில் கருவளையம் ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளது. இதைப்போக்க கோதும்ம மாவில் வெண்ணையை கலந்து கழுத்தைச் சுற்றிப் பூசி வர வேண்டும்.. பின் 20 நிமிடங்கள் கழித்துக் குளிக்கவும். இப்படி தொடர்ந்துதினமும் செய்து வந்தால் கழுத்தில் உள்ள கருவளையம் படிப்படியாக மறைந்து விடும்.
சிறிது சூடாக்கப்பட்ட நல்ல எண்ணெய்யினால் கழுத்துப் பகுதியில் மசாஜ் செய்தால் கழுத்து பகுதியில் உள்ள சுருக்கம், கறுப்பு வளையம் படிப்படியாக நீங்கி விடும்.

## முகப்பரு நீங்க..

★ பன்னீர் ரோஜா மொட்டுக்களை எடுத்து, அது மூழ்கும் அளவு சூடான தண்ணீர் விட்டு, ஒரு மணி நேரம் ஊற வைக்கவும். பின் அந்த நீரை வடிகட்டி முகத்தில் பூசி அரைமணி நேரம் ஊறிய பன் துடைத்து எடுக்கவும்.இவ்வாறு செய்தல் பருக்கள் நாளடைவில் மறையும்.

★ சந்தனக் கட்டையை பன்னீர் விட்டு அரைத்து முகத்தில் தடவி வந்தால், பருக்களினால் ஏற்பட்ட வடுக்கள் நாளடைவில் மறையும்.

★ தினமும் உடற்பயிற்சி செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும்போது வெளியேறும் வியர்வையினால்,



துவாரங்களில் உள்ள அழுக்கு நீக்கி பருக்கள் வராமல் தடுக்கலாம்.

★ ஒரு ஸ்பூன் ஆரஞ்சு பழச்சாறை, ஒரு ஸ்பூன் குளிர்ந்த நீரில் கலந்து அதை முகத்தில் தடவி அரைமணி நேரம் ஊறிய பிறகு துடைத்து விடவும். இது சருமத்தில் உள்வ எண்ணெய் நீங்கி பருக்கள் வராமல் பாதுகாக்கும். பார்லர்களில் இதே சிகிச்சையை ஆரஞ்சு பீல் மாஸ்க் என்ற பெயரில் செய்கின்றனர்.


★ வேப்பிலையைப் பொடி, துளசி பொடி, புதினா பொடி ஆகியவை தலா ஒரு கரண்டி, முல்தானிமெட்டி இரண்டு கரண்டி எடுத்துக் கொள்ளவும். அதை மிதமான சுடுநீரில் கலந்து முகப்பருக்களில் தடவவும். இந்த கலவையை கண்களுக்கு அடியில் தடவக்கூடாது. பதினைந்து நிமிடங்கள் கழித்து முகத்தை கழுவி விடவும்.

★ இரண்டு கரண்டி ஓமவல்லி இலைச்சாறுடன், ஒரு கரண்டி சிவப்பு சந்தனத்தை கலந்து பருக்கள் உள்ள இடத்தில் தடவி வந்தால் விரைவில் பருக்கள் தொல்லை நீங்கும்.

★ சோற்றுக் கற்றாழை சருமத்தை மிருதுவாக்கும் தன்மையுடையது. அவற்றின் நடுவில் இருக்கும் பசையை எடுத்து, அதில் சம அளவு நீரைக் கலந்து முகத்தில் தடவி வந்தால் நல்ல பலன் கிடைப்பதை பார்க்கலாம்.

## அழகுக் குறிப்பு

மஞ்சள்தூள், சந்தனத்தூள், ஒலிவ் எண்ணை கலவையை உடல் முழுவதும் பூசி, 10 நிமிடங்களுக்குப் பிறகு குளிக்க வேண்டும். இதை வாரத்தில் இரண்டு அல்லது மூன்று தடவை செய்து வர சருமம் மென்மை பெறும்.
பாலும், எலுமிச்சை பழச்சாறும் கலந்த கலலையை முகத்தில் பூசி, இயற்கையான முறையில் 'பிளீச்' செய்யலாம். பெண்கள் மிகவும் கவர்ச்சியான உடையை அணியும் போது மிகவும் பகட்டான நகைகள் அணிவதைத் தவிர்க்க வேண்டும். ஏன் என்றால் பளபளப்பான நகைகளுக்கு முன்னால், புடைவையின் கவர்ச்சி குறைந்துவிடும். அதேபோல் பளபளப்பான நகைகள் அணியும்போது உடை எளிமையாக இருக்கவேண்டும். எளிமையான, அழகான டிசைன் உள்ள நகைகளை அணிய வேண்டும். அப்பொழுதுதான் ஆடையின் அழகும், நம்முடைய அழகும் தெரியும். நாம் மட்டும் தனியாக அழகாக தெரிவோம்.
கை விரல் நகங்கள் இளம் சிவப்பு நிறத்தில் இருக்க வேண்டும். இதில் வெள்ளை நிறம் ரத்த சோகையையும், மஞ்சள் காமாலையையும் குறிக்கும். விரல் நகங்களுக்கு நடுவில் சொத்தை ஏற்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகி அதற்கான காரணத்தை அறிவது நல்லது.
கைப்புண்ணிற்கு கண்ணாடி தேவையா என்பது பழமொழி. அதே போல் நம் கை விரல் நகங்களைக் கொண்டே நமது உடல் ஆரோக்கியத்தைக் கண்டுகொள்ளலாம்.



# அறிவுரை



ஓர் இளம் தாய் அறிஞர் அரிஸ்டோட்டிலை தேடிப் போனார். அவரிடம் ''ஐயா! என் பிள்ளைக்கு நல்ல பழக்கவழக்கங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். எந்த வயசிலிருந்து கற்றுக் கொடுக்கலாம்?'' என்று கேட்டார். அதற்கு அரிஸ்டோட்டில் ''குழந் தையினுடைய வயது என்ன?'' என்று கேட்டார். அந்த அம்மா ''ஐந்து வயது'' என்று சொன்னார்.

உடனே அரிஸ்டோட்டில் ''ஐயையோ உடனே வீட்டுக்குப் போய்விடுங்கள் அம்மா ஏற்கனவே ஐந்து வருடங்கள் தாமதப்படுத்தி விட்டீர்கள்'' என்றார். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், நல்ல பழக்கவழக்கங்களை கற்றுக் கொடுப்பதற்கு நேரம், காலம் பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது என்பதே.

ஒருத்தரிடம் அவரது ஒரே ஒரு பிள்ளையை பாடசாலையில் சேர்க்கவில்லையா என்று கேட்டால் என்ன கூறுவார் தெரியுமா? ''அதற்கெல்லாம் ஒரு நேரம் காலம் வரவேண்டாமா? அதைத்தான் பார்த்துக் கொண்டிருக்கின்றேன்'' என்பார். இவர்கள் எல்லாம் எந்தக் காலத்தில் பிள்ளையைப் படிக்க வைக்கப்போகிறார்கள்.

நல்ல பழக்கத்தைச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்றால் முதலில் அதற்கு நாம் தயாராகிக் கொள்ள வண்டும்.

ஒரு பெரியவரிடம் ஓர் அம்மா தன்னுடைய பிள்ளையைத் தூக்கிக் கொண்டு வந்தார். '' என்ன விசயம்?'' என்று கேட்டார் அந்தப் பெரியவர். '' ஐயா! என் பிள்ளை எப்போது பார்த்தாலும் வெல்லத்தையே சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றான். சொன்னால் கேட்கமாட்டேன் என்கிறான். நீங்கள்தான் அவனுக்கு நல்ல புத்தி சொல்ல வேண்டும்'' என்றார்.

அந்தப் பெரியவர் கொஞ்ச நேரம் யோசித்தார். பின் ''சரியம்மா... நீங்கள் போய் ஒரு வாரம் கழித்து வாருங்கள்'' என்று சொல்லி அனுப்பினார்.

உடனே இந்தத் தாய் குழந்தையைத் தூக்கிக் கொண்டு போனார். ஒரு வாரம் கழத்து மறுபடியும் குழந்தையுடன் வந்தார். அந்தப் பெரியவர் குழந்தையிடம் இனிமேல் வெல்லம் சாப்பிடக் கூடாது என்று நிறையப் புத்திமதி சொன்னார்.

''சரியம்மா... இனி மேல் இவன் வெல்லம் சாப்பிட மாட்டான் போய் வாருங்கள்'' என்றார். இந்த நேரத்தில் அந்த அம்மாவுக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது.

தயங்கி தயங்கி நின்றார். ''ஏனம்மா யோசிக்கிறீர் கள்'' என்று கேட்டார் அந்தப் பெரியவர். ''ஒன்றுமில்லை பெரியவரே! இப்போது நீங்கள் கூறிய இந்தப் புத்திமதியை ஒரு வாரத்துக்கு முன்னரே சொல்லியிருக்கலாமே எதற்காக ஒரு வாரம் கழித்து மறுபடியும் வரச் சொன்னீர்கள்'' என்று கேட்டார் அந்தத் தாய்.

அதற்கு அந்தப் பெரியவர்,

''அப்படியில்லை, ஒருவாரம் கழித்து உன்னை வரச் சொன்னதற்குக் காரணம் உண்டு. போன தடவை நீ வந்தபோதே இந்தப் புத்திமதியை நான் நான் ஏன் சொல்லவில்லை என்றால்....

''அதுவரைக்கும் நானும் அதிகமாக வெல்லம் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். இந்த ஒரு வார காலத்தில் நான் கொஞ்சம் கொஞ்சமாக வெல்லம் சாப்பிடுவதை விட்டுவிட்டேன்!

''இப்பொழுது நான் வெல்லம் சாப்பிடுவதில்லை...! அதனாலேதான் இப்பொழுது அந்த அறிவுரையைச் சொல்லக் கூடிய தகுதி எனக்கு வந்திருக்கிறது! அதனால் தான் அப்படிச் சொன்னேன்'' என்றார்.

இந்தக் காலத்தில் 'அறிவுரை' சொல்வதற்கு பலபேர் இருக்கிறார்கள், ஆனால் அந்த 'அறிவுரை' சொல்வதற்குரிய தகுதி அவர்களுக்கு இருக்கிறதா என்பது சந்தேகம் தான்!

இதனால்தான் பல அறிவுரைகளுக்கு மரியாதை இல்லாமல் போகிறது.

அஹிம்சையைப் பற்றி பாடம் நடத்துவதற்காக ஒருத்தர் வந்தார், அவர் என்ன தொழில் செய்கிறார் என்று கேட்டால்; கசாப்புக் கடை வைத்திருக்கிறாராம்!

**கோ.சுவாமிநாதன்**

# வாசகர் திருமுகம்

## ஏன் இந்தப் புறக்கணிப்பு?

எமது நாட்டின் நிதியமைச்சரும் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷவால் 2012 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் 2011.11.21 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கு முதல் நாள் அரச ஊழியர்களுக்கும், ஓய்வூதியர்களுக்கும் சம்பள அதிகரிப்பும் ஓய்வூதிய அதிகரிப்பும் வழங்கப்படவுள்ளது என வானொலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. நானும் ஒரு ஓய்வூதியர் என்ற வகையில் இச்செய்தியைக் கேட்டு மகிழ்ந்தேன். ஓய்வூதிய அதிகரிப்பை எதிர்பார்த்திருந்தேன். ஆனால் வரவு செலவுத் திட்டம் வாசித்து முடிந்ததும் மிகுந்த ஏமாற்றமும் விரக்தியும் அடைந்தேன். காரணம் 2006 ஆண்டுக்குப் பின்னர் ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்கு ஓய்வூதிய அதிகரிப்பு வழங்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனது ஆதங்கம் என்னவென்றால் குறித்த ஆண்டுக்குப் பின்னர் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கு வாழ்க்கைச் செலவுப் பிரச்சினை இல்லையா? தற்போதைய விலைவாசி உயர்வு என் போன்றவர்களைப் பாதிக்கவில்லையா, ஏன் இந்தப் புறக்கணிப்பு, ஏன் இந்த அநீதி? அரச சேவையில் உள்ளவர்களுக்கு வழங்கப்படவுள்ள 10 சதவீத சம்பள அதிகரிப்பு அவர்களது நியமன ஆண்டு வரையறை செய்யப்படாமல் அனைவருக்கும் வழங்கப்படுகின்றது.

ஆனால் ஓய்வூதியர்களுக்கு மட்டும் 2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வுபெற்றவர்களுக்கு மாத்திரம் ஓய்வூதியம் முறையே 1000 ரூபாவும், 500 ரூபாவும் அதிகரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை எந்த விதத் தில் நியாயமானது. ஒரு நாட்டு அரசு தனது குடிமக்களையே ஆண்டு ரீதியாக வேறுபடுத்திப் பார்ப்பதும், வேற்றுமை காட்டு வதும் பாராபட்சமான செயல் அல்லவா? வருகிற வருடம் ஓய்வூதிய அதிகரிப்பைப் பெறவுள்ள ஓய்வூதியர்களுக்கு 2011 ஆம் (நடப்பு ஆண்டு) ஆண்டிலும் முறையே 750 ரூபாவும், 250 ரூபாவும் அதிகரிக்கப்பட்டதென்பதை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசசின் இச்செயலானது பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போல் அல்லவா இருக்கிறது.

2006 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்கு இழைக்கப்பட்ட அந்த அநீதியைப் பற்றி எந்த ஓர் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் குரல் கொடுக்காமை எமக்கு மிகுந்த வேதனையும் துன்பத்தையும் வியப்பையும் தருகிறது.

எனவே தயவு செய்து 2006 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஓய்வு பெற்ற அரச ஊழியர்களையும் கவனத்தில் கொண்டு அவர்களுக்கு ஓய்வூதிய அதிகரிப்பை வழங்கி அனைவரையும் சமத்துவமாக நடத்த வேண்டும், கவனிக்க வேண்டும் என்று மாண்புமிகு ஜனாதிபதியை மிகவும் பணிவன்புடன் வேண்டுகிறேன்.

சு.நடராசா.

## வயதெல்லையைக் காரணம் காட்டி வைத்திய சேவையை ஒதுக்காதீர்

உதவி வைத்தியர்களுக்கான பயிற்சி இடைநிறுத்தப்பட்டிருப்பதாலும், இடமாற்றம் மற்றும் நியமனம் பெறும் வைத்தியர்கள் இங்கு வராமையாலும் பல வருடங்களாக வைத்தியர்கள் பற்றாக்குறை வைத்தியசாலைகளில் நிலவுகிறது. இதை ஈடு செய்வதற்காக, கடந்த 15 வருடங்களுக்கு மேலாக ஓய்வு பெற்ற வைத்தியர்கள் அநேகமாக மத்திய மருந்தகங்கள் (ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையம்) கிராமிய, பிரதேச வைத்தியசாலைகளில் கடமையாற்றி வருகிறார்கள்.

இந்த வைத்திய நிலையங்கள் கடந்த 70 வருட காலமாக 30 வருடகால யுத்தத்தைக் கடந்து குறைவின்றி சேவையாற்றி வருகிறது. யாழ்.போதனா வைத்தியசாலை, ஆதார வைத்தியசாலை, மாவட்ட வைத்தியசாலை போன்றவற்றால் வழங்கப்படும் நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கான தொடர் வைத்திய சேவை ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிறுவனங்களிலும் வழங்கப்படுகிறது. அத்துடன் ஏனைய கர்ப்பிணி, பிள்ளைகளின் தடுப்பு மருந்துகள் போன்ற விசேட வைத்திய பிரிவுகளும் இன்று செயற்படுகிறது. இதைவிட வெளிநோயாளர் பிரிவு தொடச்சியாக தினமும் கிழமை நாள்களில் ஆறு மணித்தியாலங்கள் செயற்படுகிறது.

இவ்வாறு வைத்திய சேவைகள் வழங்கும் நிறுவனங்களின் நேரம் ஆறு மணித்தியாலத்திலிருந்து கிட்டத்தட்ட 4 மணித்தியாலங்கள் 10 நிறுவனங்களிலும், 2 மணித்தியாலங்கள் மேலும் 10 நிறுவனங்களிலும் குறைக்கப்பட்டுள்ளது.

காரணம் எழுபது வயதுக்கு மேற்பட்ட வைத்தியர்களின் சேவை 01.12.2011 தொடக்கம் இடைநிறுத்தப்பட்டிருந்தது. ஆனால் இவ்வைத்தியர்களின் உடல் உள நிலை தொடர்ந்தும் சேவையாற்றத் தகுதி என வைத்தியர்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது, வயதெல்லையைக் காரணம் காட்டி இலவச வைத்திய சேவையை ஸ்தம்பிதமடையச் செய்து வறிய மக்களை சிரமத்துக்குள்ளாக்குவது சரியான நடவடிக்கை அல்ல. நிரந்தர வைத்தியர்களை நியமிக்கும் வரை வயதெல்லைக் காரணத்தை கைவிட வேண்டும்.

ம.வேலாயுதம், நல்லூர்.

## நோய் நொடி; நோய் முதல் நாடி

நாட்டில் ஒழுக்கம் கெட்டுப் போனதைப் பற்றி எல்லோருமே கவலை வெளியிட்டாயிற்று. அரச உத்தியோகத்தர்கள் கூட விழாக்களில் இதைப் பற்றிப் பேசிக் கொண்டேயிருக்கிறார்கள். ஆனால் தீர்வைப் பற்றி வழிமுறை பற்றி எவரும் குறிப்பிடுவதாக இல்லை. நாட்டின் குடிமக்களில் இதில் அக்கறை கொண்டவர்கள் பெரும்பான்மையாக இருப்பதாகக் கொள்ளலாம். எத்தரத்தில் உள்ளவராக இருந்தாலும் என்ன தொழில் செய்பவராக இருந்தாலும் நாட்டில் ஒழுக்கம் மேம்படப்பாடு அடையும் வகையில் செயற்பட முடியும். இதற்காக அவர்கள் வீட்டைத் துறந்து தொழிலை உதறி பணத்தைச் செலவு செய்து தான் செயற்பட வேண்டுமென்பதில்லை.

பெற்றோர்கள் சிறுவயது முதலே பிள்ளைகளுடன் தேவையான விடயங்களைக் கலந்துரையாடி பல வழிகளிலும் அவர்கள் ஒழுக்கமுடன் வாழ வழிகாட்ட வேண்டும். ஒழுக்கமாக வாழ்வதற்காக நம் முன்னோர்கள் எடுத்த முயற்சிகளை அவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். ஆசிரியர்களைப் பொறுத்த வரை இதுவரை எத்தனை வீதத்தினர் நமது நீதி நூல்கள் செய்யப்பட்டதன் நோக்கத்தைப் பிள்ளைகளுக்குப் சொல்லியிருக்கிறார்கள். இவ்வாறாகப் பெருந்தொகையான நூல்கள் இருக்கின்றன என்பதைக் கூடச் சொல்லி வைக்கத் தவறிவிடுகிறோம். பாடத்தினூடே வாய் தடுமாறிக் கூட ஒரு நீதிமொழி சொல்லப்படுவதில்லை.

சமயத் தொண்டு செய்யப் புறப்பட்டவர்கள் ஆலயங்கள் மூலம் பல நன்மைகளைச் செய்யலாம் சமயப் பரீட்சைகள், வினாடி வினாப் போட்டிகள் தரக் கூடிய பயன்கள் மிக மிக சொற்பாகத்தான் இருக்க முடியும்.

சில காலம் திருமுறை மன்றம் செய்தது போல் வீடு தோறும் தேவாரம் ஓதுதல் ஒழுங்கு செய்வது மக்களின் சிந்தனை மாற்றத்துக்கு வழிவகுக்கும். மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் ஒழுக்க மேன்மைக்கும் முற்காலத்தில் நாடகங்கள் தூண்டு கோல்களாக இருந்தன. பல காரணங்களால் நாடக முயற்சிகள் நலிந்து போய்விட்டன. ஆனால் நடத்தவே முடியாத அளவுக்கு ஒன்றும் பாரதூரமாக இல்லை. ஏதாவது ஒரு வழியில் அக்கறையுள்ள ஒவ்வொருவரும் பாடுபட்டு எமது ஒழுக்கத்தை மேம்படுத்த முன்வர வேண்டும்.

நாம் தீர்வைக் காண விளையும் போது வள்ளுவர் சொன்ன ''நோய் நாடி; நோய் முதல் நாடி''ச் செல்வதற்கு தற்போதைய நிலையில் சாத்தியக் கூறுகள் பலவழிகளில் தடைப்படுகின்றன.

பொது விடயத்தை ஆரம்பிக்கும் போது ஆதரவு பற்றிப் பலரும் கவலைப்படுவார்கள். வளங்கள் பற்றி அவ்வளவு பிரச்சினை வராது. மக்கள் ஒன்று சேர்வதற்கும் தொடர்ந்து ஈடுபடுவதற்கும் ஏற்ற வகையில் நமது திறமையான செயல்பாடுகள் அமைய வேண்டியது அவசியம்.

ஆகவே இருக்கும் சூழல் மாற்றமடையும் என்று காத்திராது செய்யக் கூடிய முயற்சிகளைச் செய்து சமூகம் பயனடையப் பாடுபடுவோமாக.

வை.சந்திரபாலன், கொக்குவில்

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
வயிறு தொடர்பான உபாதைகளைச் சந்திக்கலாம். உங்களிடம்பணம் இல்லாமல் மற்றவர்களிடம் கடன்வாங்கி சில பொருள்களை வாங்குவீர்கள். உறவினர்கள் சிலருடன் கடும் வாக்குவாதங்கள் செய்யலாம். ஏன் இதைச் செய்தோம் என்று சில விடயங்களுக்காகக் கடுமையாக கவலை அடைவீர்கள். கனவுத் தொல்லையுண்டு. பக்தி நாட்டம் கூடும்.

**இடபம்:**
சில வேலைகளை வேகமாக ஆரம்பித்து விட்டு, பின்னர் அதிலிருந்து பின்வாங்கலாம். உதவிகள் பெற்ற சிலரே உங்களை உதாசீனம் செய்யலாம். குடும்ப உறுப்பினர்கள் மீது ஒரு விடயத்துக்காக கோபம் கொண்டாலும், அதை வெளிக்காட்டாமல் அடக்கிக் கொள்வீர்கள். சக ஊழியர்கள் விடுமுறையால் வேலைப்பளு கூடும்.

**மிதுனம்:**
பொறுப்பில்லாமல் செயற்படும் சிலருக்கு நல்ல புத்திமதி சொல்வீர்கள். அதிக விலை கொடுத்து வாங்க நினைத்த பொருள் ஒன்றை, குறைந்த விலைக்கு வாங்குவீர்கள். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். தாய் வழியில் சிறு அன்புத்தொல்லைகளைச் சந்திக்கலாம். ஆடை, ஆபரணங்கள் வாங்கும் சூழ்நிலை உருவாகும். இனிய நாள்.

**கடகம்:**
பல நாள்களாக வராத உறவினர் ஒருவர், உங்களின் வீட்டுக்கு வரலாம். குடும்பத்திற்கு தேவையானவற்றை வாங்க தாராளமாகச் செலவு செய்வீர்கள். சுயநலமாக நடந்து கொள்ளும் ஒருவரைப் பார்த்து எரிச்சல், கோபம் அடையலாம். தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள். சிலர் உங்களிடம் பண உதவி கேட்கலாம்.

**சிங்கம்:**
பதற்றம், படபடப்புடன் செயற்படும் நாள். எதிர்காலத் திட்டம் பற்றி குடும்ப உறுப்பினர்களுடன் கலந்து ஆலோசிப்பீர்கள். வாகனங்கள் வழியில் உருவான தொல்லைகள் குறையும். சொத்து வாங்கல் கொடுக்கல் விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம். உங்களிடம் கடன் வாங்கிய ஒருவர் அதை திருப்பிக் கொடுக்கலாம்.

**கன்னி:**
சில வேலைகளைச் செய்ய மறப்பதன் மூலம் அவதிகளுக்கு ஆளாகலாம். குடும்ப பெரியவர் களின் கோபதாபங்களுக்கு ஆள்படலாம். விருந்தினர்கள் வருகையை எதிர்பார்த்து வீட்டில் சில மாற்றங் களைச் செய்வீர்கள். பணிபுரிவோர் மேலதிகாரிகளின் கண்டிப்புக்கு ஆளாகலாம். ஆதாயமில்லாத அலைச்சல், திரிச்சல்களைச் சந்திக்கலாம்.

**துலாம்:**
எதிர்பாராத உதவிகள் கிடைத்து பெருமைப்படும் நாள். கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரும். சிக்கலான சூழ்நிலையிலும் சாமர்த்தியமாகச் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். வேலையாள்களால் சிறு பிரச்சினைகளுக்கு ஆள்படலாம். நண்பர்களுடன் கேளிக்கை, கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம்.

**விருச்சிகம்:**
யாரிடமும் கோபம், வேகத்தைக் காட்டாமல் பொறுமையாகச் செயற்பட வேண்டும். பிரியமான சிலரின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். விளையாட்டாகச் செய்த காரியங்கள் கூட நல்லவிதமாக முடிவுக்கு வரும். பல நாளாக செல்ல நினைத்த ஒரு இடத்துக்குச் செல்லலாம். நண்பர்கள் சிலர் உங்களுக்காகச் செலவு செய்யலாம்.

**தனுசு:**
ஓய்வெடுக்க நினைத்தாலும் அது முடியாத அளவுக்கு சிலரால் தொல்லைகள் உருவாகும். நண்பர் ஒருவருக்கு சரியான நேரத்தில் உதவி செய்து அவர்களின் மனதில் இடம் பிடிப்பீர்கள். வெளியில் செல்லும்போது விரும்பாத ஒருவரைச் சந்திக்கலாம். பெரிய மனிதர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். திடீர் செலவால் சேமிப்பில் கைவைக்கலாம்.

**மகரம்:**
செய்து முடித்த வேலை ஒன்றில் ஏற்படும் தவறால், அதை மீண்டும் செய்ய நேரிடலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்த ஒருவர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். பாரபட்சமின்றி, நேர்மையாகச் செயற்படுவதால் சிலரின் அதிருப்திக்கு ஆளாகலாம். நீங்கள் செய்த காரியம் ஒன்றை மற்றவர்கள் தாங்கள் செய்ததாக காட்டிக் கொள்ளலாம்.

**கும்பம்:**
புதிய விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் செல்லும் வாய்ப்பு கிடைக்கும். காலை முதல் மாலை வரை பம்பரமாகச் சுழன்று பணியாற்றுவீர்கள். மனைவியின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் மூலம் பண வரவுகளைப் பெறலாம். நீண்ட நாள்களாக உங்களுடன் பேசாத ஒருவர், திடீரென தொலைபேசியில் பேசலாம்.

**மீனம்:**
வீட்டைச் சீரமைப்பதில், அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். உறவினர் ஒருவரை அவரின் வீட்டுக்கே சென்று சந்திக்கலாம். மாமன், மைத்துனர்கள் சொல்லும் யோசனைகளை கேட்டு, சில விடயங்களில் நடப்பீர்கள். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும்.

# புத்தகசாலை

## எனது பாட்டி பனுக்கிய பன்னீர்ப் பூக்கள் மற்றும் வேறு....



எழுத்தாக்கங்கள் இவ்வாறு தான் அமைய வேண்டும் என்றே, நூலாக்கங்கள் இத்தகையனவாக இருக்க வேண்டுமென் கேட்டுப்பாடுகள் இடப்படுவதைக் கடந்து நிற்பவை இன்றைய நல்ல இலக் கியங்களாகின்றன.
இந்த நூலில் தனது எழுத்துக்கள் பலவற்றையும் வாசிக்கத் தூண்டும் இனிய தமிழில் பல்வேறு வடிவில், நோக்கங்கள் பலவாயினும் அவற்றை உளந்தொடும் வகையில் தொகுத்துள்ளார் ஆசிரியர் திருமதி நவமணி செல்வராசா. பாட்டி பராசக்தியம்மா அருளம்பலம் அவர்களுக்கு இந்நூலினைச் சமர்ப்பணம் செய்வதன் ஊடாகப் பாட்டி தன் வாய்திறந்துதிர்த்த பழமொழிகளைப் பன்னீர்ப் பூக்களாய்ப் பார்க்கின்றோம். அவை பண்டைத் தமிழ் வழக்கிலிருந்து அழியாத உயிர்ப்புடையவையாகும்.
தமிழ் மூதாட்டி ஔவையாரின் மூதுரை கொன்றை வேந்தன் என்பவற்றுடன் பாட்டியும் வேறும் பலரும் சொன்ன வாழ்க்கை பற்றிய சிந்தனைச் சீர்கள் சிலவற்றையும் நூலில் தொகுத்துள்ளார்.
பொது அறிவும் விஞ்ஞானமும் புகட்டும் கருத்துக்கள் நிறையவே சொல்லப்பட்டுள்ளன. கலைஞானி எனப் புகழப்பட்ட குரும்பசிட்டி செல்வரத்தினத்தை நேரில் பார்த்து அவருடன் தன்னை அறிமுகம் செய்து கற்றுக்கொண்டவற்றை நூலில் சிறந்ததொரு கட்டுரையாகத் தந்துள்ளார்.
கல்வி, இந்துசமயம், நீர்வளம், சூழல் மாசடை தல், போதைப் பொருள்பாவனை, நாட்டில் நில வும் கொடிய கொலைக் கலாசாரம் என்பன பற்றிய நன்மை தீமைகளை அலசி ஆராய்ந்து எழுதியுள்ளார். 'அந்தண அழகியின் ஆருயிர் வாழ்க்கைத் துணைவர்' 'எங்கள் சட்டத்தரணி ஒரு வெற்றி பெற்றவர்' 'எனது அக்கா இனி இல்லை' என்பன போன்ற தலைப்புக்களோடு ஆசிரியை தனது அன்புக்குரியோர் உறவினர்களின் இழப்புக் குறித்து எழுதிய நினைவுக் குறிப்புகளில் வாசகர் யாவருக்கும் பயன்தரும் பல விடயங்களைச் சொல்லியுள்ளமை கவனத்தை ஈர்க்கின்றது.
மனதில் பதிந்தவை மக்களுக்குப் பயன்படும் என்ற பெருநோக்கம் நூலின் எதிர்பார்ப்பாக இருக்கும் நிலையில் நூலின் உள்ளடக்கம் அதனை நிறைவேற்றும் வகையில் அமைந்திருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

மதேசு

## காதலியாற்றுப்படை



பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் காதலியாற் றுப்படை எனும் நூல் அமரர் முருகேசு வேலுப்பிள்ளை (மு.வே)யின் நினைவு நூலாக வெளிவந்துள்ளது.
புகழொடு தோன்றிப் புக ழொடு வாழ்ந்த பலரதும் நினைவழியா வகையில் அவர்களின் நினைவுகள் நிலைத்திருக்க நினைவு வெளியீடுகள் வருவது வழக்கம். அத்தகைய நினைவு வெளியீடுகளைப் பயனுடைய பலர் போற்றும் நூல் களாக வெளியிடும் நோக்கம் இப்பொழுது பரந்து காணப்படுவது விருப்புக்குரிய செயலாகும். முருகேசு வேலுப்பிள்ளையின் வாழ்வைத் தரும் வகையாகப் பலரது ஆக்கங்கள் மலரில் உள்ளன. அத்துடன் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவின் காதலியாற்றுப் படையின் வழி அந்தக் காதலியாற்றுப்படை காட்டுகின்ற யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுக் கோலங்கள் என்ற இலக்கிய ஆய்வுக் கட்டுரையும் இதில் இடம்பெற்றுள்ளது.
செய்யுள் வடிவான காதலியாற்றுப்படையின் உள்ளடக்கம் தெளிவுறும் வகையில் யாழ்ப்பாணத் துப் பண்பாட்டுக் கோலங்கள் தரும் ஆற்றுப்படை பற்றிய விளக்கமும் யாழ்ப்பாணக் கலாசாரமும் இதில் இலக்கியச் சுவை மிளிர எடுத்துரைக்கப்பட்டுள் ளன. வாசிக்கவும் பாதுகாக்கவும் மிக்கதோர் பயன் மிகு நூல் இதுவாகும்.

**வேதாரண்யன்.**

# நடன அரங்கேற்றம்



நிர்த்தனா நடனப் பாடசாலை ஆசிரியை பரத கலாநிதி ஸ்ரீமதி சிவானந்தி ஹரிதர்ஷனின் மாணவியும், திரு. திருமதி உதய விமலதாஸ் தம்பதியரின் புதல்வியுமான செல்வி திவ்வியவேணியின் நாட்டிய அரங்கேற்றம் இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்வார்.



கலாசாரத் திணைக்களத்தால் காண்பிய இறுவெட்டுக்கான விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் அலரி மாளிகையில் நடைபெற்றது. விருது பெற்ற கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.செல்வச்சந்திரனுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாராட்டுத் தெரிவிக்கிறார். (ம-7)



ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து செயற்படும்பிரிட்டன்அரசின்அங்கமானசென்ஜோன்ஸ் ஓடர் ஒப் சிவல்றி நெடுந்தீவைச் சேர்ந்த லண்டனில் வசிக்கும் வைத்தியக் கலாநிதி பேராசிரியர் மருது கந்தப்புவுக்கு சேர் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. மருத்துவ சேவைக்காகவும், புதிய மருத்துவ முறையான 'மூளை நரம்பியல்' சிகிச்சையைக் கண்டறிந்தமை அது பற்றிய நூல் ஒன்றை தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிட்டமைக்காகவும் தெஹிவளை மவுண்ட்லவேனியா ஹோட்டலில் நடைபெற்ற நிகழ்வில் லண்டனைச் சேர்ந்த பேராசிரியர் சேர் ஹொய்சன் வழங்குகிறார். (ம-7)



# நாட்டின் இன்றைய தேவை பலம் மிக்க எதிர்க்கட்சியே!

## ரணிலுடன் தனிப்பட்ட கோபதாபம் இல்லை!!

### ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய 'உதயனு'க்கு வழங்கிய விசேட செவ்வி

**கேள்வி:** கட்சிக்குள் ஒரு மாற்றம் ஏற்படவேண்டும். அதனூடாக நாட்டிலும் மாற்றங்கள் ஏற்படவேண்டுமெனப் பலர் எதிர்பார்க்கின்றனர். தலைமைப் பதவிக்காகப் போட்டியிடத் தயாரென நீங்கள் அறிவித்த கையோடு அவ்வாறான எண்ணம் வைத்திருந்தவர்களுக்கு ஓர் உத்வேகம் பிறந்திருக்கின்றது. இந்தத் தீர்மானத்துக்கு நீங்கள் வந்ததன் பின்புலம் என்ன?

**பதில்:** அரசின் இன்றைய அடக்குமுறை, வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு, ஜனநாயக உரிமை இன்மை, பேச்சுச்சுதந்திரம் ஒழிப்பு, கருத்துச்சுதந்திரம் மறுப்பு என்பவற்றைப் பார்த்த மக்களுக்கு எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைந்த கூட்டு ஒன்று தேவைப்பட்டது. நாட்டில் இன்று பல பிரச்சினைகள் இருக்கின்றன. இவற்றுக்கு அப்பால் வன்முறையும், ஊழலும் பரவியிருக்கின்றன. ஆள் கடத்தல், வெள்ளைவான் கலாசாரம் சில இடங்களில் மீண்டும் ஏற்பட்டுள்ளன. இதனால் பொதுவான எதிர்க்கட்சிகள் கூட்டிணைந்தால் அரசுக்கு ஒரு சவாலாய் இருக்கலாம்.

துரதிர்ஷ்டவசமாக இன்று அப்படியான சவால் இல்லை. எனவேதான், தான்தோன்றித்தனமான அடக்குமுறை அடிப்படையில் அரசு இப்படிச் செயற்படுகிறது. இந்தச் சூழ்நிலையில் ஐ.தே.கவுக்குள் ஒரு ஒற்றுமையை ஏற்படுத்தி கட்சியை வலுப்படுத்த எண்ணினேன். மதத்தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகளின் உறுப்பினர்கள், சிவில் சமூக முக்கியஸ்தர்கள், கட்சியின் கிளை உறுப்பினர்கள், அடிமட்ட உறுப்பினர்களென அனைவரும் ஐ.தே.கவை ஒற்றுமைப்படுத்துமாறு என்னிடம் கோரினர்.

இது என்னால் நிராகரிக்கப்பட முடியாத கோரிக்கை. இப்போதுள்ள நிலைமையை விட கட்சி இன்னும் மோசமான நிலைக்குச் செல்லக்கூடாதென்று கருதி இந்தக் கோரிக்கையை நான் ஏற்றுக்கொண்டேன். சஜித் பிரேமதாஸவின் குழு, கட்சியில் நடுநிலையாக நிற்கும் நாடாளுமன்ற குழு, பிக்குகள் முன்னணி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பேரவை, சட்டத்தரணிகள் சங்கம் என்று அனைத்துத் தரப்பினரும் எனக்கு ஆதரவளிக்கின்றனர். எனவே, எனது கட்சியைப் பலப்படுத்துவதற்காக அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து எதிர்காலத்தில் நல்லாட்சியொன்றை நாட்டுக்கு வழங்குவதே எனது நோக்கம்.

கட்சியில் உள்ளவர்களின் திறமைகளைப் பயன்படுத்தி ரணில் விக்கிரமசிங்கவுக்கோ அல்லது ஏனைய எவருக்குமோ எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாமல் செயற்பட வேண்டும். அரசுடன் மோதக்கூடிய திறமை வாய்ந்த உறுப்பினர்கள் எமது பக்கம் இருக்கின்றனர். இவர்களைச் சரியாகப் பயன்படுத்தினால் அரசின் சவால்களை எதிர்கொள்ளலாம்.

எனவே, இந்தத் தீர்மானத்தை நல்லெண்ண அடிப்படையில் நான் எடுத்தேன். இதன்படி சில மாதங்களில் சுமார் 100 நாள்களில் எமது கட்சியைப் பலப்படுத்தமுடியும். பின்னர் அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைத்து நாட்டில் புதிய யுகமொன்றை ஏற்படுத்தலாம்.

**கே:** கட்சியின் தலைமைப்பதவிக்கு போட்டியிடப்போவதாக நீங்கள் உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கவில்லையென்று கட்சியின் செயலாளர் கூறியிருக்கின்றாரே?

**ப:** பதவி வெற்றிடமென அறிவிக்கப்பட்ட பின்னர்தானே உத்தியோகபூர்வமாக அறிவிக்கமுடியும். தேர்தல் வேட்புமனு கோரும்போது அறிவிப்பேன். தலைமைப்பதவிக்குப் போட்டியிடப்போவதாக எனது அறிவித்தல் வெளிவருமென்பதை நான் தெரியபடுத்தியிருந்தேன். இதனை நாங்கள் முறையாகச் செய்வோம்.

**கே:** சரி. நான் இப்படிக் கூறுவது சரிதானா என்று பாருங்கள். இந்த தற்போதைய சூழ்நிலையில் நீங்கள் கட்சியை வலுப்படுத்தும் முயற்சி, பின்னடைவைச் சந்தித்தால் ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடலாம். இப்படி நான் ஒரு கருத்தை முன்வைத்தால் ஏற்பீர்களா?

**ப:-** இல்லை அப்படிக் கூறுவதை நான் ஏற்கமாட்டேன். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அரசியல் கட்சிகளில் ஒருவித போட்டித் தன்மை இருக்கும். உதாரணமாக அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ஒபாமா வென்ற பின்னர் தனது பிரதான போட்டியாளராக இருந்த ஹிலாரியை வெளிவிவகாரத்துக்குப் பொறுப்பாக நியமித்தார். இப்படியான நிலைமை பல இடங்களில் இருக்கின்றது.

எனவே, நாம் எப்போதும் ஜனநாயக ரீதியிலான தீர்ப்புக்கு தலைவணங்க வேண்டும். இந்த இடத்தில்தான் நாம் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். செயற்குழு தீர்மானத்தைப் போன்று வெளித்தீர்மானங்களும் மிகவும் முக்கியமானவை. எனவே, இறுதியில் கட்சியின் மகாசம்மேளனம்தான் தீர்மானம் எடுக்கவேண்டும். எனவே, மக்களின் எண்ணம் என்ன என்பதை அந்த சம்மேளனத்தில் நாம் பார்க்கமுடியும்.

**கே:-** வெளித்தீர்மானம் என்று நீங்கள் கூறியது யாரை அல்லது எதனை?

**ப:-** அதுதான் மக்களின் தீர்மானம். ஐ.தே.க மகாசம்மேளனத்தில் எடுக்கப்படும் தீர்மானத்திற்கு நாம் தலைவணங்க வேண்டும். ஒருவர் வெற்றி பெறுவார். மற்றவர் வெற்றிபெறமாட்டார். அத்துடன், அதெல்லாம் முடிந்துவிடும். இதில் ரணில் விக்கிரமசிங்கவுடன் எனக்குத் தனிப்பட்ட எந்தக் கோபமும் கிடையாது. கொள்கையளவில் ஏற்பட்ட தீர்மானத்துக்கமைய நன்றாகச் சிந்தித்து நான் இந்த முடிவுக்குவந்தேன்.

மகாநாயக்க தேரர்கள் மற்றும் இந்துமதத் தலைவர்களின் ஆசீர்வாதம் எனக்கு இப்போதே கிடைத்திருக்கிறது.

**கே:-** ஐ.தே.க தலைவராக ரணில் விக்கிரமசிங்க நீடிக்கும்வரை அரசுக்கு நல்லதென அண்மையில் அமைச்சர் ஒருவர் நாடாளுமன்றத்தில் கூறியிருந்தார். ரணிலை தலைவர் பதவியில் வைத்திருக்க அரசும் விரும்புகிறதே? இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**ப:-** (சிரிக்கிறார்) இதைப்பற்றி நீங்கள் அரசிடம்தான் கேட்கவேண்டும். ஆனால், அரசு என்னிடத்தில் கோபத்திலிருக்கிறது. அது எனக்குத் தெரியும்.

**கே:-** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் அரசுக்குமிடையிலான பேச்சு குறித்து ஐ.தே.க.வின் நிலைப்பாடு என்ன?

**ப:-** அதிகாரப்பரவலாக்கலில் ஐ.தே.க. எப்போதும் நம்பிக்கை கொண்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன 13 ஆவது திருத்தத்தைக் கொண்டுவந்ததும் இதற்காகத்தான். 13 ஆவது திருத்தமானது இன்று எமது அரசமைப்பின் ஓர் அங்கமே. இதை நடைமுறைப்படுத்தாவிட்டால் அரசமைப்பை மீறும் ஒரு செயலாகவே அதனை நாம் கூறுகிறோம். போர் முடிந்த கையோடு நட்புறவுக் கையை நீட்டியிருந்தால், முழுதேசத்தின் அனைவரையும் ஒன்றிணைக்க முற்பட்டிருந்தால் இதனைவிட சிறந்த பலன்களைப் பெற்றிருக்கலாம். சர்வதேசத்திலிருந்து கூட எமக்கு நிறைய உதவிகளைப் பெற்றிருக்கலாம். ஜப்பான், ஜேர்மனி போன்ற நாடுகள் போருக்குப்பின்னர் வளர்ச்சியடைய சர்வதேச நாடுகள் செய்த உதவிகள் எமக்கு உதாரணமாக உள்ளன.

ஆனால், நாம் வேறு கொள்கைகளைப் பின்பற்றினோம். போர் முடிந்தவுடன் வடக்கு மக்களுக்கும் ஜனநாயக உரிமைகளைப் பெற்றுக்கொடுத்திருக்கலாம். மாகாண சபைத் தேர்தலை நடத்தியிருக்கலாம். தமது தலைவர்களைத் தெரிவுசெய்து அவர்களும் நிர்வாக செயற்பாடுகளுக்குள் வந்திருக்க வாய்ப்பு இருந்திருக்கும். ஆனால், ஏதோவொரு காரணத்தினால் அரசு அதனைச் செய்யவில்லை. உள்ளூராட்சி சபைத்தேர்தலை நடத்தியது போன்று மாகாணசபைத் தேர்தலையும் நடத்துமாறு நாம் கோருகிறோம்.

அரசமைப்பில் 13ஆவது திருத்தத்துக்கமைய செயற்பட வேண்டுமென்றே நாம் கோருகிறோம். 13 பிளஸ் என்றனர். 13ஆவது அரசமைப்பு திருத்தத்தை அமுல்படுத்துவதில் சிக்கல் இருந்தாலும், அதனைப் பேசித் தீர்க்கலாம் என்றுதான் நாம் கூறுகிறோம். தமிழர்களும் இந்த நாட்டில் தன்மானத்துடன் வாழக்கூடிய உரிமையை நாம் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

எந்தவொரு பிரஜையும், நாட்டின் எந்தவொரு இடத்திலும் கௌரவமாக வாழும் உரிமையை நாம் பெற்றுக்கொடுக்க வேண்டும். வடக்கில் வீட்டுப் பிரச்சினை, மொழிப் பிரச்சினை என்பவற்றை விரைவில் தீர்க்கவேண்டும். யுத்த மனநிலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தெற்கின் பாசத்தையும் அரவணைப்பையும் வழங்கவேண்டும். இதுதான் எமது எதிர்பார்ப்பு; பிரார்த்தனை. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் இந்த அரவணைப்பையும், ஆதரவையும் வழங்க நாம் தயார்.

**கே:-** பொலிஸ், காணி அதிகாரங்கள் மற்றும் வடக்கு, கிழக்கு இணைப்பு இந்த மூன்று விடயங்களில்தான் அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையில் சிக்கல் ஏற்பட்டது. இந்த மூன்று விடயங்களிலும் ஐ.தே.கவின் நிலைப்பாடு என்ன?

**ப:-** ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரை இந்த விடயங்கள் குறித்து பேசப்பட வேண்டுமென்றுதான் நாம் கூறுகிறோம். பொலிஸ் அதிகாரம் குறித்து முக்கியமாகப் பேசவேண்டும். இன்று இந்த நாட்டில் அரசியல்மயப்படுத்தப்பட்ட பொலிஸ்துறையே உள்ளது. ஆளுங்கட்சி அமைப்பாளர் ஒருவரால் பொலிஸ் பொறுப்பதிகாரி ஒருவர் நியமிக்கப்படும் சூழ்நிலை இருக்கிறது.

எனவே, பொலிஸில் நீதியை எதிர்பார்க்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. மறுபுறம் இந்த அதிகாரங்க்ள் இன்னமும் தெற்குக்கும் கொடுக்கப்படவில்லை. எனவே, சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு ஊடாக நாம் பரீட்சார்த்த செயற்பாடுகளை மேற்கொள்ளலாம். உதாரணமாக இதனைச் செய்துபார்க்கலாம். அந்நியோன்ய நம்பிக்கையைக் கட்டியெழுப்ப சில பரீட்சார்த்த செயற் பாடுகளை செய்துபார்க்கலாம்.

சில மாகாணசபைகளில் காணி அதிகாரங்கள் குறித்து .சில கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றை ஆராய்ந்து பார்க்கலாம். வடக்கு, கிழக்கை ஒன்றிணைப்பது பற்றி 13ஆவது அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதை நன்கு ஆராய்ந்து எப்படிச் செய்வது என்று பார்க்கவேண்டும். அரசு அரசமைப்பின்படி செயற்பட்டு, பேச்சு நடத்தினால் இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் இலகுவாகத் தீர்க்கலாம். ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரை, குறிப்பாக என்னைப் பொறுத்தவரை பேச்சுகள் மூலம் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்று உறுதியாக நம்புகிறேன். இது முடியும்.

**கே:-** வடக்கு, கிழக்கு நீதிமன்றத் தீர்ப்பினால்தான் பிரிக்கப்பட்டுள்ளது. இதனால், மீண்டும் சேர்க்கப்படுவதில் சிரமம் இருப்பதாக நீங்கள் கருதுகிறீர்களா?

**ப:-** சிலவேளை, நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மாற்றக்கோரி சட்டதிட்டங்களை வகுக்கும்போது சில தடங்கல்கள் ஏற்படலாம். ஆனால், இதனையும் பேசி, எப்படிச் செய்வதென்று ஆராய்ந்து அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தீர்மானமொன்றுக்கு வரமுடியும்.

**கே:-** தீர்வுக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இடம்பெற ஐ.தே.க. மறுத்துவிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மறுத்துவிட்டது. கூட்டமைப்பு, தெரிவுக்குழுவில் இடம்பெற வேண்டுமென அரசு அடம்பிடிக்கின்றது. தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு


நேர்காணல் - ஆர்.சிவராஜா

இடம்பெற வேண்டுமென நீங்கள் கருதுகிறீர்களா?

**ப:-** அதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் உள்ளது. முதலில் அரசு தீர்வு தொடர்பான தனது நிலையைத் தெளிவாகக் கூறவேண்டும். அதைவிடுத்து, காலத்தை இழுத்தடிக்கும் நோக்கில் அரசு எதையும் செய்யுமானால், அதில் பிரயோசனம் இல்லை. நல்லெண்ண அடிப்படையில்தான் எதனையும் செய்யவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுகளில் பங்குபற்றியிருக்கிறது. எனவே, கூட்டமைப்பினருக்குத் திருப்தியான - ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பதிலை அரசு கூறவேண்டும். இப்போது பரஸ்பர நம்பிக்கை மோசமடைந்த நிலையில் இருக்கிறது. அதைத்தான் அரசு கவனிக்கவேண்டும். *

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
17.09.1940

மறைவு
27.12.2010

திதி: அபரபக்க ஸப்தமி
(17.12.2011)

புன்னாலைக்கட்டுவன்
தெற்கைச் சேர்ந்த
அமரர்
**தம்பையா கணேசன்**

(ஓய்வுபெற்ற பொறியியலாளர் - இலங்கை சிமெந்துக் கூட்டுத் தாபனம் - காங்கேசன்துறை, இலங்கை ரயர் கூட்டுத்தாபனம் - களனிய.)

ஓராண்டு சென்றாலும் எங்கள் இதயத்தைவிட்டு
நீங்காத எங்கள் ஆருயிர் தெய்வமே அப்பா!
பாசமாய் வளர்த்து, பாரினிலே போற்ற வாழ்க்கைக்கு
வழிகாட்டிய எங்கள் அன்புத் தெய்வமே அப்பா!
எம்மை எல்லாம் மறந்து எங்கு சென்றீர் அப்பா!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள்
நினைவுகள் எங்கள் நெஞ்சத்தை விட்டகலாது.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கணேசன் துஷ்யந்தன் (மகன்),
கீதாஞ்சலி (மகள்), அபர்ணா (மருமகள்),
திருச்செந்தூரன் (மருமகன்),
திருஷாங்கன், கீர்த்திகா (பேரப்பிள்ளைகள்),

பலாலிவீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு. சுன்னாகம்.

(11698)(2-6)

## புதிய வைத்தியர் நியமனம்

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு மயக்க மருந்து ஏற்றும் வைத்தியராக சற்குணம் சுயேந்திரன் இம்மாதம் நடுப்பகுதி முதல் நியமிக் கப்பட்டுள்ளார். யாழ். போதனா வைத்தியசாலையில் டாக்டராகப் பணியாற்றி வந்த இவர் அங்கு அறுவை சிகிச்சைக்குள்ளோருக்கு மயக்க மருந்து ஏற்றும் வைத்தியராக மேலதிக பயிற்சியைப் பெற்றதைத் தொடர்ந்து பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த வைத்தியசாலையில் மயக்க மருந்து ஏற்றும் வைத்தியராகப்பணியாற்றிய பிரான்ஸ் திரும்பியதை அடுத்து அந்த வெற்றிடத்துக்கு நியமிக்கப்பட்டுள்ள இவர்கள் அறுவை சிகிச்சை நோயாளர்களுக்கு மயக்க மருந்து ஏற்றும் பணியுடன் பொது வைத்தியராகவும் பணியாற்றி வருகின்றார்.

(எ-236)

## கண்ணீர் அஞ்சலி



சிறுப்பிட்டி பிரதேச பொதுச்சுகாதார
பரிசோதகராகக் கடமையாற்றும்
ரதன் அவர்களின் அன்புத் தந்தை
கணபதிப்பிள்ளை ஆனந்தவேல்
(ஓய்வு பெற்ற பதிவு வைத்திய அதிகாரி)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம்,
யாழ்.மாவட்டம். (11723)(6,8,9)

## அந்தியேட்டி அழைப்பும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

தோற்றம் – 1934 – 03 – 23



மறைவு – 2011 – 11 – 17

திருமதி
**தங்கவேலு இராஜஇராஜேஸ்வரி**

கடந்த 17.11.2011 ஆம் திகதியன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (17.12.2011) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதுடன், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

இருபாலைச் சந்தி,
கோண்டாவில் வீதி,
கோப்பாய் தெற்கு. (C\6922) (10,6,7) குடும்பத்தினர்.



# இடமாற்றத்தை இரத்துச் செய்யும் தீர்மானம் இதுவரை இல்லை

## முறையீட்டு விண்ணப்பம் பரிசீலனை என்கிறார் பணிப்பாளர்

மட்டக்களப்பு,டிசெ.17

கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ள ஆசிரியர் இடமாற்றங்களை இரத்துச் செய்யும் எந்தத் தீர்மானமும் இதுவரை எடுக்கப்படவில்லை என்று மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஈ.போல் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்ற சர்ச்சை தொடர்பாகக் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆசிரியர் இடமாற்றம் மேற்கொள்ளப்படவேண்டியது அவசியமும் அவசரமுமாகும்.

கிண்ணியா, மூதூர், கல்குடா, திருகோணமலை வடக்கு, மண்முனை மேற்கு ஆகிய பகுதிகளில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. இங்குள்ளவர்களும் மாணவர்கள்தான். அம்பாறை மாவட்ட மாணவர்களின் கல்வி நலனில் எந்தளவுக்கு அக்கறை செலுத்துகின்றோமோ அதேயளவு அக்கறையை இந்தப் பிரதேச மாணவர்கள் விடயத்திலும் காட்டவேண்டியுள்ளது.

நியாயமற்ற இடமாற்றம், மனிதாபிமானமற்ற இடமாற்றம் என்ற கருத்து வெறும் போலியானது. எதற்குத்தான் ஆர்ப்பாட்டம் நடைபெறவில்லை?

நியாயம், மனிதாபிமானம் பற்றிப் பேசுபவர்கள் இந்தப் பிரதேச மாணவர்களைப் பற்றியும் சிந்திக்கவேண்டும். அப்பகுதி மாணவர்கள்மீதும் நியாயத்தையும், மனிதாபிமானத்தையும் காட்டுங்கள்.

எமது இடமாற்ற வரையறைக்குள் அதிகளவாக சம்பந்தப்படுபவர்கள் பெண் ஆசிரியைகளாக உள்ளனர். இதற்கு நாம் எதுவுமே செய்ய முடியாது.

வெளிவலயங்களுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ள ஆசிரிய, ஆசிரியைகள் முறையீடு செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளோம். வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட மேன்முறையீட்டு விண்ணப்பப்படிவங்கள் இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களால் பூர்த்தி செய்யப்பட்டு, வலயக்கல்விப் பணிப்பாளர்களின் பரிந்துரைகளுடன் எமக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களைப் பரிசீலிக்கும் நடவடிக்கை நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது. இது தொடர்பான முடிவு விரைவாக வலயப்பணிப்பாளர்களூடாக உரிய ஆசிரியர்களுக்கு அனுப்பிவைக்கப்படும். விண்ணப்பத்தைச் சமர்ப்பித்துள்ள பெண் ஆசிரியைகளில் பெரும்பாலானோர் தமக்குள்ள பிள்ளைகள் குறித்தே சுட்டிக்காட்டியுள்ளனர்.திட்டமிட்டபடி எதிர்வரும் 2 ஆம் திகதி இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்படும்- என்றார். (ச)

### படகு கவிழ்ந்து விபத்து; இளைஞரைக் காணவில்லை இருவர் பாதிப்பு

மட்டக்களப்பு,டிசெ.17

மட்டக்களப்பு - முகத்துவாரத்தில் படகொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் காணாமற் போயுள்ளதோடு மேலும் இருவர் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. மாமாங்கம் சகாயமலர் ஆலய வீதியைச் சேர்ந்த துரைசாமி புவனேந்திரன் (வயது-24) என்பவரே காணாமற்போனவராவார்.

அவருடன் சென்று நீரில் மூழ்கி விபத்துக்குள்ளான இருவரும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காணாமல்போன நபர் இன்னும் கண்டுபிடிக்கப்படாத நிலையில் மட்டக்களப்புப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

### துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

கொழும்பு,டிசெ.17

மாத்தறை - அக்குரஸ்ஸ, தெதியகல பிரதேசத்தில் ஒருவர் துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

வீட்டில் இருந்த இந்த நபர் மீது இனந்தெரியாத நபர் நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக அக்குரஸ்ஸ பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து படுகாயமடைந்த நபர் மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அக்குரஸ்ஸ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)



அட்டாளைச்சேனை, திராய்க்கேணிக் கிராமத்தின் பிரதான வீதி 30 வருடங்களுக்கு மேலாகப் புனரமைக்கப்படாது காணப்படுகின்றது.

## நூலுக்கான தீர்வை வரி குறைப்பு: கைத்தறி உற்பத்தி விலை குறையும்

### மத்திய மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

நுவரெலியா, டிசெ.17

2012 ஆம் ஆண்டு புதிய வரவு - செலவுத் திட்டத்தில் இறக்குமதி செய்யப்படும் நூல் வகைகளுக்கான தீர்வை வரி நீக்கப்பட்டதன் காரணமாக உள்ளூர் கைத்தறிகளின் விலை குறையும் என்று மத்திய மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்தார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற மத்திய மாகாணக் கைத்தறி உற்பத்தியாளர்களின் பரிசளிப்பு நிகழ்வில் அவர் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு குறிப்பிட்டார். இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் உள்ளூர் உற்பத்திக் கோட்பாடு 1977ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் மாற்றப்பட்டுவிட்டதால் நாடு பின்விளைவுகளை எதிர்கொண்டுள்ளது. இந்தநிலையில் மத்திய மாகாண நெசவுக் கைத்தொழில் ஏனைய மாகாணங்களை விடவும் முன்னிலையில் காணப்படுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இந்தத் துறையில் ஈடுபடுவோருக்கு பல்வேறு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- என்றார். (ச)

## கண்டி கடுகதி ரயிலில் தனியாரின் சொகுசுப் பெட்டி

### கொமிஷன் அடிக்கிறார் அமைச்சர் என்கிறார் அநுர எம்.பி.

கண்டி, டிசெ.17

கண்டிக்குச் செல்லும் கடுகதி ரயிலில் தனியாரின் சொகுசுப் பெட்டியை இணைத்துப் போக்குவரத்து அமைச்சர் கொமிஷன் அடிக்கின்றார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க நேற்று முன்தினம் நாடாளுமன்றில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வரவு-செலவுத்திட்டத்தின் போக்குவரத்து அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரயில் திணைக்களத்தை லாபகரமான திணைக்களமாக மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை. மாறாக, அங்கு ஊழல் மோசடிகளே இடம்பெறுகின்றன. கொழும்பில் இருந்து கண்டி செல்கின்ற ரயிலில் தனியாரின் சொகுசு ரயில்பெட்டி இணைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சொகுசு ரயில் பெட்டியில் பயணம் செய்வோரிடம் பயணக் கட்டணமாக 1,500 ரூபா பெறப்படுகின்றது. அதில் 360 ரூபா மட்டுமே ரயில்வே நிலையத்திற்குச் செலுத்தப்படுகின்றது. மீதிப்பணம் அந்த ரயில்பெட்டியின் சொந்தக்காரருக்குச் செல்கின்றது.

உண்மையில், அமைச்சர் கொமிஷன் அடிக்கும் திட்டமாகவே இது உள்ளது. இந்த சொகுசு ரயில் பெட்டி குறிப்பிட்ட தனியாருக்குச் சொந்தமானதும் அல்ல. இரண்டரைக் கோடி ரூபாவுக்கு இந்தப் பெட்டியைக் கொள்வனவு செய்து 25 லட்சம் ரூபாவுக்கு அதைத் திருத்தி அமைத்து ரயில்வே திணைக்களம் அதை தனியாருக்குக் கொடுத்துள்ளது. அதனால் ரயில்வே திணைக்களம் நட்டத்தை எதிர்கொள்கின்றது.

இந்த ரயில் ஒரு நாளைக்கு இரண்டு தடவைகள் கண்டிக்குச் சென்று வருகின்றது. ஓடுகிற ரயிலில் அமைச்சர் கொமிஷன் அடிக்கும் திட்டமாக இது உள்ளது - என்றார். (ச)

## கிழக்கு ஆசிரியர் இடமாற்றம் கல்வியில் வீழ்ச்சியை ஏற்படுத்தும்

மூதூர், டிசெ.17

கிழக்கு மாகாணக் கல்விப் புலத்திலிருந்து ஆசிரியர்கள் மனச்சோர்வுடன் ஓய்வுபெற்றுச் செல்லும் நிலை குறித்து அனைவரும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். இந்தநிலை தொடர அனுமதிக்கக்கூடாது. அவ்வாறு தொடருமானால் கல்வி வளர்ச்சியில் வீழ்ச்சி ஏற்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை நகரசபையின் உறுப்பினர் சி.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் ஆசிரியர் இடமாற்றம் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கிழக்கு மாகாணத்தில் வலய மட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆசிரிய இடமாற்றத்தின் போது ஆசிரியர்கள் பொருத்தமற்ற முறையில் வெளி வலயங்களுக்கும் வெளிமாவட்டங்களுக்கும் இடமாற்றம் செய்யப்பட்டனர். இவ்விடமாற்றப் பாதிப்பை ஜீரணித்துக்கொள்ள முடியாத நிலையில் அனுபவம் மிக்க ஆசிரியர்கள் பலர் ஓய்வுக்காக விண்ணப்பித்திருப்பதாகப் பல்வேறு வலயங்களிலிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

இடமாற்றப் பாதிப்பை எதிர்கொண்ட ஆசிரியர்களினால் செய்யப்பட்ட மேன்முறையீடுகள் சாதகமான முறையில் வலய இடமாற்றச் சபைகளினால் பரிசீலிக்கப்படவில்லை என்பதும் ஆசிரியர்களின் ஆதங்கமாகும். எனவேஇந்த விடயம் குறித்து கல்வித் திணைக்கள மட்ட அதிகாரிகளும், கல்வியாளர்களும், அரசியல்வாதிகளும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

இவ்வாறு ஆசிரியர்கள் மனச்சோர்வுற்று ஓய்வு பெறுவதால் கிழக்கு மாகாணக் கல்விப் புலத்திலிருந்து ஆசிரியர்கள் வெளியேற்றப்படும் அபாயம் குறித்து அனைவரும் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

### முஸ்லிம் அரச அதிபரை நியமிக்க இணக்கம்

திருகோணமலை,டிசெ.17

முஸ்லிம் அரச அதிபர் ஒருவரை நியமிக்கவேண்டுமென்ற கோரிக்கையை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ். சுபைர் தெரிவித்தார்.

கிண்ணியாவில் இடம்பெற்ற ஆயுர்வேத வைத்தியசாலை திறப்பு நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆசியாவில் சிறந்த சுகாதார சேவை மேம்பாடுடைய நாடாக இலங்கை திகழ்கிறது. இதனையிட்டு நாம் அனைவரும் மகிழ்ச்சியடைய வேண்டும். சுதேச வைத்தியமும் ஏனைய நாடுகளைவிட இங்கு மேலோங்கி நிற்கின்றது.

கிண்ணியா மக்கள் சுகாதாரத்துறையில் மிகுந்த தேவையுடையவர்களாக இருக்கின்றனர். அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஒரு ஜனநாயகக் கட்சி. அது விடுதலை இயக்கமாகத் தொடர்ந்து செயற்படும்.- என்றார். (ச)

# விவசாயிகளின் போராட்டத்தால் இதுவரை 13 கோடி ரூபா நட்டம்

## ஹரிஸன் எம்.பி.

கொழும்பு, டிசெ.17

மரக்கறி வர்த்தகர்கள் மற்றும் விவசாயிகள் மேற்கொண்டு வந்த போராட்டம் காரணமாக கடந்த ஒரு சில நாள்களில் மட்டும் சுமார் 13 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிஸன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத் திட்டத்தில் போக்குவரத்து அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தீர்க்கப்படவேண்டிய நிலையில் எத்தனையோ பிரச்சினைகள் உள்ளன. ஆனால், அரசு தேவையில்லாமல் விவசாயிகளின் வாழ்க்கையில் கைவைக்கின்றது.

மரக்கறிகளை ஏற்றிச் செல்வதற்காக அரசு விதித்த நடைமுறை நாட்டில் பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியது. இது அரசின் பிழையான போக்குவரத்து முறையாகும்.

மரக்கறிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மரக்கறிகளின் விலை கிலோ மூவாயிரம் ரூபாவையும் தாண்டியுள்ளது. வைத்தியசாலைகள், இராணுவமுகாம்கள் மற்றும் ஹோட்டல்கள் போன்றவற்றில் உணவு சமைப்பதற்கு மரக்கறிகள் இல்லை.

அரசின் இந்தத் திட்டத்தை அமைச்சர் மத்தும பண்டார தென்னக்கோன் எதிர்த்துள்ளார். ஒரு சிலரின் தேவைக்காக இந்தத் திட்டம் நடை முறைப்படுத்தப்படுகிறது.

இதனால், விவசாயிகள் எவரும் நன்மையடையப் போவதில்லை - என்றார். (ச-சி)

# அதிவேக நெடுஞ்சாலையில் நடந்து சென்ற நபர் கைது

கொழும்பு, டிசெ.17

தென்பகுதிக்கான அதிவேக நெடுஞ்சாலையில் நடந்து செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில் அதில் நடந்துசென்ற நபர் ஒருவரை நெடுஞ்சாலை போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் நேற்றுமுன்தினம் காலை கைதுசெய்துள்ளனர்.

இந்த வீதி கடந்த மாதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் சம்பிரதாயபூர்வமாக போக்குவரத்துக்காகத் திறந்துவைக்கப்பட்ட பின்னர், அதில் நடந்து சென்றமைக்காக கைதுசெய்யப்பட்ட முதல் நபர் இவராவார்.

இந்தச் சந்தேகநபர் ஹோமாகம நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு அவர்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் நெடுஞ்சாலை போக்குவரத்துப் பிரிவு பணிப்பாளர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த அதிவேக வீதியில் போக்குவரத்துச் சட்டங்களை மீறிச் செயற்பட்ட 153 வாகனச் சாரதிகள் மீது இதுவரை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

எதிர்காலத்திலும் தெற்கு அதிவேக வீதியில் போக்குவரத்துச் சட்டங்களை மீறுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வீதியில் இதுவரை 15 வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வீதியில் வாகனங்களைச் செலுத்துவோர் விசேட போக்குவரத்து விதிகளைப் பின்பற்றுவது மிகவும் அவசியமானது எனப் பொலிஸார் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சிறுவர்கள் வெளிநாடுகளுக்கு கடத்தப்படுவதை தடுப்பதற்கான புதிய சட்டங்கள் விரைவில்

## நீதியமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.17

பெண்களையும், சிறுவர்களையும் வெளிநாடுகளுக்கு கடத்துதல் மற்றும் திருட்டாகப் பணத்தைப் பரிமாற்றுதல் போன்ற குற்றச்செயல்கள் தொடர்பில் இலங்கை அரசால் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அவற்றை முறியடிப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது.

எனினும், தற்போதுள்ள சட்டங்களுக்கு மேலதிகமாக அவை சம்பந்தமான புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும் என்று நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் ஆரம்பமான இலங்கை குற்றச்செயல் தொடர்பான மூன்று நாள் செயலமர்வை கொள்ளுப்பிட்டி சின மண்ட் கிராண்ட் ஹோட்டலில் ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டுக்கு நாடு பெண்களையும், சிறுவர்களையும் கடத்துதல், பணத்தை திருட்டாக பரிமாற்றுதல், போதைப்பொருள் வர்த்தகம் போன்ற குற்றச்செயல்கள் இலங்கை மற்றும் பிராந்திய நாடுகளுக்கு ஊடாகவும் மேற்கொள்ளப்படுவது அதிகரித்துக் காணப்படும் நிலையில் அவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் அவசியமாகும்.

எமது நாடாளுமன்றம் இவ்வாறான குற்றச்செயல்களைத் தவிர்ப்பதற்கான சட்டங்களைக் கொண்டுவந்துள்ள போதிலும், அவை தொடர்பில் இன்னும் சில சட்டங்கள் விரைவில் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும். குற்றச்செயல்களைத் தடுப்பது தொடர்பில் இவ்வாறான செயலமர்வுகளில் கலந்துகொள்வதன் மூலம் சம்பந்தப்பட்ட பிரதிநிதிகள் பயிற்சியையும், அனுபவத்தையும் பெறமுடியும் - என்றார். (ச)

# பாடசாலை அனுமதியின்போது லஞ்சம்பெற்ற அதிபர்கள் கைது

கொழும்பு, டிசெ.17

லஞ்சம் பெற்றனர் என்ற சந்தேகத்தின்பேரில் இரண்டு பாடசாலைகளின் அதிபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு மாத காலப்பகுதிக்குள் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று ஆணைக்குழுவின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் கூறினார்.

பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுமதிக்கும் பொருட்டு அவர்களின் பெற்றோர்களிடம் இந்த அதிபர்கள் லஞ்சம் பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

4-6 Months
Cert.Medical Assistant
வைத்தியர்களிடமே நேரடியாக கற்கும் குறுகியகால பகுதி நேர பாடநெறி, வேலைவாய்ப்புடன்.ஆர்வமுள்ள அனைவருக்கும்.
Knowledge Universe
Professional Education by Graduate Professionals
No 75,Temple Road,Jaffna.
www.kugroup.info
K.U Education -"Practical and Result Oriented." Tel:0776458253

## ஈரவிழிகளுடன் 31 ஆம் நாள் நினைவஞ்சலி





மலர்வு:-
21.09.1921
வேலணை மண்ணில்

உதிர்வு:-
17.11.2011
கனடா மண்ணில்

எங்கள் அன்புத் தெய்வம்

### திருமதி தம்பிராசா இராசம்மா

வந்தோரை வரவேற்கும் வேலணையில்
வந்துதித்த எம் தாயே (இராச அம்மா)
பண்பாலே உயர்தவரே
பாசத்தை பொழிந்தவரே

கண்ணுக்குள் கண்ணாக எமை வளர்த்தீர்
கண்காணாத் தேசமதில் காலமானீர்
காணாமல் தவிக்கின்றோம்
கதறி அழுகின்றோம்


ஊணின்றி உறக்கமின்றி
உணர்வுகளும் அழிந்ததம்மா
உத்தமியே எம் தாயே
உயிர் பெற்று வந்திடம்மா

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்*

– உங்கள் பிரிவால் நினைந்துருகும்
பூமகள் சத்தியநாதன்
முருகதாஸ் குடும்பம் - (கொழும்பு).
கணேசதாஸ் குடும்பம் - (கனடா).
யோகதாசன் குடும்பம் - (கனடா).
நவரத்தினராசா சிவமலர் குடும்பம் - (கனடா)

16/24,சிவன்கோயில் வீதி,
திருநெல்வேலி.
(11630)(2.6.7)

## எட்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
17.12.1945

மறைவு
17.12.2003

### பொன்னுத்துரை ஐயாத்துரை (துரைசிங்கம்)

(முன்னாள் சிறாப்பர், காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனம்)

பாரினில் பவனி வந்த காலங்கள்,
பசுமை நினைவுகள் கனவாகிப்போய்
வருடங்கள் எட்டாக ஓடி மறைந்தன.
வருடும் மனத்திரையில் நடமாடிய நினைவுகள்
நிழலாகிப் போனதென்று நித்தம் நித்தம்
நினைக்கின்றோம்
உம் நினைவுகள் என்றும் எம்மோடு.

315A.V. வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.
(11710) (10.7.9)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

# கேரளாவில் தமிழர்கள் மீது தாக்குதல் பெண்கள் தலைமையில் கண்டனப் பேரணி

## கம்பத்தில் திரண்டனர் ஒன்றரை லட்சம் பேர்



கம்பம், டிசெ.17

கேரளாவில் தமிழர்களைத் தாக்கி விரட்டியடிப்பதைக் கண்டித்தும், மத்திய மாநில அரசுகள் தமிழர்களைக் காப்பாற்றக் கோரியும், கம்பத்தில் நேற்று பெரும் திரளான பெண்களின் தலைமையில் சுமார் ஒன்றரை லட்சம் பேர் திரண்டு மாபெரும் பேரணி நடத்தினர்.

நாலாபுறமும் இருந்து ஆயிரக்கணக்கில் ஆண்களும், பெண்களும் குவிந்து வந்ததைப் பார்க்கும்போது அரபு நாடுகளில் அண்மையில் நடந்த மிகப்பெரிய மக்கள் கிளர்ச்சியைப் போல இருப்பதாக அந்தப் பேரணி அமைந்தது.

காலை 9 மணியில் இருந்தே கம்பம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் இருந்து மக்கள் அணி, அணியாக வரத் தொடங்கினார்கள். இந்தப் பேரணிக்கு யாரும் திட்டமிடவில்லை. மக்களே தாங்களாக முன்வந்து கூடி பேரணியை நடத்தினர். மேலும் கம்பம் மற்றும் சுற்றுப் பகுதிகளில் ஒரு கடையும், வர்த்தக நிறுவனமும் செயற்படவில்லை. அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

இடுக்கி மாவட்டத்தில் பெண்களையும், தமிழர்களையும் தாக்கி விரட்டியடித்த மலையாளிகளின் செயலால் கம்பம் மற்றும் சுற்றுப் பகுதிகளில் மக்கள் பெரும் கொந்தளிப்புடன் காணப்படுகின்றனர். தமிழகத்துக்கு அகதிகள்போல வந்த தமிழர்களை தேவாரம் பகுதியில் தங்க வைத்து பொது மக்களே உணவு கொடுத்து ஆறுதல் கூறி அடைக்கலம் கொடுத்துள்ளனர்.

இந்த செயல்கள் கம்பம் பகுதியில் பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மிகப் பெரிய ஆவேசத்துடன் நேற்று கம்பத்தில் திரண்ட இந்த மக்கள் கூட்டம் கேரள அரசையும், தமிழர்கள் மீதான தாக்குதலையும் கண்டித்து ஆவேச கோஷம் எழுப்பினர். (வ)

# முல்லைப் பெரியாறு அணை விவகாரம்: கேரளாவிலிருந்து 170 தமிழர் குடும்பங்கள் விரட்டியடிப்பு

இந்தியாவின் கேரளா மாநிலத்தில் இருந்து இதுவரை 170 தமிழர்களின் குடும்பங்கள் வலுக்கட்டாயமாக நேற்று முன்தினம் தமிழகத்துக்கு விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அடர்ந்த வனப்பகுதி வழியே நடந்து தமிழகம் வந்து சேர்ந்தனர்.

கேரளாவில் உள்ள முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை காரணமாக கேரள மாநிலம் இடுக்கி மாவட்டம், உடும்பன்சோலை, பாப்பம்பாறை, பாரத்தோடு, கைலாசபாறை, காமாட்சிகுளம், ஆனைக்கல் மெட்டு, தூக்குப்பாலம், நெடுங்கண்டம், பகுதிகளில் வசிக்கும் தமிழர்கள் மீது அங்கு வசிக்கும் கேரளாவை சேர்ந்தவர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இதனால் தோட்டத் தொழிலாளர்கள் தேவாரம் குதிரைப் பாஞ்சான்மலையின் வழியாக சதுரங்கப் பாறை, சாக்குலூத்து மெட்டு மலையடிவார பகுதிகளில் இருந்து சுமார் 8 கிலோ மீற்றர் தூரம் நடந்து தமிழகத்தை நோக்கி வருகின்றனர்.

ஏற்கனவே 70 குடும்பத்தினர் விரட்டியடிக்கப் பட்ட நிலையில், நேற்று முன்தினம் மேலும் 100 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வந்துள்ளனர். கடந்த 3 தினங்களாக 170 குடும்பங்களைச் சேர்ந்த 500 இற்கும் மேற்பட்டவர்கள் வந்துள்ளனர்.

தமிழக மாநிலத்தைச் சேர்ந்த தேனி மாவட்ட ஆட்சியர் கே.எஸ்.பழனிச்சாமி உத்தரவின் பேரில் அவர்களை இங்குள்ள பள்ளிகளில் தங்க வைத்து மதிய உணவு, பால், ரொட்டி, போன்றவைகளை வருவாய்த்துறையினர் வழங்கி வருகின்றனர். (வ)

## இப்படியும் ஒரு போராட்டம்...



முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்த உச்ச நீதிமன்றம் விதித்த உத்தரவை நடைமுறைப்படுத்தக்கோரி, பழநியைச் சேர்ந்த குமார் (வய்து 40) என்பவர் கோவையில் இருந்து திருப்பூர், தேனி, திண்டுக்கல், கம்பம், கூடலூர், ராமநாதபுரம் வரைவுள்ள 7 மாவட்டங்களிலும் கால்களால் காரைச் செலுத்துகிறார்.

# சமூக இணையத் தளங்கள் தணிக்கை செய்யப்படமாட்டா

## மத்திய அரசு உறுதி

டில்லி,டிசெ.17

சமூக இணையத் தளங்களை தணிக்கை செய்யும் எண்ணம் மத்திய அரசுக்கு இல்லை என்று மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் கபில் சிபல் தெரிவித்தார்.

இணையத் தளங்களில் நடைபெறும் குற்றங்களைத் தடுப்பது பற்றிய ஆலோசனை கூட்டம் நேற்றுமுன்தினம் டில்லியில் நடைபெற்றது. இதில் கூகுள், பேஸ்புக், டுவிட்டர் போன்ற இணையத்தள நிறுவங்களின் அதிகாரிகள் கலந்து கொண்டனர். கூட்டத்துக்கு மத்திய தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் கபில் சிபல் தலைமை தாங்கினார்.

கூட்டம் முடிந்ததும், கபில் சிபல் செய்தியாளர்களிடம் கூறுகையில்:

இணையத்தள குற்றங்களில் ஈடுபடுவோரைத் தண்டிக்கத் தேவையான சட்டங்கள் தற்போது நடைமுறையில் உள்ளன. எனவே புதிய சட்டம் கொண்டு வரத்தேவை இல்லை - என்றார்.

இந்திய மக்களுக்கு பேச்சுரிமை போல எண்ணத்தை வெளிப்படுத்தும் உரிமையும் உள்ளது. அதன்படி இணையத் தளங்களில் மக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிப்பதை தடை செய்ய முடியாது. இதற்காக இணையத்தளத்தில் சென்சார் கொண்டு வரும் எண்ணம் அரசுக்கு இல்லை என்று, மத்திய தொலைத் தொடர்புத்துறை இணை அமைச்சர் சச்சின் பைலட் தெரிவித்தார். (வ)

# கேரள அரசைக்கண்டித்து தமிழக விவசாயி தீக்குளிப்பு

முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்தக் கோரியும், கேரள அரசைக் கண்டித்தும் போடியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் நேற்று தீக்குளித்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தேனி மாவட்டம் போடி காமராஜபுரத்தைச் சேர்ந்த விவசாயியான பாலாத்தூர் ராஜ் முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்தக் கோரியும், கேரள அரசைக் கண்டித்தும் நேற்று தீக்குளித்து ஆபத்தான நிலையில், மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (வ)

# சிறை நிரப்பும் போராட்டத்துக்கு ஹசாரே அழைப்பு

டில்லி, டிசெ.17

மத்திய அரசுக்கு மேலும் நெருக்கடி கொடுக்கும் விதமாக, சிறை நிரப்பும் போராட்டத்துக்கு அன்னா ஹசாரே அழைப்பு விடுத்துள்ளார்.

டில்லியில் செய்தியாளர்களைச் சந்தித்து உரையாடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வலுவான லோக்பால் பிரேரணையை நாடாளுமன்றம் நிறைவேற்ற வேண்டும்; அதற்கேற்ப கூட்டத்தொடரை நீடிக்க வேண்டும் என்று வலியுறுத்தி ஜனவரி முதலாம் திகதி முதல் சிறை நிரப்பும் போராட்டம் நடைபெறும். புதுடில்லியில் உள்ள சோனியா காந்தி, ராகுல் காந்தி இல்லங்களுக்கு முன்பாக நானே தலைமையேற்றுப் போராடுவேன். லோக்பால் பிரேரணைக்கு எதிரான நாடாளுமன்ற உறுப்பினர் இல்லங்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் - என்றார் அவர்.


தமது குழுவினரின் உயர் நிலைக் கூட்டம் முடிந்த பிறகு அவர் இவ்வாறு அறிவித்தார்.

இதன்போது நடைபெற்று வரும் நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் லோக்பால் பிரேரணை நிறைவேற வாய்ப்பில்லை என்று கூறப்படும் நிலையில், ஹசாரே இவ்வாறு அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது

எதிர்வரும் 27 ஆம் திகதி தொடக்கம் காலவரையற்ற உண்ணாவிரத்தை ஆரம்பிக்கப் போவதாக ஹசாரே ஏற்கெனவே அறிவித்துள்ளார். அத்துடன் இப்போது சிறை நிரப்பும் போராட்டத்தையும் அறிவித்துள்ளார். (வ)

# அண்ணா நூலக இடமாற்றத்துக்கானதடை நீக்கத்தை நிராகரித்தது உயர் நீதிமன்றம்

சென்னை, டிசெ.17





சென்னை அண்ணா நூலக இடமாற்றத்துக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குமாறு அரசு தரப்பில் விடுத்த கோரிக்கையை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

ஐந்து பேர் தாக்கல் செய்த பொது நல மனு மீது இடம்பெற்ற விசாரணையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேலும், விசாரணையின்போது நுங்கம் பாக்கம் கல்வித்துறை வளாகத்தில் புதிய நூலகம் கட்டும் பணிகள் நடைபெறு கின்றதா என்று நீதிமன்றம் கேட்டது. அரசுத் தரப்பில் இல்லை என்று பதில் வந்தபின், மறு உத்தரவு வரும்வரை, கட்டுமானப் பணி கள் எதுவும் நடைபெறக்கூடாது என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதுகுறித்து எதிர்வரும் ஜனவரி மாதம் 19 ஆம் திகதிக்குள் பதிலளிக்குமாறு கூறிய நீதிமன்றம், அன்றைய தினமே விசாரணை நடைபெறும் என்றும் வழக்கை ஒத்தி வைத்தது.

மேலும், தற்போதை நிலையில், அண்ணா நூலகத்தைச் சீராகப் பராமரிக்கவும் அரசுக்கு உத்தரவிட்டுள்ளது. (வ)

# பிரதமர் ரஷ்யா பயணம்: கூடங்குளத்தில் எதிர்ப்பலை

திருநெல்வேலி, டிசெ.17

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மூன்று நாள் பயணமாக ரஷ்யா சென்றுள்ளார். இந்த பயணத்தில் கூடங்குளம் தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று தெரியவந்த நிலையில், கூடங்குளம் அணு எதிர்ப்பாளர்கள் மூன்று நாள் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர். மேலும், வீடுகளில் கறுப்புக் கொடி ஏற்றி, கடைகளை அடைத்து எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். மீனவர்கள் 3 வது நாளாக மீன்பிடிக்கச் செல்லவில்லை.

# வீழ்ச்சியடைந்தது இந்திய ரூபா



ஆசிய நாணயங்களில் இந்திய ரூபாதான் இந்த வருடத்தில் மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்திய ரூபாயின் மதிப்பு கடந்த திங்கள் கிழமை தொடக்கம் கடுமையாக சரிவடைந்து வருகின்றது. இதேநிலை தொடருமாயின் டாலருக்கு நிகரான குறைந்த மதிப்பில் அது புதிய ஒரு சாதனையை நிகழ்த்தும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச சந்தையில் அமெரிக்க டொலரை வாங்குவதில் வங்கிகள் மற்றும் இறக்குமதியாளர்களிடம் கடும் போட்டி நிலவுவதால் டொலரின் மதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக இந்திய ரூபாயின் மதிப்பு மேலும் சரிவடைந்து செல்கின்றது.ஆசிய நாணயங்களில் இந்திய ரூபா தான் இந்த வருடத்தில் மிக மதிப்புக் குறைந்த கரன்சியாக மாறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (வ)

## வருடாந்த பொதுச் சபைக் கூட்டம்

எமது சங்கத்தின் வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் நாளை (18.12.2011) ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கமாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்பதை சகல பொதுச்சபை உறுப்பினர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

செயலாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம்(வ-து)
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்

(சி/6928)(3.6.9)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
27
03
1932



மறைவு
17
11
2011

### அமரர் சுப்பிரமணியம் பத்மநாதன்

எங்கள் குடும்பத்தின் தீபமாய்த் திகழ்ந்தாய் அப்பா
ஒரு கணப்பொழுதில் எம்மைவிட்டுப் பிரிந்தாய்
காரணம் அறியாது ஏங்கித் தவிக்கின்றோம்

கடந்த 17.11.2011 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப விளக்கின் பிரிவுத்துயர்கேட்டு தொலைபேசி, தந்தி மற்றும் மின்னஞ்சல் மூலமாக அனுதாபம் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டோருக்கும் நேரடியாக வந்து அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (17.11.2011) சனிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெறும் அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.21, ஈச்சமோட்டை வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## பன்றிகளின் தொல்லை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.17

நீர்வேலி, கோப்பாய் வயல் பகுதிகளில் காட்டுப் பன்றிகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இந்த பன்றிகள் வயல்களில் நடமாடுவதால் நெற்பயிர்கள் அழியும் நிலை ஏபட்டுள்ளது.

கூடுதலாக இரவு நேரங்களில் வயல் பகுதிக்கு வரும் இந்தப் பன்றிகள் பயிர்களை சேதப்படுத்துவதோடு இந்தப் பகுதி விவசாய நிலங்களில் பயிரிட்டிருக்கும் மரக்கறி பயிர்களையும் அழித்துவிட்டு செல்கின்றன.

இந்தப் பன்றிகள் தென்மராட்சி பகுதிகளில் இருந்தே கூடுதலாக இங்கு வந்து செல்வதாக விவசாயிகள் தெரிவித்தனர். (ம-26)

## பகவத படல வாசிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.17

யாழ்ப்பாணம் சத்திய சேவா நிலையத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை பகவத படலவாசிப்பு இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வின் இறுதி நாளான எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாராயண சேவை இடம்பெறும். (ம-313)

## வீடு விற்பனை

கட்டுடை, மானிப்பாயில் 5 பரப்பு காணியில் 6 அறையுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. Tel:0772929468

## வேலை ஆள் தேவை

மருந்தகம் ஒன்றுக்கு கணக்கு பதிவுகள் மேற்கொள்வதற்கு தகுதி உடைய, யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும், பெண்பிள்ளை ஒருவர் தேவை.[உங்கள் சுய விவரங்களை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்]
C/o உதயன், வி.இல:4206
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## அகமிக மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று கொழும்பு ஆனந்தக் குமாரசாமி மாவத்தையில் உள்ள ஜோன் டி சில்வா ஞாபகார்த்த கலையரங்கில்
**கலாபூஷணம் விருது**
பெறுகின்ற எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய வில்லிசைக் கலைஞர் ஆன்மீக எழுத்தாளர், தெய்வீக இசைச் சொற்பொழிவாளர், சைவப் புலவர், கவிமணி, மரபுக் கலைச் சுடர், கலைஞானச் சுடர், சிவநெறிக் கலாநிதி **இராசையா ஸ்ரீதரன்** அவர்கள் இன்னும் பல விருதுகள் பெற்று அவரது கலைப்பணி அறப்பணி, சமயப்பணி தொடர எல்லாம் வல்ல நல்லைக் கந்தனையும் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாளையும் பிரார்த்தித்து அகமிக மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்!

கொழும்புவாழ் புனிலங்காஸ் தினத்தாள் கலண்டர் ஸ்தாபனத்தாரும், சைவ அபிமானிகளும்.

(11649) (6,7,10)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### மூத்ததம்பி தேவதாசன்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் இன்று சனிக்கிழமை கொழும்பு ஜோன் டீ.சில்வா ஞாபகார்த்த கலையரங்கில் நடைபெறும் 2011 ஆண்டுக்கான நாடகத்துறைக்கான "**கலாபூஷணம் விருது**" பெறும் எமது சபையின் உறுப்பினருமாகிய **மூத்ததம்பி தேவதாசன்** அவர்களை மனந்திறந்து பாராட்டுவதோடு, மேலும் பலவிருதுகளும், பட்டங்களும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்வதற்கு மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்பாள் அருள் புரிய வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
காரைநகர் மணற்காடு கும்பநாயகி
முத்துமாரி அம்பாள்,
12 ஆம் திருவிழா உபயகாரர் சபை.

(11775)(3.6.7)

## மலேசிய EVERSENDAI வியாபார குழுமத்துடன் இணைந்த

# டோஹா கட்டார்

## கிளைக்கு வெற்றிடங்கள் 100


நல்ல வசீகரமான தோற்றமுடைய 19 முதல் 40 வயதிற்குட்பட்ட தமிழ் பேசத்தெரிந்தவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

### கை உதவியாளர்கள் (ஆண்கள்)

சம்பளம்
QR 600 + இலவச சாப்பாடு + OT



நேர்முகப்பரீட்சை இன்று
Green Grass
Hostel & Restaurant
No.33, Aseervantham Lane,
Hospital Road, Jaffna.
மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் நடைபெறும்




கட்டார் ரியால் 1 = ரூபா 31/-

சேவை நிபந்தனைகள்

- ☐ ஒப்பந்தக்காலம் 02 வருடம்.
- ☐ உணவு, தங்குமிடம், மருத்துவம், போக்குவரத்து இலவசம்.
- ☐ நாளொன்றுக்கு 08 மணித்தியால வேலை மற்றும் மேலதிகநேரக் கொடுப்பனவு.
- ☐ ஒப்பந்த நிறைவில் திரும்பி வர விமான டிக்கட் இலவசம்.
- ☐ ஏனையவை கட்டார் தொழில் சட்டத்திற்கேற்ப.

HOTLINE
**072 712 4415 / 072 312 4409**

அறவீடுகள்: வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவகம் அனுமதித்த கட்டணம் மாத்திரமே.

AL/2541/Advt/16/11



## இக்ரா வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

இல: 634 1/1 - 1/2, மருதானை வீதி, மருதானை, கொழும்பு-10. (ஆனந்தா கல்லூரிக்கு முன்னால்)

தொலைபேசி : 0094 115 544 333    தொலை நகல் : 0094 115 544 337

License No. 2541

E-mail : info@ikralk.com

# சீனா கட்டி அன்பளிப்புச் செய்த 'தாமரைத் தடாகம்' திறப்பு



கொழும்பு, டிசெ. 17

நாட்டில் கடந்த 30 ஆண்டுகளாக அரங்கேற்றப்பட்டு வந்த சோக நாடகம் தற்போது முடிவடைந்துள்ளது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

'தாமரைத் தடாகம் மஹிந்த ராஜபக்ஷ கலையரங்கு' திறந்து வைக்கப்பட்ட பின்னர் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''அழுது புலம்பி கவலைப்படும் காலம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. நாட்டின் செழுமையை பிரதிபலிக்கும் நாடகங்களை அரங்கேற்றக் கூடிய சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. நூறு ஆண்டுகள் கலைச் சேவை ஆற்றி வரும் டவர் அரங்கைப் போன்றே தாமரைத் தடாகம் அரங்கும் நாட்டு மக்களுக்கு அரிய கலைச் சேவைகளை ஆற்றும்'' என்று ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மக்களின் பௌதீக வாழ்க்கையைக் கட்டியெழுப்புதல் மற்றும் அனைத்து இனங்களையும் ஒன்றிணைத்தல் போன்ற நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டு வருகிறது என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குத் தேவைப்பட்ட போதெல்லாம் சீனா தம்முடன் கைகோர்த்து நின்றதாகவும் நன்றி பாராட்டினார் ஜனாதிபதி. அத்துடன் நாட்டின் இறைமையையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்கும் சீனா தொடர்ந்து உறுதுணையாக இருந்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த அரங்கை 38 லட்சம் ரூபா செலவில் சீனா அமைத்து அன்பளிப்பாக வழங்கி உள்ளது. நேற்றைய திறப்பு விழாவில், சீனாவின் அரசியல் உயர் அவையைச் சேர்ந்த சங் மெய்யிங் தலைமையிலான குழுவினர் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்டனர். (உ)

# கொழும்பு தெற்கு துறையின் கட்டுமானம் நேற்று ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 17

கொழும்பு தெற்கு துறைமுகத்தின் முதலாவது இறங்குதுறைக்கான கட்டுமானப் பணிகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று ஆரம்பித்து வைத்தார். கொழும்புத் துறைமுக விரிவாக்கத்தின் கீழ் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

கொழும்பு தெற்குத் துறைமுகத்தில் நான்கு கொள்கலன் இறங்கு துறைகள் தலா 1,200 மீற்றர் நீளத்துக்கு அமைக்கப்படுகின்றன. அவற்றில் முதலாவது துறையையே ஜனாதிபதி திறந்து வைத்தார்.

முதலாவது இறங்குதுறையின் 600 மீற்றர் நீளமான இறங்குதுறை 2014ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படும் என்றும் 2016இல் எஞ்சிய பணிகள் பூர்த்தி செய்யப்படும் என்றும் அரசு அறிவித்துள்ளது.

துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சின் பிரதி அமைச்சர் ரோகித அபயகுணவர்த்தன, கொழும்புக்கான சீனத் தூதர் ஜங் ஸகூபிங், துறைமுக அதிகார சபைத் தலைவர் கலாநிதி பிரியத் பண்டு விக்கிரம ஆகியோரும் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். (உ)

### சிறுவர் இல்ல விவகாரத்தில் நீதிகிடைத்ததால்

# அரச நத்தார் நிகழ்வில் திருச்சபை

கொழும்பு, டிசெ.17

மொரட்டுவ ராவத்தாவத்தை சிறுவர் இல்ல விவகாரத்திற்கு நீதி கிடைத்துள்ளதால் அரச நத்தார்தின நிகழ்வுகளைப் பகிஷ்கரிக்கப்போவதில்லை எனக் கத்தோலிக்க திருச்சபை அறிவித்துள்ளது.

அரச நத்தார் தின நிகழ்வுகளில் கொழும்பு மறைமாவட்ட ஆயர் வணக்கத்துக்குரிய கர்த்தினால் மல்கம் ரஞ்சித் உட்பட கத்தோலிக்க திருச்சபையினர் கலந்துகொள்வர் என அருட்தந்தை பெனடிக் ஜோசப் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

ராவத்தாவத்தையில் அமைந்துள்ள பிரேம் சிறுவர் இல்லத்துக்கு எதிராக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அருட்சகோதரி ஒருவர் கைதுசெய்யப்பட்டதைக் கண்டித்தும் நத்தார் பண்டிகையை முன்னிட்டு அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எந்தவொரு நிகழ்விலும் பங்குகொள்ளப்போவதில்லை என கர்த்தினால் மல்கம் ரஞ்சித் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், சிறுவர் இல்ல விவகாரம் தொடர்பில் விசாரணைகளைமுன்னெடுத்தஇரகசியப் பொலிஸார், சிறுவர் இல்லத்தில் குற்றச் செயல்கள் எதுவும் இடம்பெறவில்லை என கொழும்பு நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

இதனையடுத்து, இந்த வழக்கில் கைதுசெய்யப்பட்ட குறித்த அருட்சகோதரியை விடுதலை செய்யுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிவான் இவோன் பெர்னாண்டோ உத்தரவிட்டார்.

சிறுவர் இல்ல விவகாரம் தொடர்பில் நீதி கிடைத்துள்ளதால் அரச நத்தார் நிகழ்வுகளில் கர்த்தினால் மல்கம் ரஞ்சித் உட்பட கத்தோலிக்க திருச்சபையினர் கலந்துகொள்வார்களா என வினவியபோதே கத்தோலிக்க திருச்சபையின் ஊடகத்துறை சார்ந்த விடயங்களைக் கையாளும் அருட்தந்தை பெனடிக் ஜோசப் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# டெங்கு ஒழிப்பு திட்டம் தோல்வி

கொழும்பு, டிசெ.17

கடந்த ஐந்து வருட காலங்களில் ஒரு லட்சத்து 18 ஆயிரத்து 108 பேர் உயிர்கொல்லி டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் 851 பேர் உயிரிழந்துள்ளனர். டெங்கு நோயை முற்றாக ஒழிக்கும் செயற்றிட்டம் முழுமையான வெற்றியை அளிக்கவில்லை.- இவ்வாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது ஜே.வி.பி. உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும்போதே இதனைத் தெரிவித்தார்.

டெங்குநோயை ஒழிப்பதற்காக அமெரிக்கா, கியூபா போன்ற நாடுகளில் இருந்து பக்டீரியாக்களை இறக்குமதி செய்து விசேட வேலைத்திட்டத்தின் கீழ் சகல பிரதேசங்களுக்கும் தெளித்தோம்.

ஆனால், இந்த பக்ரீரியாக்கள் இரண்டு வாரங்களுக்குப் பின்னர் செயலிழந்து விடுகின்றன. இதற்கும் மேலதிகமாக ஜனாதிபதி செயலணித் திட்டத்தில் பல்வேறு அமைச்சுகளும் ஒன்றிணைந்து தூய்மைப்படுத்தும் இயக்கம் துரிதப்படுத்தப்பட்டது. இதன் காரணமாக டெங்குநோய் பரவுதல் ஓரளவு குறைந்துள்ளது.

கடந்த வருடங்களில் டெங்கால் பாதிக்கப்பட்டவர்களினதும் உயிரிழந்தவர்களினதும் விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| 2006 | 11,960 | 46 |
| 2007 | 7,332 | 28 |
| 2008 | 6,607 | 27 |
| 2009 | 35,095 | 346 |
| 2010 | 34, 188 | 241 |

2011நவம்பர் வரை 22, 926 163

டெங்கு ஒழிப்பை தனிப்பட்ட முறையில் பக்டீரியாக்களினால் மட்டும் மட்டுப்படுத்தி விட முடியாது. தமது சுற்றாடலைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். இதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

# இலங்கை மீனவர்கள் 5 பேர் இந்தியக் கடற்படையால் கைது

புதுச்சேரி, டிசெ.17

இந்தியக் கடல் எல்லையில் நுழைந்து மீன் பிடித்த இலங்கை மீனவர்கள் 5 பேரை, கடலோரக் காவல் படையினர் கைது செய்தனர்.

இவர்கள், இந்தியக் கடல் எல்லையில் அத்து மீறி நுழைந்து மீன் பிடித்த போது, இந்தியக் கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள், நேற்று முன்தினம் மாலை 6.15 மணிக்கு, புதுச்சேரிக்குக் கொண்டு வரப்பட்டனர்.

இது குறித்து கடலோரக் காவல் படை அதிகாரி கூறியதாவது:

இலங்கை மீனவர்கள் 5 பேர் ஒரு விசைப்படகில் வேளாங்கண்ணிக்கு அருகே, இந்தியக் கடல் எல்லையில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். கடந்த புதன்கிழமை அந்தப் பகுதியில் ரோந் துப் பணியில் இருந்த இந்தியக் கடலோரக் காவல் படையினர், அவர்களைக் கைது செய்து, படகைப் பறி முதல் செய்தனர். பிடிபட்டுள்ள இலங்கை மீனவர்கள் குறித்து, அந்த நாட்டு அர சுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு, உரிய விசாரணைக்குப் பின்னர் அவர்கள் விடுவிக்கப்படுவர் - என்றார். (உ)

# கொலை மிரட்டல்

கொழும்பு, டிசெ.17

வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டால் உன்னை கொலை செய்துவிடுவோம்.

- இவ்வாறு தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்னவுக்கு தொலைபேசி ஊடாக நேற்றிரவு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தனக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பாக கெமுனு விஜயரட்ன நேற்று மிரியான பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

''நேற்றிரவு(நேற்று முன்தினம்) 9.15 மணியளவில் எனக்கு அநாமதேய தொலைபேசி அழைப்பொன்று வந்தது. தொடர்பை ஏற்படுத்தியவர், வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டால் கொலைசெய்து விடுவோம் என மிரட்டினார்.

''எனக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பாக இன்று (நேற்று) மிரியான பொலிஸ்நிலயத்தில் முறைப்பாடு செய்துள்ளேன். அழைப்பை ஏற்படுத்திய நபர் என்னிடம் பேசிய விடயங்களை நான் ஒலிப்பதிவு (ரெகோட்) செய்துள்ளேன். அதுமட்டுமன்றி, அந்த தொலைபேசியின் இலக்கமும் என்னிடம் உள்ளது -என்றார்.

# ஆணைக்குழு அறிக்கை ஒரு பஞ்ச தந்திரம்; கூட்டமைப்பின் நிலைப்பாடு விரைவில்!

## சபையில் அரியநேத்திரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.17

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பஞ்சதந்திரம்போல் தெரிகிறது. இந்த அறிக்கை தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் தனது உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை அறிவிக்கும் - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர் பா.அரியநேத்திரன் நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

வரவு-செலவுத்திட்டத்தின் சுற்றாடல்துறை மற்றும் கமநல சேவைகள் அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிப்பளை, வவுணதீவு மற்றும் வெல்லாவெளி போன்ற இடங்களில் யானைகளின் அட்டகாசங்கள் அதிகரித்துள்ளன. வெல்லாவெளி பகுதியில் மாத்திரம் 26 மரண சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

அங்குள்ள ஓரிடத்தில் மேய்ச்சல் நிலத்தை பெரும்பான்மை இனத்தவர்கள் கைப்பற்றியுள்ளனர். இதனால், அவர்களுக்கும், நிலச்சொந்தக்காரர்களுக்குமிடையில் ஏற்பட்ட சண்டை காரணமாக ஒரு தமிழ் இளைஞர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அங்குள்ள 16 எருமை மாடுகள் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் திரும்பியுள்ளன. மேய்ச்சல் நிலங்களை அத்துமீறிப் பிடிப்பதாலேயே இந்தப் பிரச்சினை ஏற்படுகின்றது. இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சம்பூரில் அமையப்போகும் அனல்மின் நிலையம் சுற்றாடலுக்கு ஆபத்தாக அமையும். ஆகவே, சுற்றாடல்துறை அமைச்சு இதில் தலையிட்டு இத்திட்டத்தை தடுத்துநிறுத்தவேண்டும் அல்லது வேறு இடத்திற்கு மாற்றவேண்டும்.

மன்னார் கடற்கரையை அண்டிய பகுதிகளில் உல்லாசத் துறையைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதனால், அங்கு சுற்றுச்சூழல் மாசுபடும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

யுத்தம் முடிந்த பின்பும் வடக்கு, கிழக்கில் கலாசாரச் சீரழிவு ஏற்பட்டுள்ளது. இதன் பின்னணியில் உள்ளவர்களை அரசு கண்டுபிடிக்கவேண்டும். இல்லையேல்,அதற்கானபொறுப்பை அரசே ஏற்கவேண்டும்.

உர விநியோகத்தை எடுத்துக் கொண்டால், மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாய காலத்தில் விநியோகம் இடம்பெறுவதில்லை. விவசாய காலத்தில் உரத்தை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இந்தச் சபையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை சமர்ப்பித்துள்ளார். இதை மேலோட்டமாகப் பார்க்கும்போது பஞ்சதந்திரமாகவே தெரிகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுதொடர்பாக தனது உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை விரைவில் வெளியிடும் - என்றார்.

# யங்றைஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி



யாழ்ப்பாணம்,17

திருகோணமலை உதைபந்தாட்ட லீக்கால் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுகிழமை திருகோணமலை பொது விளையாட்டு மைதா னத்தில் இடம் பெற்றது.

இதில் யங்றைஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

யங்றைஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

இரண்டு அணியினரும் தத்தமது அணியே வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணத்தோடு களம் இறங்கியதால் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. இரண்டு அணியினரும் தத்தமது அணிக்கான கோல்களைப் பெறும் நோக்கோடு எதிர் அணியினரும் கோல் பரப்பை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர்.

ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோல்களை பெற்றதால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இதனால் ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 3 சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது.

இதில் யங்றைஸ் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழக அணியை வெற்றி கொண்டது. (ம-23)

# வெற்றியீட்டிய கழகங்கள்



யாழ்ப்பாணம், டிசெ.17

யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட 11 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் செவ்வாய், புதன் கிழமையில் மாலை 6 மணியளவில் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளை யாட்டுக்கழக மைதானத்தில் மின் ஒளியில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றியீட்டிய விளையாட்டுக் கழகங்களின் விவரங்கள் வருமாறு:

செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில், அம்மன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் இரண்டு அணியினரும் ஆட்டம் தொடங்கியது முதல் முடியும்வரை கோல் ஏதும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

புதன்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் ஈகிள் விளையாட் டுக் கழக அணியை எதிர்த்து சன்சையின் விளையாட்டுக்கழகஅணி மோதிக் கொண்டது. இதில் ஈகிள் விளையாட்டுக்கழக அணி 6.0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. (ம-23)

## உலக சூப்பர் சீரிஸ் பட்மின்டன் முதல் போட்டியில் சா ய்னா வெற்றி

சீனாவில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகிய ஆண்டின் இறுதி பட்மின்டன் தொடரான உலக சூப்பர் சீரிஸ் பட்மின்டன் போட்டியின் தொடக்க ஆட்டத்தில் இந்திய வீராங்கனையான சாய்னா நேவால் வெற்றி பெற்றார்.

சாய்னா தனது தொடக்க ஆட்டத்தில், கொரியாவின் பேசூன் ஜுவை 21-14, 17-21, 21-14 என்ற நேர் செற் கணக்கில் போராடித் தோற்கடித்தார்.

# இரண்டாம் சுற்றுக்கு வடமாகாண அணி தெரிவு

வலி. வடக்கு, டிசெ 17

இலங்கை தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் மாவட்ட அணிகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் இரண்டாம் சுற்றில் விளையாட வட மாகாண அணி தெரிவு செய்யப்பட்டது.

இலங்கை தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தால் தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தின் வட மாகாண அணியும் ஊவா மாகாண அணியும் மோதிக்கொண்டன.

ஐந்து சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் மூன்று நேர் சுற்றுக்களை வட மாகாண அணி முறையே 25:12, 25:13, 25:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஊவா மாகாண அணியை வெற்றி பெற்று இரண்டாம் சுற்றில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

(ம-86)

## பெற்றோரை இழந்த குழந்தைகளைச் சந்தித்த உதைபந்தாட்ட வீரர்கள்

கழகங்களுக்கிடையிலான உலகக் கிண்ண போட்டியில் பங்கேற்கவென ஜப்பான் சென்றுள்ள பார்சிலோனா வீரர்கள், ஆழிப்பேரலையால் பெற்றோர்களை இழந்த புகுஷிமா குழந்தைகளைச் சந்தித்து உரையாடினர். ஆர்ஜென்ரீனா வீரர் லயனல் மேசி, சேவி, இனியஸ்டா, பிக்கு, பெப்ரிகாஸ் ஆகியோர் குழந்தைகளுக்குக் கைகொடுத்து உற்சாகமாக உரையாடினர்.

# இன்றைய ஆட்டங்கள்

வலி வடக்கு, டிசெ 17

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் வலிகாம பிரதேச செயலகங்களுக்க இடையே நடத்தும் நட்புறவுக்கான வெற் றிக் கிண்ணத்துக்கான 15 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* உடுவில் பிரதேச செயலக அணி எதிர் நல்லூர் பிரதேச செயலக அணி
* தெல்லிப்பழை பிரதேச செயலக அணி எதிர் கோப்பாய் பிரதேச செயலக அணி.

இரண்டாம் சுற்றில் இருந்து யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணிகள் மோதவுள்ளன. (ம-86)

## கயிறு இழுத்தல் சங்கம் நடத்தும் பயிற்சி முகாம்

திருகோணமலை,டிசெ.17

திருகோணமலை கயிறு இழுத்தல் சங்கம் நடத்தும் 2 நாள் பயிற்சி முகாம் எதிர்வரும் 19, 20 ஆம் திகதிகளில் திருகோணமலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கை கயிறு இழுத்தல் சம்மேளனத்தின் தேசிய பயிற்றுனரும், தேசிய தொழில் நுட்ப உத்தியோகத்தர்களும் பயிற்சிகளை வழங்கவுள்ளனர்.

இரண்டு நாள் பயிற்சி முகாமில் பங்கு கொள்பவர் களுக்கு சான்றிதழ் வழங்கப் படும் என திருகோணமலை கயிறு இழுத்தல் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ம-23)



முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்காக முல்லைத்தீவு அரச திணைக்களங்களுக்கு இடையே இடம்பெற்ற பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் வெற்றிபெற்ற முல்லைத்தீவு மாவட்ட செயலக அணியினர் விருந்தினர்களுடன். (23)

## ஒத்திவைக்கப்பட்ட மத்தியஸ்தர் பரீட்சை

யாழ்ப்பாணம், டிசெ.17

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தால் இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடத்தவிருந்த உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை காலநிலை சீரின்மையால் ஜனவரி மாதத்துக்கு பிற்போடப்பட்டுள்ளது.

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் கிளிபேட் அன்ரனிப்பிள்ளை இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

ஜனவரி மாதத்தில் பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறியத் தரப்படும் எனவும் பரீட்சை பிற்போடப்பட்டுள் ளதால் பரீட்சைக்கான ஆயத்த வகுப்புக்கள் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் முற்பகல்10 மணிக்கு சென். சாள்ஸ் வித்தியாலயத்தில் இடம்பெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-23)

## கொச்சி அணியின் வீரர்களுக்கான ஏலம் பெப்ரவரி 4ஆம் திகதி

ஐ.பி.எல். கிரிக்கெட்டிலிருந்து கொச்சி டஸ்கர்ஸ் அணி நீக்கப்பட்டமையால் அந்த அணி வீரர்களுக்கான ஏலம் அடுத்த ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி நடைபெறும் என ஐ.பி.எல். ஆட்சிமன்றக் குழு நேற்றுமுன்தினம் உத்தி யோகபூர்வமாக அறிவித்துள் ளது.

ஆனால், ஏலம் நடைபெறும் இடம் குறித்து இன்னும் தெரிவிக்கப்படவில்லை.

## டேவிட் வில்லா 6 மாதங்களுக்கு களமாடார்

கழகங்களுக்கிடையிலான உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் அல்சாத் அணிக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடந்த அரையிறுதியாட்டத்தின் போது, பார்சிலோனா முன்கள வீரரான டேவிட் வில்லாவின் காலில் காயம் ஏற்பட்டது. இதனையடுத்து, அவரால் 6 மாதங்களுக்கு விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. டேவிட் வில்லாவால் விளையாட முடியாமல் போவது பார்சிலோனா மற்றும் ஸ்பெயின் அணிகளுக்குப் பெரும் பின்னடைவாகக் கருதப்படுகிறது.

'யூரோ-2012' உதைபந்தாட்டப் போட்டிக்கு முன்னதாக டேவிட் வில்லா தயாராவாரா என்பதும் கேள்விக்குறியே.

## சூதாட்டத்தைத் 'தடுக்க' அக்ரமுக்கு நேரமில்லை

சூதாட்டத்தைத் தடுக்கும் குழுவில் இடம்பெற அக்ரம் மறுப்புத்தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் போட்டிகளில் சூதாட்டத்தைத் தடுக்கும் வகையில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை சிறப்புக் குழுவொன்றை உருவாக்கியுள்ளது.

இந்தக் குழுவில் இடம்பெறுமாறு, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை சார்பாக முன்னாள் அணித் தலைவர் அக்ரமுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

ஆனால், தமக்குச் சொந்த வேலைகள் இருக்கின்றன எனக்கூறி, கிரிக்கெட் சபை விடுத்த அழைப்பை அக்ரம் நிராகரித்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# அசத்தும் ஆபிரிக்கா

முதலாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி டீ வில்லியர்ஸின் சிறப்பான துடுப்பாட்டத்தின் உதவியுடன், 9 இலக்குகளை இழந்து 389 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதன் மூலம் இலங்கை அணியை விட 209 ஓட்டங்களால் முன்னிலையில் உள்ளது.

'விக்கெட்டுக்கு போடத் தெரியாட்டியும் இப்படியாவது நம்மாக்கள் சாச்சிட்டாங்க. கவனம் கலிஸ்...'




தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்கின்றது. முதலாவது டெஸ்ட் ஆட்டம் செஞ்சூரியனில் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி பிளென்டர், ஸ்ரெயின் வேகத்தில் 180 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்தது. இலங்கை அணி சார்பில் அதிகபட்சமாக மத்தியூஸ் 38, சமரவீர 36, பரணவிதாரன 32, மஹேல 30 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் பிளென்டர் 5, ஸ்ரெய்ன் 4 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடத் தொடங்கிய தென்னாபிரிக் அணி நேற்று முன்தினம் ஆட்டநேர முடிவில் ஒரு இலக்கு நஷ்டத்துக்கு 90 ஓட்டங்களைப் பெற்றது. களத்தில் றுட்லோப் 27, ஸ்ரெயின் ஓட்டமெதனையும் பெறாத நிலையில் இருந்தனர்.

நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் ஆரம்பமானதும் 'நைற் வோர்ச்சமனாக' களமிறங்கிய ஸ்ரெய்ன் ஓட்டமெதனையும் பெறாத நிலையில் 'ரன் அவுட்டாகி' வெளியேறினார். தொடர்ந்து அம்லா 18, றுட்லோப் 44 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க ஆபரிக்க அணி 136 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்தது. இதன் பின்பு இணைந்த கலிஸ் - டீ வில்லியர்ஸ் ஜோடி சிறப்பாகத் துடுப்பெடுத்தாடியது. இவர்களின் இணைப்பின் மூலம் ஆபரிக்கா 150 ஓட்டங்களைத் தாண்டியது. ஐந்தாவது இலக்குக்காக 37 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் கலிஸ் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து இணைந்த வில்லியர்ஸ் - பிறின்ஸ் ஜோடி இலங்கைப் பந்து வீச்சாளர்களுக்கு எமனாக மாறியது.



கைக்கெட்டியும் வாய்க்கெட்டலையே .(இணைப்பாட்ட சதம்) பிறின்ஸ் - டீ வில்லியர்ஸ்

சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்துச் சென்றது. இலங்கை அணியின் வியூகங்களை உடைத்தெறிந்து அணியை கௌரவமான இலக்கை நோக்கி அழைத்துச் சென்றது. சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய வில்லியர்ஸ் 26 ஆவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். ஆறாவது இலக்குக்காக 97 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் பிறின்ஸ் 39 ஓட்டங்களுடன் மத்தியூஸின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். இலக்குக் காப்பாளர் பௌச்சர் நுழைய சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த டீ வில்லியல்ஸ் ஓர் ஓட்டத்தினால் தனது 13 ஆவது சர்வதேச சதத்தை தவற விட்டார்.

பின்னர் நுழைந்த பளென்டர் 4, மோர்கல் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 350 ஓட்டங்களுக்கு 9 இலக்குகளை இழந்தது. இருப்பினும் மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய பௌச்சர் 49 ஓட்டங்களைக் குவித்தார். பதினொராவது வீரராகக் களம்புகுந்த இம்ரான் தகீரும் விளாச நேற்றைய ஆட்ட நேர முடிவில் தென்னாபிரிக்கா 9 இலக்குகளை இழந்து 389 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் பௌச்சர் 49, தகீர் 24 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர். பந்து வீச்சில் திஸ்ஸர பெரேரா 3, வெலகெதர 2 இலக்குகளை கைப்பற்றினர். இன்று மூன்றாவது நாள் ஆட்டமாகும். (15)



நாங்களும் சொல்லியடிப்போமில்ல. திஸ்ஸர பெரேரா.

# இலங்கை கிரிக்கெட்டை ஆட்டிப்படைக்கும் அரசியல்

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தை பொறுப்பேற்ற சில 'முதலாளிகள்' அதை நாட்டின் ஊழல் மிகுந்த நிறுவனங்களில் ஒன்றாக மாற்றிவிட்டனர் என்று இலங்கை அணியின் முன்னாள் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அர்ஜுன ரணதுங்க நாடாளுமன்றில் நேற்று முன்தினம் கூறினார்.

விளையாட்டுத்துறை அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே

அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிரிக்கெட்டானது முன்னெப்போதும் இல்லாதளவு அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அதன் வீழ்ச்சிக்கு இதுவே காரணம் எனவும் அர்ஜுன ரணதுங்க கூறினார். 1996 ஆம் ஆண்டு இலங்கை அணி உலக சம்பியனாகுவதற்கு வழிவகுத்த இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் (அப்போதைய இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை) முன்னாள் தலைவர்கள் காமினி திசாநாயக்க மற்றும் 'டிரோன் பெர்னாண்டோ ஆகியோரின் கடின உழைப்பை அர்ஜுன ரணதுங்க நினைவுகூர்ந்தார்.

அண்மையில் இலங்கை கிரிக்கெட்டின் நிர்வாகத்தை நடத்திய இடைக்கால நிர்வாகக் குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்ட மோசடியினால் இலங்கை கிரிக்கெட்டிற்கு 76 லட்சம் அமெரிக்க டொலர் இழப்பு ஏற்பட்டது எனவும் அவர் தெரிவித்தார். திட்டமிட்டபடி இலங்கையில் நடைபெறாத 'ரி-20' சுற்றுப் போட்டியொன்று தொடர்பாக மேலும் 42 லட்சம் டொலர் மோசடி இடம்பெற்றதாகவும் அவர் கூறினார். புதிய கிரிக்கெட் அரங்கிற்கான மிகையான செலவுகாரணமாக இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் கடன்சுமை 90 பில்லியன் டொலராக அதிகரித்தது எனவும் அவர் தெரிவித்தார்.

உலகக்கிண்ணப் போட்டியை நடத்துவதற்கு புதிய அரங்குகளை நிர்மாணிக்குமாறு ஐ.சி.சி. ஒருபோதும் இலங்கையை கோரவில்லை எனவும் அர்ஜுன கூறினார். வெளிநாடுகளைச் சேர்ந்த கிரிக்கெட் பயிற்றுநர்களுக்கு வரிச் சலுகை வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர், உள்ளூர் பயிற்றுநர்களுக்கு வரிச்சலுகை வழங்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

இலங்கையில் நடைபெறும் போட்டி அனைத்தையும் ஒளிபரப்புவதற்கான உரிமை தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளதெனவும் இத்தகைய ஏகபோக நிலை ஏற்படுத்தப்படக்கூடாது - என்று தெரிவித்தார். (15)

# ஆசியக் கிண்ணத் தொடர்

2012 ஆம் ஆண்டு ஆசியக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டி திட்டமிட்டபடி மார்ச் 12 முதல் 22 ஆம் திகதிவரை பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசிய கிரிக்கெட் கவுன்ஸில் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் அடுத்த வருடம் இந்தியாவுக்கான, பாகிஸ்தான் அணியின் சுற்றுலாவை எதிர்கால கிரிக்கெட் அட்டவணையில் சேர்ப்பதற்கு வாய்ப்பில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் பிரதம செயற்பாட்டு அலுவலர் சுபான் அஹமட் இது தொடர்பாக கூறுகையில், பாகிஸ்தானும் இந்தியாவும் குறிப்பட்ட காலப்பகுதியில் தமது சுற்றுப்போட்டியை நடத்த சம்மதித்தால் ஆசிய கிண்ணப் போட்டித் தொடர்களை ஒத்திவைப்பதற்கு முன்னர் இணக்கம் காணப்பட்டிருந்தது. ஆனால், பல காரணங்களால் அந்த யோசனை கைவிடப்பட்டுள்ளது - என்றார்.

இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரு தரப்பு போட்டிகளை மீள ஆரம்பிப்பதற்கான உறுதிமொழியை இந்த மாநாட்டின்போது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளும் நம்பக்கையுடன் பாகிஸ்தான் கிரிக்கெட்சபை இதில் பங்குபற்றியது.

ஆனால், இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் என். ஸ்ரீனிவாசன் இந்த மாநாட்டில் பங்குபற்றாத நிலையில் இது தொடர்பான உறுதிமொழி எதையும் செயலாளர் ரட்னாகர் ரெட்டியினால் வழங்க முடியவில்லை எனவும் சுபான் அஹ்மட் கூறினார்.

அடுத்த வருடம் இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் முழுமையான சுற்றுப்போட்டிகள் நடைபெற மாட்டா என்று நான் எண்ணுகிறேன். ஆனால் ஆசியக் கிண்ணப் போட்டிகளில் அவ்வணிகள் மோதும் என்று அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ஸகா அஷ்ரப், இந்திய கிரிக்கெட் சபைத் தலைவரை சந்திப்பதற்காக டிசெம்பர் முதல் வாரத்தில் சென்னைக்கு செல்லவிருந்தார். எனினும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் காப்பாளரான ஆசிவ் அலி ஸர்தாரி திடீர் சுகவீனமுற்றதால் இந்த விஜயம் ஒத்திவைக்கப்பட்டது. (15)



# சாய்னா நேவல் அசத்தல்

உலக சூப்பர் தொடர் பட்மின்ரன் இறுதி சுற்று ஆட்டம் சீனாவின் லிசோவ் நகரில் நடந்து வருகிறது.

இதில் தரவரிசையில் முதல் 8 இடம் வகிக்கும் வீரர், வீராங்கனைகள் மட்டுமே பங்கேற்க முடியும். இந்தியா சார்பில் உலகின் 4 ஆம் நிலை வீராங்கனையான சாய்னா நேவால் கலந்து கொண்டுள்ளார்.

வீராங்கனைகள் 'ஏ, பி' என்று இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு வீராங்கனையும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற வீராங்கனையுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் வீராங்கனைகள் அரையிறுதிக்கு முன்னேறுவார்கள்.

இதில் 'பி' பிரிவில் இடம் வகிக்கும் சாய்னா நேவால், தனது தொடக்க ஆட்டத்தில் கொரியாவின் பே யூனை வென்றார். இந்த நிலையில் 2 ஆவது லீக்கில் ஜப்பானின் சாடா சயாகாவுடன் நேற்று முன்தினம் மோதினார். இதில் தொடக்கம் முதலே அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய சாய்னா, எதிராளியை நிமிர விடாமல் பந்தாடினார்.

36 நிமிடங்கள் நடந்த ஆட்டத்தின் முடிவில் சாய்னா 21-6, 21-13 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றார். இதே போல் இந்தப் பிரிவில் 2 ஆவது வெற்றியை பெற்ற 3 ஆம் நிலை வீராங்கனை சீனாவின் ஸின் வாங்கும் அரையிறுதியை எட்டினார்.

அரையிறுதிக்கு முன்பாக சாய்னா, தனது கடைசி லீக்கில் ஸின் வாங்கை எதிர்கொள்கிறார். 'பி' பிரிவில் முதலிடம் பெறுவது யார் என்பதை இந்த ஆட்டம் நிர்ணயிக்கும். ஸின் வாங்குக்கு எதிராக சாய்னா இதுவரை மோதி உள்ள 5 ஆட்டங்களில் ஒன்றில் மட்டுமே வெற்றி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (15)

உதயன்
17 டிசெம்பர் 2011 சனிக்கிழமை

# மரண அறிவித்தல்கள்

## பொன்னர் இராசரெத்தினம்

(சவாரித் தம்பர்)



நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 6ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னர் இராசரெத்தினம் 14.12.2011 புதன்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னர்- நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாராணபிள்ளை- தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், வரதலட்சுமியின் ஆருயிர் கணவரும், பொன்னம்பலம் (பிரான்ஸ்), கேதீஸ்வரி (பிரான்ஸ்), சிவானந்தன் (பிரான்ஸ்), ஜெகதீஸ்வரி (முன் பள்ளி ஆசிரியை), காலஞ்சென்ற சிவகடாச்சம், கடம்பன், வாகீஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஆனந்த நாயகி(பிரான்ஸ்), கமலக்கண்ணன்(பிரான்ஸ்), சுகந்தினி (பிரான்ஸ்), செந்தில்குமரன், மயூரன் ஆகியோரின் அன்பு மாமனும், ஆருசன், அட்சயன், சங்கவி, ரிஷிகேசன், காலஞ்சென்ற சிவாதினி, தர்ஷிகன், சாயிசன் ஆகயோரின் ஆசைப் பேரனும், காலஞ்சென்றவர்களான தங்கமுத்து, சுப்பிரமணியம், மார்க்கண்டு, வீரவாகு, சின்னத்தம்பி, சோமசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, சின்னத்துரை, செல்லம்மா, பூமணி, சரஸ்வதி, கமலாட்சி, குணசிங்கம், பரராஜசிங்கம் மற்றும் பராசக்தி, நாகலட்சுமி, கனகரத்தினம், நாகலட்சுமி (லண்டன்), சரசலெட்சுமி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, பரமேஸ்வரி, சந்தானலட்சுமி, காலஞ்சென்ற நடராசா, கோபாலன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு சகலனும், V.K.T தம்பிமுத்து சொர்ணம்மாவின் உடன் பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.12.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் சல்லிப்பரவை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6ஆம் வட்டாரம், நயினாதீவு.

தகவல்:
குடும்பத்தினர்.

## சீனியர் கிருஷ்ணபிள்ளை (சேனாதி)



தெல்லிப்பழை கிழக்கு, குருநாதர் சுவாமி கோயிலடியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற தெல்லிப்பழை ப.நோ.கூ.ச. ஊழியர் சீனியர் கிருஷ்ணப்பிள்ளை (சேனாதி) 15.12.2011 வியாழன் இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா, திருமதி சரஸ்வதி, முருகையா, திருமதி நாகம்மா, சின்னத்துரை ஆகியோரின் சகோதரரும், திருமதி மலர்விழி சிறீசபேசன் (U.K), திருமதி மதிவேணி தயாபரன் (பிரதேச செயலகம், உடுவில்), திருமதி மலர்ச்செல்வி வில்வராஜன்(பிரான்ஸ்), மணிசேகரன்(U.K), மணிவண்ணன்(U.K) ஆகியோரின் அன்புத் தந்தையும், நா.சிறீசபேசன்(U.K), அ.தயாபரன் (ஆசிரியர், யூனியன் கல்லூரி), வில்வராஜன்(பிரான்ஸ்), திருமதி துர்க்கா மணிசேகரன் (U.K) ஆகியோரின் மாமனும், பொன்னி, பரிதி, தனுஷிகன், யாழ்மொழி, ருக்ஷி, சேயோன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2011) சனிக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு சுன்னாகம் கே.கே.எஸ் வீதி, ஜெற்மோட்டோர்ஸ் முன்பாக உள்ள அவரது தற்போதைய இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து தகனக்கிரியைகள் சுன்னாகம் கொத்தியால் இந்து மாயனத்தில் இடம்பெறும்.

கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்.

பிள்ளைகள்.



## கந்தர் வல்லிபுரம்

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும், 572/1, கே.கே.எஸ் வீதி, (கலட்டி அம்மன் வீதி) வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் வல்லிபுரம் கடந்த 14.12.2011 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர்-மாணிக்கம் தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான செல்லையா- மங்கலம் தம்பதியரின் மருமகனும், பூமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, அருணாச்சலம், குஞ்சுப்பிள்ளை, கிட்டுனர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசமணி, காலஞ்சென்ற நடராசா ஆகியோரின் மைத்துனரும், ஜெயக்குமார் (ஜேர்மனி), சிவகுமார், உதயகுமார் (ஜேர்மனி), சந்திரகுமார் (சுவிஸ்), காலஞ்சென்ற செல்வகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சியாமளாதேவி, தமிழ்ச்செல்வி, பிறேமினி, தர்சினி ஆகியோரின் அன்பு மாமனும், ஆறுக்சி, ஆதிக்சா, நிவேதிகா, மயூரன், நிருத்திகா, மகினன், அனுஜன், அனோஜன்,கம்சினி, கார்த்திக் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.12.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

572/1, கே.கே.எஸ் வீதி,
(கலட்டி அம்மன் வீதி),
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்,
சிவா (மகன்).

# உப்பள ஊழியர்கள் 61 பேருக்கு பணிக்கொடை

யாழ்ப்பாணம்,டிசெ.17

ஆனையிறவு உப்பளத்தில் பணியாற்றியவர்களில் 61 பேருக்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ்ப்பாண தொழில் திணைக்களத்தில் வைத்து முற்பகல் 10 மணிக்கு பணிக்கொடை வழங்கப்படவுள்ளதால், பயனாளிகள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை குகானந்தன்



மறவன்புலவு கிழக்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை குகானந்தன் நேற்று(16.12.2011) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-கமலாம்பிகை தம்பதியரின் அருமைப் புதல்வனும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம்- வள்ளி நாயகி தம்பதியரின் பாசமிகு மருமகனும் ரஞ்சினியின் அன்புக்கணவரும், ஜெயப்பிரியா(கிராம அலுவலர், ஜே/288 கைதடி வடக்கு), விதுசலா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி O/L மாணவி) ஆகியோரின் அருமைத் தந்தையும் அரவிந்தனின் (அகிலன் அரைக்கும் ஆலை, கைதடி கிழக்கு) அன்பு மாமனும், அகிலன், அபிநயா, ஆகியோரின் பாசமிகு பேரனும் அமுதலிங்கம், சிவானந்தன், சகநாயகி, காலஞ்சென்ற கிருபா தேவி ஆகியோரின் அருமைச் சகோதரனும் மோகநாதன், ரகுநாதன், ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.12.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணிக்கு மறவன்புலவு, தனிப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மறவன்புலவு கிழக்கு.

தகவல்:
எஸ். அரவிந்தன்
(மருமகன்)


# அலுவலக உதவியாளர் தேவை

கிளிநொச்சியிலியங்கும்
பிரபல John deere மோட்டார்
கம்பனிக்கு கணினி அனுபவமுள்ள
அலுவலக உத்தியோகத்தர் தேவை.
பெண்கள் விரும்பத்தக்கது.
ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக்
கோவையுடன் திங்கட்கிழமை
(19.12.02011) மாலை 3.00
மணிக்கு கீழ்க்காணும் முகவரிக்கு
சமுகம் தரவும்.

தொடர்புகளுக்கு : 0777917813

SAJE MOTORS
121,KANDY ROAD,KILINOCHCHI.

## கணினிதிருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித்தருகிறோம்.

அழையுங்கள்: 0779086737

## கடை வாடகைக்கு

ஆஸ்பத்திரி வீதியில் அரச பெரிய வைத்தியசாலை பிரதான வாயிலுக்கு முன்பாகவுள்ள இரு மாடிக் கட்டடத்தில் 16 அடி அகலமும், 75 அடி நீளமுமான 2 ஆம் மாடிக் கட்டடம் வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0776042264


# மரண அறிவித்தல்கள்

## திருமதி தருமலிங்கம் பாக்கியம்



காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகவும், பழம் வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தருமலிங்கம் பாக்கியம் நேற்று (16.12.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தருமலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான குருநாதர்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், குமாரசாமி-செல்லம்மாவின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நவறஞ்சனி மற்றும் குலறஞ்சனி (அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்), துஷ்யந்தன் (அஞ்சல் அதிபர், அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயும், அ.சாந்தகுமார் (அதிபர், யா/காரைநகர் பாலாவோடை இ.த.க.பாடசாலை), து.மதிகலா ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான கோபாலபிள்ளை, சிவபாக்கியம் மற்றும் பேரம்பலம் ஆகியோரின் சகோதரியும், கணாட்ஷயன், லக்ஷாயினி, கஜானந், தாட்ஷாயினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.12.2011) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

66/3, பழம் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.



## கனகரட்ணம் குகதாசன்

யாழ். திருநெல்வேலி, கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும் றொரன்ரோ, கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரட்ணம் குகதாசன் கடந்த 14.12.2011 புதன் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் கனகரட்ணம்-ஞானேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், உஷாவின் அன்புக் கணவரும் றொசானா, திவானாவின் அன்புத்தந்தையும், நாகராசா, மகேஸ்வரி (யாழ்.கொக்குவில்) ஆகியோரின் பெறாமகனும் மற்றும் கனடாவைச் சேர்ந்தவர்களான கமலதாசன், நகுலராஜா, றஜித்குமார், றமேஸ், றூபன், தினேஸ், மாலா, லதா, நந்தினி, நகுலராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.12.2011) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


வளாக வீதி, கொக்குவில்
கிழக்கு,
திருநெல்வேலி.

தகவல்:
நாகராசா (சித்தப்பா)

## கந்தசாமி உருத்திராபதி

(இளைப்பாறிய நீர்ப்பாசன பொறியியலாளர்)

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி உருத்திராபதி 15.12. 2011 வியாழக்கிழமை காலமானார்.



அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி- தங்கம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி- நவரத்தினம் தம்பதியரின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான தருமரெத்தினம்- இராசரெத்தினம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற பூரணரெத்தினத்தின் அன்புக் கணவரும், குகலட்சுமி, ரூபலட்சுமி, சேகர் ,காலஞ்சென்ற சுதாகர், காலஞ்சென்ற ஸ்ரீதர், காலஞ்சென்ற உதயலட்சுமி, யசோதர், கஜலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஸ்ணகுமார், பாலேந்திரன், ஜெயதரன், குமுதினி, அனிற்றா ஆகியோரின் மாமனாரும், மீரா, மயூரன், சுதாகரன், துவாரகா, ஸ்ரீதர்சன், மகிஷா, அபிதரன், ஆரபி, பைரவி, எழிலன் ஆகியோரின் அன்புப் பேரனும், ஆஷினியின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்ற மகாலட்சுமி, காலஞ்சென்ற சோமசேகரம், பொன்னம்பலம், பாக்கியலட்சுமி, தனலட்சுமி, காலஞ்சென்ற இராசலட்சுமி, ராதாகிருஸ்ணன், ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12. 2011) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. ஒரு மணிக்கு பூதவுடல் வல்வெட்டித்துறை ஊறணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சில்லாலை,வேம்படி,
வல்வெட்டித்துறை. (C/6932)(6-7-8)

தகவல்:
பிள்ளைகள்

## இராணுவம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்புக்கொண்டுள்ளது. எனினும் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய இழப்புக்களைத் தவிர்ப்பதற்கான கொள்கையை வகுத்து அதன்படி அரசும் அரச படையினரும் செயற்பட்டனர் என்று அறிக்கை கூறுகின்றது.

''பொதுமக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் விடயத்தில் அதி உன்னத நிலையில் முன்னுரிமை அளிக்கப்பட்டது. இதற்காக போர் முடிவடையும் கடைசிக் கட்டத்தில் இராணுவத்தினர் வேண்டுமென்றே படை நடவடிக்கைகளை மெதுவாக மேற்கொண்டுள்ளனர் என்பதை ஆணைக்குழுவால் அவதானிக்க முடிந்துள்ளது. இதன் மூலம் பொதுமக்கள் காயமடைவதையோ உயிரிழப்பதையோ தடுப்பதற்கான உத்திகளைப் படையினர் மிகக் கவனமாகக் கையாண்டமை அல்லது பொதுமக்களின் உயிரிழப்புகளையும் காயமடைவதையும் ஆகக் குறைந்த மட்டத்தில் வைத்திருப்பதில் அவதானமாக இருந்தமையைப் புரிந்துகொள்ள முடிகிறது'' என்று அறிக்கை கூறுகின்றது.

### பாதுகாப்பு வலயங்கள் மீதான தாக்குதல்

பாதுகாப்பு வலயங்களில் பொதுமக்களுக்கு உயிர் இழப்புக்களும் காயங்களும் ஏற்பட்டிருந்தாலும் படையினர் பொதுமக்களை இலக்கு வைத்துச் செயற்படவே இல்லை என்று ஆணைக்குழு திட்டவட்டமாகத் தீர்மானித்துள்ளது. அத்தகைய பாதுகாப்பு வலயங்களில் இருந்து இராணுவப் பகுதிகளுக்குத் தப்பிச் செல்ல முயன்ற பொதுமக்களை புலிகள்தான் சுட்டுக்கொன்றார்கள் என்றும் அறிக்கை கூறுகின்றது. அதேசமயம், புலிகளின் நிலைகளைத் தாக்கி அழிக்கும் நோக்கத்துடன் செயற்பட்ட இராணுவத்தினருக்குப் பொதுமக்களைக் கொல்லும் நோக்கம் எதுவும் இருக்கவில்லை என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''ஆணைக்குழு, ஆயுதப் படையினர் வேண்டுமென்றே பொதுமக்களை இலக்கு வைத்துத் தாக்கவில்லை என்பதையும் புலிகளின் தாக்குதலுக்கு எதிராகப் பாதுகாப்பு வலயங்கள் மீது படையினர் எதிர்த் தாக்குதலை மேற்கொண்டமை, மட்டுப்படுத்தப்பட்ட இராணுவத் தாக்குதல் என்ற கொள்கைக்குச் சற்றுக் கூடுதலாகக் கையாளப்பட்டதா என்பதையும் அவதானித்தது. இது குறித்து ஆணைக்குழுவின் முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் மிகவும் கவனமாக, சகல அம்சங்களையும் அவதானித்துப் பார்த்த பின்னர் ஆயுதப் படையினர் என்றுமே நடக்காத ஒரு சூழ்நிலையை எதிர்நோக்க வேண்டியிருந்ததனால் சகலவிதமான பாதுகாப்புச் செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கு வேறு எந்தவொரு வாய்ப்பும் அவர்களுக்கு அன்றைய சூழ்நிலையில் இருக்கவில்லை என்றே குழு கருதுகின்றது'' என்று கூறும் அறிக்கை அங்கு நடந்தது என்ன என்பதை உண்மையில் அறிய நீதிமன்ற விசாரணை நடத்த வேண்டும் என்றும் கூறியிருக்கிறது.

### படையினரின் குற்றம்

பொதுமக்கள் உயிரிழந்தமை மற்றும் காயமடைந்தமைக்கு இராணுவத்தினர் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்திருக்கும் அறிக்கை, ''சில சந்தர்ப்பங்களில் பாதுகாப்புப் படையினர் வேண்டும் என்றே இந்த நிகழ்வுகளுக்குப் பொறுப்பாக இல்லாமலும் இருந்திருக்கலாம். அவர்கள் பொதுமக்களுக்குத் தீங்கிழைக்கும் எண்ணத்துடன் இவ்விதம் நடந்து கொள்ளாமலும் இருந்திருக்கலாம்'' என்று தெரிவித்திருக்கிறது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்தி அதில் எவராவது குற்றம் இழைத்துள்ளார்கள் என்று நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு 'எதிராக வழக்குத் தொடர்ந்து தண்டனை வழங்குவது அரசின் கடமை என்று ஆணைக்குழு சுட்டிக்காட்டி உள்ளது.

### மருத்துவமனைகள் மீதான தாக்குதல்

இறுதிச் சண்டைகளின்போது மருத்துவமனைகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்பதை ஆணைக்குழு ஏற்றுக் கொண்டுள்ளது. எனினும் அந்தத் தாக்குதலை புலிகளா படையினரா மேற்கொண்டனர் என்பதை தெளிவுபடுத்த முடியாத இக்கட்டு இருப்பதாகவும் கூறுகின்றது. ஆணைக்குழு முன் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் நடந்த சம்பவங்கள் குறித்து குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறும் அறிக்கை, ''இத்தகைய பின்னணியில் வலுவான சாட்சியத்தின் மூலம் எவர் இந்தச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக இருந்தார்கள் என்று தீர்மானிப்பது பெரும் சவால்'' என்றும் தெரிவித்துள்ளது.

இதற்கான முக்கிய காரணமாக சாட்சியமளித்தவர்கள் மருத்துவமனைகள் மீது வீழ்ந்து வெடித்த ஷெல்கள் இராணுவத்தினர் பக்கம் இருந்து வந்தனவா என்பதை எந்த ஒரு சாட்சியாலும் உறுதியாகத் தெரிவிக்க முடியவில்லை என்பதை அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. புதுமாத்தளன் வைத்தியசாலை மீது ஒரு தடவை புலிகள் தவறுதலாக ஷெல் தாக்குதல் நடத்திவிட்டுப் பின்னர் மன்னிப்புக் கேட்டார்கள் என்று சாட்சியமளித்த முன்னாள் போராளி ஒருவர் தெரிவித்திருந்தார் என்பதும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மருந்து, உணவு தட்டுப்பாடு

2009 பெப்ரவரி மாதம் வரைக்கும் வன்னி மக்களுக்குத் தேவையான உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் அனுப்பப்பட்டன என்று கூறும் அறிக்கை, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதத்தின் அரைவாசிக் காலத்தில் மட்டுமே உணவு, மருந்து விநியோகம் குறைவாக இருந்தது என்று குறிப்பிடுகிறது.

ஆபத்தான சூழல், உணவு மற்றும் மருந்து அனுப்புவதில் இருந்த கஷ்டங்கள், புலிகள் உணவை அபகரிக்கும் நிலைமை என்பவற்றுக்கு மத்தியிலும் அரசு சிறப்பாக மக்களுக்கு அவற்றை வழங்கி வந்தது என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### மக்கள் தொகை மதிப்பீடு

போர்ப் பகுதிக்குள் சிக்கிக் கொண்ட மக்களின் எண்ணிக்கையை அரசு ஒருபோதும் குறைத்து மதிப்பிடவே இல்லை என்று அறிக்கை வாதாடுகிறது. ''சர்வதேச அமைப்புக்களான ஐ.சி.ஆர்.சி, உலக உணவுத் திட்டம் என்பவற்றுடன் இணைந்து அரசு மேற்கொண்ட முயற்சிகளை அவதானிக்கும்போது பாதுகாப்பு வலயத்தில் சிக்கியிருந்த பொதுமக்களின் எண்ணிக்கையை குறைவாக மதிப்பீடு செய்வதற்கு அரசு முயற்சிக்கவில்லை என்பது ஆதாரபூர்வமாகப் புலனாகிறது. பொதுமக்களைப் பசிப்பிணியில் தத்தளிக்கச் செய்யும் இன்னுமொரு வகையான போரை அரசு முன்னெடுக்கவில்லை என்பதையும் இதன்மூலம் நாம் கண்டறிந்தோம்'' என்று அறிக்கை கூறுகின்றது.

அதேவேளை, மருந்து விநியோகத்தில் பற்றாக்குறை ஏற்பட்டது என்பதை அறிக்கை ஏற்கிறது. எனினும் போர் நடக்கும் பகுதியில் இத்தகைய நிலை ஏற்படுவது சகஜமே என்று அறிக்கை அதனை நியாயப்படுத்தவும் செய்கிறது. எப்படி இருப்பினும் இது மருந்துப் பற்றாக்குறை குறித்து திட்டவட்டமாகக் கருத்துச் சொல்ல ஆணைக்குழுவுக்கு ஆதாரங்கள் போதவில்லை என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கைதாகிக் காணாமற்போனோர்

படையினரிடம் சரணடைந்த பின்னர் காணாமல் போனவர்கள் தொடர்பில் அரசு விசாரணை நடத்த வேண்டும் என்று அறிக்கை கேட்டுள்ளது.

இதுபற்றிய விசாரணையின் போது படையினர் எவராவது தவறிழைத்திருந்தால் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து தண்டிக்க வேண்டும் என்றும் பரிந்துரை செய்துள்ளது. ''ஒரு சிலரின் தவறான செயற்பாட்டினால் இராணுவத்தின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட இடமளிக்கலாகாது'' என்றும் அறிக்கை தெரிவிக்கிறது.

### மற்றொரு ஆணைக்குழு

அரச படைகள் நல்ல முன்னுதாரண அடிப்படையில் செயற்பட்ட போதிலும், பெருமளவிலான காணாமற்போதல்கள், கடத்தப்படுதல் மற்றும் சட்டவிரோத தடுத்து வைப்புக்கள் இடம் பெற்றுள்ளதாக ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இவை குறித்து விசாரிக்க காணாமற்போனவர்களுக்கான ஒரு சிறப்பு ஆணைக்குழு அமைக்கப்பட்டு, சூத்திரதாரிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் ஆணைக்குழு பரிந்துரைக்கிறது.

இந்த விவகாரங்கள் தொடர்பில் சாட்சியமளித்த சிலர் ஈ.பி. டி.பி, கருணா குழு, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் ஆகிய அமைப்புக்கள் மீது ஆள்கள் கடத்தப்பட்டமை குறித்து முறைப்பாடு செய்துள்ளதாகவும். ஆனால், அந்த அமைப்புக்கள் அவற்றை மறுத்துள்ளதாகவும் கூறியுள்ள ஆணைக்குழுவின் அறிக்கை, சட்டவிரோத ஆயுதக்குழுக்கள் குறித்த மேலதிக விசாரணைகள் தேவை என்றும் குறிப்பிட்டுள்ளது.

காணாமற் போனவர்களை கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்றும், பயங்கரவதாத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நீதிமன்றங்களில் குற்றஞ் சுமத்தப்படாமல், பல வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் விவகாரங்களை ஆராய சுயாதீன ஆலோசனைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்றும் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

பிரிட்டனின் சானல்-4 தொலைக்காட்சியால் வெளியிடப்பட்ட இலங்கையின் கொலைக்களம் ஆவணப்படத்தின் நம்பகத்தன்மை குறித்து ஆணைக்குழு கேள்வி எழுப்பியுள்ளது.

### போர்ச் சட்டங்களில் மாற்றம்

சர்வதேச போர்ச் சட்டங்கள் குறித்து தனது பரிந்துரையில் குறிப்பிட்டுள்ள நல்லிணக்க ஆணைக்குழு, தற்போதைய சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள், அரசுகளுக்கும், அரசு அல்லாத போராட்டக் குழுக்களுக்கும் இடையிலான போர்களுக்கு உகந்த வகையில் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்று குறிப்பட்டுள்ளது.

அரசு அல்லாத குழுக்கள் எந்த விதமான விதிகளையும் பின்பற்றாத காரணத்தால், அதற்கேற்றவாறு சர்வதேச சட்டங்களை மாற்றுவது தொடர்பில் சர்வதேச சமூகம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அது கூறியுள்ளது.

### இராணுவ தலையீடு

வடமாகாணத்தில் சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் இராணுவம் தலையீடு செய்வதாக அடிக்கடி வரும் குற்றச்சாட்டுக்கள் குறித்து கருத்துக் கூறியுள்ள ஆணைக்குழு, சிவில் நடவடிக்கைகளில் இராணுவத் தலையீடு இல்லாது செய்யப்பட வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது.

### அதிகாரப் பகிர்வு தேவை

தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் தற்போதைய ''வன்செயல்கள், சந்தேகங்கள், தாம் பாரபட்சமாக நடத்தப்படுவதான உணர்வு'' ஆகியவற்றை நீக்க, மக்களை மையமாகக் கொண்ட அதிகாரப் பகிர்வு முறைமை ஒன்று கொண்டுவரப்பட்டு, அதன் மூலம் உள்ளூராட்சி சபைகள் பலப்படுத்தப்பட வேண்டும். தற்போதைய மாகாண சபைகள் முறை திருத்தப்பட்டு, மத்தியில் அதிகாரம் பகிரப்பட வேண்டும் என்றும் நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

வெளியுலகுக்கு வெளிப்படையாகத் தெரியும் வகையில் அதிகாரங்கள் பரவலாக்கப்படுவதில் முன்னேற்றம் காணப்பட வேண்டும் என்றும் அது குறிப்பிட்டுள்ளது. (உ)

---

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கக் கூறப்படும் லலித்குமார வீரராஜ் சட்டவிரோதமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவிடம் அவரின் பெற்றோர் நேற்று முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பாக நாம் இலங்கையர் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

லலித், குகன் ஆகியோர் காணாமற் போகவில்லை. அவர்கள் இருக்கின்றனர் என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அவர்கள் நீதிமன்றின் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படுவர் என்றும் கூறியுள்ளார்.

அப்படியானால் தடுத்து வைக்கப்பட்டுள்ள சகோதரர்களைப் பார்வையிடுவதற்கு அவர்களின் பெற்றோருக்கு அனுமதி வழங்கவேண்டியது அரசின் கடமையாகும்.

இந்தக் கோரிக்கையை மனித உரிமை ஆணைக்குழுவிடம் லலித்தின் பெற்றோர் கையளித்தனர் - என்றுள்ளது. (ஒ-சி)

---

## காலத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாம். எந்த அடிப்படையிலானவற்றை முன்னெடுக்கலாம் என்பது பற்றி நாம் அப்போது தீர்மானத்தை எடுக்கலாம்.

ஐக்கிய நாடுகள் சபை கூட பின்னர் இதனை அவர்களின் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளலாம். எம்மைப் பொறுத்தவரை எமது நாட்டுக்குத் தேவையான விடயங்களை இந்த அறிக்கையின் சிபாரிசுக்கமைய செய்ய வேண்டுமெனக் கருதுகிறோம். எமது நாட்டை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகள் பற்றியே நாம் முதலில் சிந்திக்கவேண்டும் - என்றார் பஸில். (ஒ-சி)

**O/L, A/L தகைமை உடையவர்களுக்கு ஓர் அரிய வேலைவாய்ப்பு**

நீங்கள் 18-30 வயதுக்கு உட்பட்டவரா? சரியான தீர்மானம் எடுக்க கூடியவரா?அப்படியானால் எமது நிறுவனத்துக்கு Supavicer, Assistant Manager ஆகிய வெற்றிடங்களுக்கு ஆள்கள் தேவை.
பயிற்சிக் காலத்தில் ரூபா 15000-20000 வரை சம்பளம் கொடுக்கப்படும். பயிற்சி முடிவில் ரூபா 40000 சம்பளத்துடன் நிரந்தர வேலைவாய்ப்பு கொடுக்கப்படும்.
தொடர்பு: A.Vilsan 0770258618

**வேலைகள் செய்து கொடுக்கப்படும்**

வயரிங், பிளம்பிங்(பைப் லைனிங்), பெயின்டிங் ஆகிய வேலைகள் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு:-0775716365

**மின்சாரக் கட்டண நிலுவைகளை செலுத்துதல்**

**சகல மின் பாவனையாளர்களுக்கான அறிவித்தல்**

யாழ் குடாநாடு முழுவதும் உள்ள இலங்கை மின்சாரசபையின் பாவனையாளர்கள் (அரச மற்றும் தனியார்) தங்களது மின்சார நிலுவைகளை 23.12.2011க்கு முன்பாகச் செலுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். செலுத்தத் தவறும் பட்சத்தில் எந்தவித முன்அறிவித்தலுமின்றி மின் துண்டிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.
மின்பாவனையாளர்களுக்கு வசதியாக மின்பட்டியல் பணம் செலுத்தப்பட்ட உடன் வரவு வைப்பதற்கு வசதியாக இல. 500, கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள மின்சார சபை அலுவலகத்திலும், மக்கள் வங்கி (ஸ்ரான்லி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி கிளைகளிலும்) அமைந் துள்ள எமது கருமபீடங் களில் பணத்தை செலுத்த முடியும்.
மின்னிணைப்பு துண்டிக்கப்படும் பட்சத்தில் மீள மின்னிணைப்பு வழங்குவதற்கு மின்பட்டியல் நிலுவையுடன் மேலதிகமாக ரூபா 800.00 இனை மீளிணைப்பு கட்டணமாக மின்சிட்டையில் செலுத்தப்பட வேண்டும்.

யாழ். பிரதேச மின் பொறியியலாளர்,
யாழ்ப்பாணம்.
(C/6930)(6,8,9)

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பிரச்சினையைப் பார்த்து தமிழர்களின் காணிகள் என்று சொல்வது புலிகளின் பிரச்சினையைப் போன்றதாகும்.

'பிம்சவிய' என்ற திட்டத்தின் ஊடாகத் தமிழர்களின் காணிப்பிரச்சினைகளைத் தீர்க்க நாம் நடவடிக்கை எடுத்தோம்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவரது இரண்டு காணிகளின் பிரச்சினை தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்தார். இதற்கு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பால் தமிழர்களின் காணிப்பிரச்சினையைத் தீர்க்கும் எமது நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டது.

ஒரு தனிநபரின் செயற்பாட்டால் ஒரு சமூகத்தின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் போய்விட்டன.

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட இலங்கை முழுவதும் உள்ள காணிப்பிரச்சினைகளைத் தீர்க்க 100 வருடங்கள் செல்லும் என்று உத்தியோகத்தர்கள் கூறினர். ஆனால், நாம் 10 வருடங்களுக்குள்ளேயே இப்பிரச்சினைகளைத் தீர்க்கத் திட்டமிட்டுள்ளோம்.

பிம்சவிய திட்டத்தின் கீழ் இரண்டு பிரிவுகள் உருவாக்கப்பட்டு அவற்றின் கீழ் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். நில அளவையாளர்களை ஊக்கப்படுத்தி காணிகளை அளக்கத் திட்டமிட்டுள்ளோம்.

காணி விடயத்தில் எவருமே வெற்றி கொள்ள முடியாத பரிமாண சட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும். நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளில் 75 வீதமானவை காணிப்பிரச்சினைகளுடன் தொடர்புடையவையாகும் - என்றார்.

(ஒ-சி)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி தங்கையா



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், 1ஆவது நாவலடி ஒழுங்கை, மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தங்கையா நேற்று (16.12.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-கமலாதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரன்-மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், கெங்காலட்சுமியின் அன்புக் கணவரும், சுஜாதா, சுஜீவன் (ஹொலண்ட்), காலஞ்சென்ற சுதர்சன் மற்றும் கீர்த்திகா (கீர்த்தா), கார்த்திகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.12.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1 ஆவது நாவலடி லேன்,
மானிப்பாய்.

தகவல்:
றெஜி (மருமகன்)


இந்த வருடம் O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான விசேட

O/L Offer



| | |
|---|---|
| Intel Pentium Core 2 Duo | (3 Year) |
| Intel Chip Mother Board | (3 Year) |
| 2 GB DDR3 RAM | (3 Year) |
| 80 GB Sata HDD | (1 Year) |
| DVD Writer Lite on | (1 Year) |
| ATX Casing | (1 Year) |
| 16" LCD HP | (3 Year) |
| Keyboard | (1 Year) |
| Mouse | (1 Year) |
| UPS DCP | (1 Year) |

இச் சலுகை 7 நாட்கள் மட்டும்

Just Pay 15,000/=

Marsha Systems (PVT) Ltd
யாழ்ப்பாணம் 74, Kannathiddy Road, Jaffna. T.P No :- 021 222 9418
நெல்லியடி MMV Road, Nelliyady. T.P No :- 021 492 3561
வல்வெட்டித்துறை 10, Modern Market, V.V.T T.P No :- 021 492 3404
கிளிநொச்சி 74, A9 Road, Ananthapuram T.P No :- 021 492 3525

எடிசன் கல்லூரி,
கரடிப்போக்கு
அண்மை,
கிளிநொச்சி
G.A.Q, BA புதிய
வகுப்புகள்
ஆரம்பம்
(17.12.2011)
சனிக்கிழமை
பி.ப. 2.30 மணி.

SUPER QUALITY No.01 Colombo

மலிவு விலையில் கிடைக்கும்

| | | |
|---|---|---|
| 120 Page | ~~45~~/- | 30/- |
| 160 Page | ~~60~~/- | 40/- |
| 200 Page | ~~70~~/- | 50/- |

Ex-Books பிள்ளையார் அச்சகம், நல்லூர்.

Deutsch, Dutch, French, Italian

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ். கிளையில்
தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும்
நெதர்லாந்து Dutch, French, Italian வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

Vivekananda Academy
(Centre For International Language Studies)
குறிப்பு: அனைத்து மொழிகளுக்குமான புதிய வகுப்புக்கள் திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.
முற்றிலும் நவீன வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.
எமது புதிய முகவரி: 221/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்.
GOV.Reg.No. W/A 76795 T.P.: 0774842464, 0213216928, 0779927117

விற்பனையாகின்றன

- திறந்த பல்கலைக்கழக சட்டமாணி நுழைவுப்பரீட்சை வழிகாட்டி-250/= (கடந்தகால முக்கிய வினாத்தாள்களின் விடைகளும் மிக அண்மைக்கால விடயங்களும்)
- இலங்கை நிர்வாக சேவை (S.L.A.S) வழிகாட்டி விலை 600/= தொகுப்பு: த.தவசேகர்

தொடர்பு:0754164564

விற்பனைக்கு

TOYOTA DOLPHIN VAN JC-xxxx
YEAR 2000, நீளமானது
நான்கு கதவு, Manual, D/AC, A/Seat நல்ல நிலையில் உள்ளது.
தொடர்புகளுக்கு: 0775166621, 0770500388

Study in the UK
IELTS EACH BAND-4.0
போதுமானதாகும்

JAN/FEB INTAKES
IN PROGRESS

G.C.E. (O/L) அடிப்படைத் தகுதியுடன்
கல்லூரிகளில் அனுமதியைப்
பெற்றுக்கொள்ள முடியும்.

SETTLEMENT VISA -
(கணவன் - மனைவி) மூலம் UK
செல்பவர்களுக்கான வீசா தொடர்பில்
ஆவணங்கள் வெற்றிகரமாகச்
செய்து தரப்படும்.

TOURIST VISA
உட்பட அனைத்து நாடுகளுக்குமான
வீசாவுக்களுக்குமான ஆலோசனைகளும்,
ஆவணங்களைத் தயார்படுத்துதல் தொடர்பில்
நிபுணத்துவமான சேவையினைப்
பெற்றுக்கொள்ளலாம்.

100% வீசா உத்தரவாதம்

100% Guaranty

Eisc EXPRESS
INTERNATIONAL STUDIES & CONSULTANTS

30-1/14, W.A.De Silva Mawatha Colombo-06
(Above Hotel Green Palace)
Tel: 2500207 E-mail: eisc_2007@yahoo.com
Robin-0777 222 422 Selva-0714 299 935
Web: www.expresslanka.com

விடுதலைப் பெருவிழா

வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே,நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்,
நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். (மத்தேயு 11:28)

FREE

பாவத்திலிருந்து!!! சாபத்திலிருந்து!!!
தீராத நோயிலிருந்து!!! பில்லி -சூனியக் கட்டிலிருந்து!!!
பிசாசின் பிடியிலிருந்து!!! அடிமைத்தனத்திலிருந்து!!!

FREE

இயேசு விடுதலை கொடுக்கிறார்...
இன்று (17.12.2011) சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு
ஒளிவிழா நிகழ்வும் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். பிரவேசம் இலவசம்

இடம்: நாற்சதுர சுவிசேஷ சபை. முத்திரைச் சந்தி, நல்லூர்.
காலம்: 17,18 மார்கழி 2011
நேரம் : மாலை 4.00 மணி

இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை,
இல.673, பருத்தித்துறை வீதி , நல்லூர்.
தொலைபேசி: 0212226730

(சி/6909)(3.6.7)

யாழ் மண்ணில்
முதல் முறையாகப் புதியதோர் அறிமுகம்



இங்கிலாந்திலிருந்து தருவிக்கப்பட்ட முற்று முழுதாகக் கணினிமயமான பொறிமுறையில்
மிக நுட்பமாகக் கண் பரிசோதனை செய்து சில நிமிடங்களில் உங்கள் கண்களுக்கு ஒளி தருகின்றோம்

விழி உங்களிடம் அதன் ஒளி எங்களிடம்

நவீன முறையில் பற்கள் கட்டியும்,
மிதப்புப் பற்களுக்கான கிளிப்புகளும்
செய்து கொடுக்கப்படும்.

மூக்குக் கண்ணாடி கொள்வனவு செய்பவர்களுக்குச் சன்கிளாஸ் ஒன்று இலவசமாக வழங்கப்படும்.

தொ.பேசி: 021 222 3461

துஷா பல்மூக்குக் கண்ணாடியகம்
544, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.